# தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு 2017–2018

## மானியக் கோரிக்கை எண். 32

டாக்டர் நிலோபர் கபில்
தொழிலாளர் நலத்துறை அமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2017

# அட்டவணை


| எண் | பொருளடக்கம் | பக்க எண் |
|---|---|---|
| | **1. தொழிலாளர் துறை** | |
| 1.1. | செயல்பாடுகள் | 2 |
| 1.2. | நிர்வாக அமைப்பு | 3 |
| 1.3. | தொழில் உறவுகள் | 4 |
| 1.4. | சமரசம் | 4 |
| 1.5. | தொழிலாளர் நீதிமன்றங்கள் மற்றும் தொழிலாளர் தீர்ப்பாயங்கள் | 5 |
| 1.6. | தொழிலக வேலைவாய்ப்பு (நிலையாணைகள்) சட்டம், 1946 | 7 |
| 1.7. | தொழிற்சங்கங்கள் சட்டம், 1926 | 7 |
| 1.8. | தொழிலாளர் சட்டங்களின் அமலாக்கம் | 8 |
| 1.9 | ஒழுங்குமுறை சட்டங்களின் அமலாக்கம் | 8 |
| 1.10. | இதர ஒழுங்குமுறை சட்டங்கள் | 15 |
| 1.11. | ஊதியம் தொடர்புடைய சட்டங்கள் | 16 |
| 1.12. | சமூக பாதுகாப்பு சட்டங்கள் | 16 |

| எண் | பொருளடக்கம் | பக்க எண் |
|---|---|---|
| 1.13. | குழந்தை தொழிலாளர் முறை அகற்றுதல் | 19 |
| 1.14. | நல வாரியங்கள் மற்றும் சமூகப் பாதுகாப்பு திட்டங்கள் | 28 |
| 1.15. | நுகர்வோர் பாதுகாப்பு | 39 |
| 1.16. | தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம் | 43 |
| 1.17. | தமிழ்நாடு கட்டுமான கழகம் | 45 |
| 1.18. | 2016–17–ஆம் ஆண்டின் சாதனைகள் | 46 |
| **2. தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம்** | | |
| 2.1. | நிர்வாக அமைப்பு | 50 |
| 2.2. | தொழிற்சாலைகள் சட்டம் மற்றும் இதர தொழிலாளர் நல சட்டங்களின் அமலாக்கம் | 51 |
| 2.3. | பட்டாசு தொழிற்சாலை ஆய்வுகள் | 53 |
| 2.4. | பட்டாசு தொழிற்சாலைக்கான சிறப்பு நடமாடும் கண்காணிப்புக் குழு | 55 |
| 2.5. | பட்டாசு தொழிலாளர்களுக்கான பயிற்சி மையம் | 56 |
| 2.6. | தொழிற்சாலைகளில் குழந்தை தொழிலாளர் முறையை அகற்றுதல் | 57 |

| எண் | பொருளடக்கம் | பக்க எண் |
|---|---|---|
| 2.7. | புகார்களின் மீதான விசாரணைகள் | 58 |
| 2.8. | அபாயகரமான செயல்முறைகள் உள்ள தொழிற்சாலைகள் | 58 |
| 2.9. | மனை மதிப்பீட்டுக் குழு | 60 |
| 2.10. | கட்டடம் மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் (பணி முறைப்படுத்துதல் மற்றும் பணி நிலைமைகள்) சட்டம், 1996 மற்றும் தமிழ்நாடு கட்டடம் மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் (பணி முறைப்படுத்துதல் மற்றும் பணி நிலைமைகள்) விதிகள், 2006 மற்றும் அதனைச் சார்ந்த தொழிலாளர் சட்டங்களின் அமலாக்கம் | 61 |
| 2.11. | கட்டுமான தொழிலாளர்கள் பாதுகாப்பிற்கு 2016–17–ல் எடுக்கப்பட்ட சிறப்பு முயற்சிகள் | 64 |
| 2.12. | தொழிற்சாலைகளில் உடல்நலம் மற்றும் பாதுகாப்பு மேம்பாடு குறித்த செயல்பாடுகள் | 65 |
| 2.13. | அழுத்தக்கலன் பாதுகாப்பினை உறுதி செய்தல் | 69 |

| எண் | பொருளடக்கம் | பக்க எண் |
|---|---|---|
| 2.14. | தொகுப்பு தனிநபர் விபத்து காப்பீட்டுத் திட்டம் | 70 |
| 2.15. | பாதுகாப்பு விருதுகள் வழங்கும் திட்டம் | 71 |
| 2.16. | சிறப்பு முயற்சிகள் – **2016–17** | 73 |
| | **3. வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை** | |
| | **வேலைவாய்ப்பு பிரிவு** | |
| 3.1. | நிர்வாக அமைப்பு | 78 |
| 3.2. | மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களின் பணிகள் | 81 |
| 3.3. | பதிவு மற்றும் பணியமர்த்தல் | 82 |
| 3.4. | தொழில்நெறி வழிகாட்டுதல் | 83 |
| 3.5. | பயிற்சி வகுப்புகள் (தன்னார்வ பயிலும் வட்டம்) | 85 |
| 3.6. | தேசிய தொழில்நெறி சேவை | 87 |
| 3.7. | தனியார்துறை பணியமர்த்தும் உதவி பிரிவு மற்றும் வேலைவாய்ப்பு முகாம்கள் | 89 |

| எண் | பொருளடக்கம் | பக்க எண் |
|---|---|---|
| 3.8. | வேலைவாய்ப்பற்றோருக்கான உதவித்தொகை | 90 |
| 3.9. | மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு பிரிவு | 92 |
| 3.10. | ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான பயிற்றுவிப்பு மற்றும் வழிகாட்டும் மையங்கள் | 94 |
| 3.11. | உதகமண்டலத்திலுள்ள பழங்குடியினருக்கான சிறப்பு தொழில்நெறி வழிகாட்டும் மையம் | 95 |
| 3.12. | சாதனைகள் – 2016–17 | 96 |
| **பயிற்சி பிரிவு** | | |
| 3.13. | நிர்வாக அமைப்பு | 103 |
| 3.14. | நீண்டகால பயிற்சிகள் | 103 |
| 3.15. | இணையதள கலந்தாய்வுகள் மூலம் தொழிற்பயிற்சி நிலையங்களில் சேர்க்கை | 108 |
| 3.16. | தொழிற்பள்ளிகள் | 109 |
| 3.17. | மாநில தொழிற்பயிற்சி குழுமம் (SCVT) | 110 |
| 3.18. | குறுகியகால திறன் பயிற்சி | 110 |

| எண் | பொருளடக்கம் | பக்க எண் |
|---|---|---|
| 3.19. | பிற திட்டங்கள் | 111 |
| 3.20. | தொழிற்பழகுநர் பயிற்சி | 114 |
| 3.21. | தொழில் தேர்வுகள், தர மதிப்பீடு மற்றும் சான்றளிப்பு | 119 |
| 3.22. | இணையதளம் மூலம் சான்றிதழ் உண்மைத்தன்மையை சரிபார்த்தல் | 123 |
| 3.23. | மாநில தேர்வுக்குழுமம் | 124 |
| 3.24. | தொழிற்பயிற்சி நிலைய பயிற்சியாளர்களுக்கான அரசு நலத்திட்டங்கள் | 124 |
| 3.25. | சிறப்புத் திட்டங்கள் – 2016–17 | 125 |
| **4. தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம்** | | |
| 4.1. | மாநில ஒருங்கிணைப்பு முகமை | 129 |
| 4.2. | தரம் மற்றும் நெறிமுறைப்படுத்துதல் | 130 |
| 4.3. | திறன் சான்றளித்தல் | 131 |
| 4.4. | தேசிய திறன் தகுதி கட்டமைப்பை **(NSQF)** செயல்படுத்தும் மைய குழு **(Core Committee)** | 132 |

| எண் | பொருளடக்கம் | பக்க எண் |
|---|---|---|
| 4.5. | திறன் பயிற்சிக்காக கண்டறியப்பட்ட முக்கிய துறைகள் | 133 |
| 4.6. | திறன் மேம்பாட்டில் பொது மற்றும் தனியார் துறை பங்களிப்பு | 134 |
| 4.7. | திறன் முகாம் வாயிலாக திறன் பயிற்சிக்கு ஆள் சேர்த்தல் | 134 |
| 4.8. | அனுபவத்தின் மூலம் பெற்ற திறமையை அங்கீகரித்தல் (Recognition of Prior Learning - RPL) | 135 |
| 4.9. | புதிய முயற்சிகள் | 137 |
| 4.10. | ராஷ்டிரிய உச்சாதர் சிக்ஷா அபியான் (RUSA) திட்டத்துடன் இணைந்து கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாணவ மாணவியருக்கு திறன் பயிற்சி வழங்குதல் | 144 |
| **5. அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்** | | |
| 5.1 | பங்கு மூலதனம் | 146 |
| 5.2. | பதிவு | 146 |
| 5.3. | பணியமர்த்தல் | 147 |
| 5.4. | அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தின் நடவடிக்கைகள் | 147 |

| எண் | பொருளடக்கம் | பக்க எண் |
|---|---|---|
| 5.5. | நிதி விவரங்கள் | 148 |
| 5.6. | சாதனைகள் | 149 |
| | **6. மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்ககம் (தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்டம்)** | |
| 6.1. | திட்டத்தின் நிதி ஆதாரம் | 152 |
| 6.2. | திட்டத்தில் சேர்வதற்கான தகுதிகள் | 152 |
| 6.3. | தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்ட நிர்வாக அமைப்பு | 153 |
| 6.4. | பரவலாக உள்ள தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள் மற்றும் மருந்தகங்கள் | 154 |
| 6.5. | தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்டத்தின் கீழ் இயங்கும் ஆயுஷ் (AYUSH) பிரிவுகள் | 155 |
| 6.6. | தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்டத்தின் பயன்கள் | 156 |
| 6.7. | மருத்துவமனை மேம்பாட்டுக் குழு | 162 |
| 6.8. | காப்பீட்டு பயனாளிகள் தனியார் மருத்துவமனைகளில் செய்துகொண்ட மருத்துவ செலவினை திரும்ப வழங்கல் | 163 |
| 6.9. | தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்ட விரிவாக்கம் | 164 |

# தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை

## 1. தொழிலாளர் துறை

தொழிலாளர்கள் பணிபுரியும் இடத்தில் காணப்படும் நிலைமைகளை ஒழுங்குபடுத்துவதன் மூலமாக ஒவ்வொரு தொழிலாளிக்கும் பாதுகாப்பான மற்றும் இணக்கமான பணி சூழலை உருவாக்கிட தொழிலாளர் துறையானது உறுதி பூண்டுள்ளது. தொழிலாளர்களின் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் பொருளாதார நலன் ஆகியவையே மாநிலத்தின் தொழில் உற்பத்தி மற்றும் பொருளாதார சமூக முன்னேற்றத்தின் மீது நல்விளைவை ஏற்படுத்தும் என்பதில் அரசு நம்பிக்கை கொண்டுள்ளது. புகார்கள் அடிப்படையிலான ஆய்வுகள் மேற்கொள்ளுதல், இணையதளத்தின் வாயிலாக அறிக்கைகளை தாக்கல் செய்ய தேவையான படிவங்களை எளிமைப்படுத்தி ஆவணங்களை பராமரிப்பதிலுள்ள சிரமங்களைக் குறைத்தல், தொழில் தொடங்குவதில் எளிய நடைமுறைகளை (Ease of Doing Business) ஊக்குவித்தல் ஆகியவற்றோடு வேலையளிப்பவர் மற்றும் தொழிலாளர்களுக்கிடையே தொழில் நல்லுறவை மேம்படுத்துவதிலும் தொழிலாளர் நல சட்டங்களை

அமல்படுத்துதல், தொழிற்தாவாக்கள் மீது ஒப்பந்தங்கள் ஏற்படுத்துதலில் தொழிலாளர் நலனைக் காத்து, தொழிலுக்கு இணக்கமான சூழலை உருவாக்குவதிலும் இத்துறை நம்பிக்கை கொண்டுள்ளது. கடினமான தொழில்களில் ஈடுபட்டு வரும் மாநிலம் விட்டு மாநிலம் இடம் பெயரும் கட்டுமான தொழிலாளர்கள் உள்ளிட்ட தற்காலிக தொழிலாளர்களின் பாதுகாப்பு மற்றும் நலனை உறுதிப்படுத்துவதும் இத்துறையின் முக்கியமான பணி ஆகும்.

## 1.1. செயல்பாடுகள்

தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாத்திட பல்வேறு தொழிலாளர் சட்டங்களை அமல்படுத்துதல், தொழில் நல்லுறவை மேம்படுத்தும் பொருட்டு தொழிற்தாவாக்களுக்கு தீர்வளித்தல், குழந்தைகளின் உரிமைகளைப் பாதுகாக்க குழந்தை தொழிலாளர் முறையினை அகற்றுதல், நுகர்வோர் உரிமைகளைப் பாதுகாக்க சட்டமுறை எடையளவு சட்டத்தினை செயல்படுத்துதல் மற்றும் அமைப்புசாரா பிரிவினருக்கும் சேர்த்து சமூக பாதுகாப்பு திட்டங்களை செயல்படுத்துதல் ஆகியவை இத்துறையின் முதன்மையான செயல்பாடுகள் ஆகும்.

தொழில் தொடங்குவதில் எளிய நடைமுறைகளை மேம்படுத்தும் வகையில் பல்வேறு தொழிலாளர் சட்டங்கள் மற்றும் சட்டமுறை எடையளவு சட்டம் ஆகியவற்றின் கீழ் நேரடியாக பதிவு செய்தல், உரிமம் வழங்குதல் மற்றும் அறிக்கைகள் தாக்கல் செய்தல் ஆகிய வசதிகளை பிரத்தியேக இணையதளம் (Online Portal) வாயிலாக வழங்கும் புதிய முயற்சியில் இத்துறை ஈடுபட்டுள்ளது.

## 1.2. நிர்வாக அமைப்பு

தொழிலாளர் துறையானது, தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாத்திடவும் தொழிலாளர் சட்டங்களை அமல்படுத்திடவும் பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்திடவும் தொழிலாளர் ஆணையர் தலைமையில் 568 அலுவலர்கள் மற்றும் 2180 பணியாளர்களைக் கொண்டு இயங்கி வருகிறது. இத்துறையில் ஒரு கூடுதல் தொழிலாளர் ஆணையர், 12 தொழிலாளர் இணை ஆணையர்கள், 16 தொழிலாளர் துணை ஆணையர்கள், 24 தொழிலாளர் உதவி ஆணையர்கள், தொழிலாளர் அலுவலர் நிலையிலான 100 அலுவலர்கள், 70 தொழிலாளர் துணை ஆய்வர்கள், 220 தொழிலாளர் உதவி ஆய்வர்கள், 20 புள்ளி விவர

ஆய்வர்கள், **101** முத்திரை ஆய்வர்கள், இரண்டு உதவி மருத்துவர்கள் (தோட்டங்கள்), ஒரு கணக்கு அலுவலர் மற்றும் ஒரு மக்கள் தொடர்பு அலுவலர் ஆகியோர் உள்ளனர்.

## 1.3. தொழில் உறவுகள்

தொழிலாளர்களின் குறைகளைக் கண்டறிந்து பணியிடத்திலேயே அவற்றைத் தீர்த்து வைப்பதன் மூலம் மனித நேர இழப்பைத் தவிர்த்தல் மற்றும் தொழிலாளர்களுக்கு மன நிறைவை ஏற்படுத்தி அவர்கள் துணையுடன் தொழில் உற்பத்தியைப் பெருக்குதல் ஆகியவையே இணக்கமான தொழில் நல்லுறவின் அடிப்படையாக அமைந்துள்ளது. பல்வேறு பணிவகைகளில் ஈடுபட்டுள்ள இம்மாநிலத்தைச் சார்ந்த மற்றும் பிற மாநிலங்களைச் சார்ந்த வேறுபட்ட தன்மையுடைய தொழிலாளர்களுக்கும் வேலையளிப்பவர்களுக்கும் இடையே எழும் தொழிற்தாவாக்களை இருதரப்பினரும் பயன்பெறும் வகையில் பாகுபாடின்றி தீர்த்து வைப்பதில் சமரச அமைப்பு முனைப்பு கொண்டுள்ளது.

## 1.4. சமரசம்

சமரச பணியானது சிறந்த தொழில் நல்லுறவிற்கு அடித்தளமாகவும், தொழிற்தாவாக்களுக்கு பயனுள்ள தீர்வுகள்

காண்பதற்கு உதவிகரமாகவும் அமைகிறது. தொழிற்தகராறுகளை ஆய்வு செய்து சமரச முறையில் சுமுகமாக தீர்த்து வைப்பதற்காக 1947–ம் ஆண்டின் தொழிற்தகராறுகள் சட்டம் இயற்றப்பட்டது. நிர்வாகத்தினருக்கும் தொழிலாளர்களுக்கும் இடையே ஏற்படும் தொழிற்தகராறுகளை பாகுபாடின்றி இணக்கமாக தீர்த்து வைத்து தொழில் அமைதி மற்றும் நல்லுறவு ஏற்படுத்துவதில் தொழிலாளர் துறையின் சமரச அலுவலர்கள் முனைப்புடன் ஈடுபடுகின்றனர். இந்த ஆண்டில் எழுப்பப்பட்ட 4,592 தொழிற்தாவாக்களில் சுமார் 3,645 வழக்குகள் தீர்த்து வைக்கப்பட்டு, அவற்றுள் 1,763 வழக்குகள் சுமுகமான முறையில் முடிக்கப்பட்டுள்ளன. தொழிற்சாலைகளில் ஏற்படும் பதற்றமான பிரச்சனைகளை முடிவுக்கு கொண்டுவர சமரச அலுவலர்கள் உடனடி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதன் மூலம் 15 வேலை நிறுத்தங்கள் மற்றும் இரண்டு கதவடைப்புகள் சாமர்த்தியமாக தவிர்க்கப்பட்டுள்ளன.

### 1.5. தொழிலாளர் நீதிமன்றங்கள் மற்றும் தொழில் தீர்ப்பாயங்கள்

தொழிலாளர் நீதிமன்றங்கள் மற்றும் தொழில் தீர்ப்பாயங்கள் போன்ற சிறப்பு நீதி அமைப்புகள், தொழிற்தாவா சட்டம், 1947–ன் இரண்டாம் அட்டவணையில்

குறிப்பிடப்பட்டுள்ள தொழிலாளர்கள் சார்ந்த பிரச்சனைகள் மற்றும் தொழிற்தாவாக்கள் மீது தீர்வுகளை வழங்குகின்றன.

சமரச முறையில் சுமுகமாக முடிக்கப்படாத தொழிற்தாவாக்கள் மீது தீர்வு காண, 13 தொழிலாளர் நீதிமன்றங்களும் ஒரு தொழில் தீர்ப்பாயமும் தமிழ்நாட்டில் செயல்படுகின்றன. சென்னையில் நான்கு தொழிலாளர் நீதிமன்றங்களும், வேலூர் மற்றும் கோவையில் தலா இரண்டு, சேலம், கடலூர், திருச்சிராப்பள்ளி, மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் தலா ஒன்று என தொழிலாளர் நீதிமன்றங்கள் இயங்கி வருகின்றன. இந்நீதி அமைப்புகள் பல்வேறு தொழில்களில் ஈடுபட்டுள்ள அனைத்து பிரிவு தொழிலாளர்களும் பயன்பெறும் வகையில் தொழிற்தாவாக்களை விரைந்து முடிக்க வழிவகை செய்கின்றன. 2016–ஆம் ஆண்டில் தொழிலாளர் நீதிமன்றங்கள் 1,733 வழக்குகளை முடித்து வைத்துள்ளன.

சென்னையில் உள்ள தொழில் தீர்ப்பாயம் தொழில் தகராறுகள் சட்டம், 1947–ன் இணைப்பான மூன்றாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள இனங்களை விசாரித்து தீர்வம் வழங்குகிறது. 2016–ஆம் ஆண்டில் இத்தொழில் தீர்ப்பாயம் 46 வழக்குகளை முடித்து வைத்துள்ளது.

## 1.6. தொழிலக வேலைவாய்ப்பு (நிலையாணைகள்) சட்டம், 1946

1946–ம் வருடத்திய தொழிலக வேலைவாய்ப்பு (நிலையாணைகள்) சட்டமானது, இச்சட்டத்தின் இணைப்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் வகையில், நடைமுறைகளில் வெளிப்படைத் தன்மையை உறுதி செய்வதன் மூலம் வேலையளிப்பவர் தொழிலாளர்களுக்கு உரிய தகுதி நிலையையும் பணி நிலைமைகளையும் தெளிவாக வரையறுத்து வழங்குவதற்காக இயற்றப்பட்டதாகும். சான்றளிக்கும் அலுவலரால் வழங்கப்படும் சான்றளிக்கப்பட்ட நிலையாணைகள் சிறந்த தொழில் நல்லுறவினை மேம்படுத்துவது மட்டுமல்லாமல் இரு தரப்பினரையும் கட்டுப்படுத்துகின்றன. 2016–17–ல், 409 நிறுவனங்களுக்கு சான்றளிக்கப்பட்ட நிலையாணைகள் வழங்கப்பட்டன.

## 1.7. தொழிற்சங்கங்கள் சட்டம், 1926

தொழிற்சங்கங்கள் சட்டம், 1926 தொழிற்சங்கம் அமைத்து, பதிவு செய்துகொள்ளும் உரிமைக்கு உத்திரவாதம் அளித்து, அச்சங்கங்களின் முறையான செயல்பாட்டினை உறுதி படுத்துகிறது. தொழிற்சங்கங்களின் கூடுதல்

பதிவாளர்கள் **31.03.2017** வரையில் **13,308** தொழிற்சங்கங்களை பதிவு செய்துள்ளனர். இவ்வாண்டில், **171** தொழிற்சங்கங்கள் புதிதாக பதிவு செய்யப்பட்டுள்ளன.

## 1.8. தொழிலாளர் சட்டங்களின் அமலாக்கம்

மத்திய மற்றும் மாநில அரசுகளால் இயற்றப்பட்ட பல்வேறு தொழிலாளர் சட்டங்களை அமல்படுத்துவது தொழிலாளர் துறையின் முக்கிய பணியாகும். சட்ட நெறிமுறைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள கூறுகள் பல்வேறு நிறுவனங்களால் முறையாக கடைபிடிக்கப்படுவதை உறுதிசெய்வதற்காகவும் தொழிலாளர்களின் உரிமைகள் மற்றும் நுகர்வோரின் நலன்களை பாதுகாப்பதற்காகவும் இத்துறையின் அமலாக்க அதிகாரிகள் ஆய்வுகளையும் சிறப்பாய்வுகளையும் காலமுறைப்படி மேற்கொண்டு வருகிறார்கள்.

## 1.9. ஒழுங்குமுறை சட்டங்களின் அமலாக்கம்

### 1.9.1. தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டம், 1947

கடைகள், நிறுவனங்கள், திரையரங்குகள் மற்றும் இதர வர்த்தக நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் பணி

நிபந்தனைகள், வேலை நேரம், வாராந்திர விடுமுறை, விடுப்பு ஊதியம் மற்றும் வேலையளிப்பவர் தன்னிச்சையாக நியாயமற்ற முறையில் பணிநீக்கம் செய்தல், பணியிலிருந்து விடுவித்தல், பணிமுறிவு ஆகியவற்றை முறைப்படுத்தும் நோக்கில் தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டம், **1947** இயற்றப்பட்டது. தொழில் வளத்தைப் பெருக்கி வேலைவாய்ப்புகளை அதிகரிப்பதற்காக, சட்டப்படி பின்பற்றப்பட வேண்டிய விதிமுறைகள் மற்றும் ஒழுங்குமுறைகளை மீறாமல் வருடத்தின் **365** நாட்களும் தொழில் நடத்திட தொழில் நிறுவனங்களை அனுமதிக்கும் வகையில் வாராந்திர விடுமுறை விதிகளைத் தளர்த்தி, முற்போக்கானதொரு நடைமுறையை **2016**–ஆம் ஆண்டில் இவ்வரசு கொண்டு வந்தது.

நடப்பு ஆண்டில், **1947**–ஆம் வருட தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டப்பிரிவு **41(2)** மற்றும் பிரிவு **45**–ல் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. திருத்தப்பட்ட சட்டப்பிரிவு **41**–ன்படி, பாதிக்கப்பட்ட தொழிலாளர் பின்சம்பளத்துடன் மீண்டும் பணியில் சேர்ந்து கொள்ளவோ அல்லது அதற்கு பதிலாக வேறு ஏதேனும் இதர நிவாரணம் பெறவோ வழிவகை செய்யப்பட்டுள்ளது. பிரிவு **45**ஆனது, அபராதத் தொகையை

உயர்த்தியதன் மூலம், சட்ட விதிகளைக் கடைப்பிடிக்க வேண்டிய நேர்மறையானதொரு தாக்கத்தை வேலையளிப்பவரின் மீது ஏற்படுத்தியுள்ளது.

இந்த ஆண்டில், **3,19,697** கடைகள் மற்றும் இதர நிறுவனங்களில், **2,76,834** ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு **23,623** நிறுவனங்களில் முரண்பாடுகள் கண்டறியப்பட்டு இணக்கக் கட்டணமாக ரூ.**24.19** இலட்சம் வசூலிக்கப்பட்டுள்ளது.

### 1.9.2. தமிழ்நாடு உணவு நிறுவனங்கள் சட்டம், 1958

உணவு விடுதிகள் மற்றும் உணவு நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் பணி நிலைமைகள், வாராந்திர விடுமுறை, பணி நேரம், ஊதியத்துடன் கூடிய விடுமுறை, மிகைநேர ஊதியம் போன்றவற்றை முறைப்படுத்துவதற்காக **1958**–ஆம் வருட தமிழ்நாடு உணவு நிறுவனங்கள் சட்டம் இயற்றப்பட்டுள்ளது. இச்சட்டத்தின் கீழ், **31.03.2017** அன்றைய நிலவரப்படி, **32,704** உணவு நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டு பதிவு, புதுப்பித்தல் மற்றும் திருத்தக் கட்டணமாக ரூ.**18.85** இலட்சம் பெறப்பட்டுள்ளது. மேலும், தொழில் தொடங்குவதில் எளிய நடைமுறைகளை மேற்கொள்வதற்கு

ஏதுவாக ஒருங்கிணைந்த ஆண்டறிக்கை முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. **2016–17–ஆம்** ஆண்டில் **35,110** ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டதில் **6,573** முரண்பாடுகள் கண்டறியப்பட்டு ரூ.**7.23** இலட்சம் இணக்கக் கட்டணமாக வசூலிக்கப்பட்டுள்ளது.

### 1.9.3. தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய மற்றும் பண்டிகை விடுமுறை நாட்கள்) சட்டம், 1958

தமிழ்நாட்டிலுள்ள தொழில் நிறுவனங்கள் மற்றும் இதர நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு முழு ஊதியத்துடன் கூடியதான தேசிய மற்றும் பண்டிகை விடுமுறைகளை வரையறை செய்து அனுமதிப்பதை சட்டபூர்வ கடமையாக்கி, **1958–ம்** வருடத்திய தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய மற்றும் பண்டிகை விடுமுறை நாட்கள்) சட்டம் இயற்றப்பட்டுள்ளது. இவ்வாண்டில் இத்துறையின் அலுவலர்களால் **90,100** ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, **9,327** முரண்பாடுகள் கண்டறியப்பட்டு ரூ.**25.90** இலட்சம் இணக்கக் கட்டணமாக வசூலிக்கப்பட்டுள்ளது.

### 1.9.4. மோட்டார் போக்குவரத்து தொழிலாளர்கள் சட்டம், 1961

மோட்டார் போக்குவரத்து நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் பணி நிலைமைகளைப் பாதுகாப்பதற்கும் முறைப்படுத்துவதற்கும் **1961**–ஆம் வருடத்திய மோட்டார் போக்குவரத்து தொழிலாளர்கள் சட்டம் இயற்றப்பட்டுள்ளது. பதிவு செய்யப்பட்டுள்ள **3,150** மோட்டார் போக்குவரத்து நிறுவனங்களில் **1,43,838** தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

**2016–17**–ஆம் ஆண்டில், பதிவு, புதுப்பித்தல் மற்றும் திருத்தக் கட்டணமாக ரூ.**29.98** இலட்சம் வசூலிக்கப்பட்டுள்ளது. மேலும், தொழில் தொடங்குவதற்கான எளிய நடைமுறைகளுக்கு வசதியாக ஒருங்கிணைந்த ஆண்டறிக்கை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இக்காலகட்டத்தில், **5,206** ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, **832** முரண்பாடுகள் கண்டறியப்பட்டு ரூ.**2.41** இலட்சம் இணக்கக் கட்டணமாக வசூலிக்கப்பட்டுள்ளது.

### 1.9.5. தோட்ட தொழிலாளர் சட்டம், 1951

தோட்ட தொழிலின் தனித்தன்மையான பணி இயல்பினையும் கடினமான பணி சூழலையும் கருத்தில்

கொண்டு, தோட்ட தொழிலில் உள்ள தொழிலாளர்களின் நலனைப் பாதுகாக்கவும், கல்வி, குடியிருப்பு, மருத்துவ உதவி, குழந்தைகள் காப்பகம் முதலான அடிப்படை வசதிகளை உறுதி செய்யவும் தோட்ட தொழிலாளர் சட்டம், **1951** இயற்றப்பட்டது. பெண் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதில் தோட்ட நிறுவனங்கள் முதன்மை பங்கு வகிக்கின்றன. இச்சட்டம், ஐந்து ஹெக்டேர் மற்றும் அதற்கு மேற்பட்ட பரப்பளவு மற்றும் **15** அல்லது அதற்குமேல் தொழிலாளர்கள் பணிபுரியும், தேயிலை, காபி, இரப்பர், சின்கோனா அல்லது ஏலக்காய் பயிரிடும் தோட்ட நிறுவனங்களுக்கு பொருந்தும். இம்மாநிலத்தில் மொத்தம் **2,223** தோட்ட நிறுவனங்கள் **62,001** ஹெக்டேர் பரப்பளவில் அமைந்துள்ளன. **681** பதிவு பெற்ற தோட்ட நிறுவனங்கள் **54,323** ஹெக்டேர் பரப்பளவிலும் **1,542** பதிவு பெறாத தோட்ட நிறுவனங்கள் **7,678** ஹெக்டேர் பரப்பளவிலும் அமைந்துள்ளன. தோட்ட நிறுவனங்களில் மொத்தம் **56,359** தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர். அவர்களில், **22,318** பெண்கள் மற்றும் **34,041** ஆண்கள் ஆவர்.

இவ்வாண்டில், தொழில் தொடங்குவதற்கான எளிய நடைமுறைகளுக்கு ஏதுவாக ஒருங்கிணைந்த ஆண்டறிக்கை அரசால் அறிமுகப்படுத்தப்பட்டு, தோட்ட தொழிலாளர்களை

பாதுகாக்கும் வகையிலான புதிய சட்டப்பிரிவுகள் சேர்க்கப்பட்டுள்ளன.

தோட்ட தொழிலாளர் சட்டம் மற்றும் இதர சார்பு சட்டங்களை அமல்படுத்துவதற்காக உதகமண்டலம், குன்னூர், கூடலூர், பந்தலூர், கோத்தகிரி, வால்பாறை, ஏற்காடு, வத்தலகுண்டு, தேனி மற்றும் நாகர்கோவில் ஆகிய 10 இடங்களில் தோட்ட நிறுவன ஆய்வாளர் அலுவலகங்கள் இயங்கி வருகின்றன. இவ்வாண்டில், தோட்ட நிறுவன ஆய்வாளர்கள் 3,011 ஆய்வுகள் மேற்கொண்டுள்ளனர். மேலும், குற்றவியல் நீதிமன்றங்களால் 65 வழக்குகள் முடிக்கப்பட்டு, ரூ.2.41 இலட்சம் அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது.

### 1.9.6. தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தொழிலாளர்களுக்கு நிரந்தர தகுதி வழங்கல்) சட்டம், 1981

நிரந்தர தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் பல்வேறு சட்டம் சார்ந்த மற்றும் சட்டம் சாராத பயன்கள், தற்காலிக தொழிலாளர்களுக்கு மறுக்கப்படுவதை தடுத்திட, தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தொழிலாளர்களுக்கு நிரந்தர தகுதி வழங்கல்) சட்டம், 1981 இயற்றப்பட்டது. இச்சட்டம், தொழில் நிறுவனம் ஒன்றில் 24 மாதங்களில் 480 நாட்கள் தொடர்பணி

புரிந்த தொழிலாளர்களுக்கு பணி நிரந்தர தகுதி நிலையை உறுதிபடுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

2016–17–ல், தொழிலாளர் ஆய்வாளர்கள் 2,000 ஆய்வுகள் மேற்கொண்டு, 196 கேட்பு மனுக்கள் மீது உத்தரவுகள் பிறப்பித்துள்ளனர்.

### 1.10. இதர ஒழுங்குமுறை சட்டங்கள்

இத்துறையினால் நடைமுறைப்படுத்தப்படும் இதர தொழிலாளர் சட்டங்கள் பின்வருமாறு:

1. உழைக்கும் பத்திரிக்கையாளர்கள் மற்றும் இதர பத்திரிக்கை பணியாளர்கள் (பணி நிபந்தனைகள் மற்றும் இதர பிரிவுகள்) சட்டம், 1955
2. பீடி மற்றும் சுருட்டு தொழிலாளர்கள் (பணி நிலைமைகள்) சட்டம், 1966
3. ஒப்பந்த தொழிலாளர் (முறைப்படுத்துதல் மற்றும் நீக்குதல்) சட்டம், 1970
4. விற்பனை அபிவிருத்தி பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 1976
5. மாநிலம் விட்டு மாநிலம் இடம் பெயர்ந்த தொழிலாளர்கள் (வேலை மற்றும் பணி நிலைமைகள் முறைப்படுத்துதல்) சட்டம், 1979

### 1.11. ஊதியம் தொடர்புடைய சட்டங்கள்

பணியாளர்களுக்கு உரிய காலத்தில் ஊதியம் வழங்குதல், ஊதியத்திலிருந்து முறையற்ற பிடித்தங்களை தடை செய்தல், ஆண் மற்றும் பெண் தொழிலாளர்களுக்கு சம ஊதியம் வழங்குதல் போன்றவற்றை உறுதி செய்திட பின்வரும் சட்டங்கள் அமல்படுத்தப்படுகின்றன.

1. சம்பள பட்டுவாடா சட்டம், 1936
2. குறைந்தபட்ச ஊதிய சட்டம், 1948
3. போனஸ் வழங்கல் சட்டம், 1965
4. சம ஊதிய சட்டம், 1976

### 1.12. சமூக பாதுகாப்பு சட்டங்கள்

#### 1.12.1. பணியாளர்கள் இழப்பீட்டு சட்டம், 1923

1923–ஆம் ஆண்டு பணியாளர்கள் இழப்பீட்டு சட்டம், பணியின்போது நேரும் விபத்தினால் ஏற்படும் காயம் அல்லது பொருள் ஈட்டும் திறன் இழக்கும் நேர்வில் தொழிலாளர்களுக்கும், உயிரிழக்கும் நேர்வில் தொழிலாளரை சார்ந்தோருக்கும் நிதி இழப்பீடு வழங்குவது வேலையளிப்பவரின் தார்மீக கடமை என்பதை சட்டபூர்வமாக்கியுள்ளது.

பணியாளர்கள் இழப்பீட்டு சட்டத்தின் கீழ் ஆணையரால் உத்திரவிடப்படும் இழப்பீட்டுத் தொகை, வேலையளிப்போர் / காப்பீட்டு நிறுவனங்களால் இச்சட்டத்தின் கீழ் ஆணையராக நியமிக்கப்பட்டுள்ள தொழிலாளர் துணை ஆணையர்களிடம் உரியோருக்கு வழங்கும் வகையில் வைப்பீடு செய்யப்பட வேண்டும். உத்தரவிடப்பட்ட தொகையை வைப்பீடு செய்ய தவறினால், வருவாய் வசூல் சட்டத்தின் கீழ் அத்தொகையினை வேலையளிப்பவரிடமிருந்து வசூலிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

2016–17–ல், மொத்தம் 2,730 வழக்குகள் முடிக்கப்பட்டு, ரூ.47.81 கோடி இழப்பீட்டுத் தொகை செலுத்த உத்தரவுகள் வழங்கப்பட்டன.

**1.12.2. பணிக்கொடை வழங்கல் சட்டம், 1972**

தொழிலாளர்கள் தமது பணிக்காலத்தில் ஆற்றிய பாராட்டத்தக்க பணிக்கான வெகுமதியாக வேலையளிப்பவர்களால் பணிக்கொடை தொகை வழங்கப்படுகிறது. தொழிலாளர்களுக்கு பணி முதிர்வு / பணி ஓய்வு, பணி விலகல், விபத்தினாலோ நோயினாலோ ஏற்படும்

இறப்பு அல்லது இயலாமை காரணமாக பணிக்கொடை வழங்கப்படுகிறது.

**2016–17**–ல், கட்டுப்பாட்டு அதிகாரிகளால், **3,266** கேட்பு மனுக்கள் முடிக்கப்பட்டு, மனுதாரர்களுக்கு ரூ.**37.97** கோடி பணிக்கொடை வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும், மேல்முறையீட்டு அலுவலர்களால் **228** மனுக்கள் தீர்வு செய்யப்பட்டுள்ளன.

### 1.12.3. தமிழ்நாடு பிழைப்பூதியம் வழங்கல் சட்டம், 1981

மாநில சட்டமாகிய **1981**–ம் வருட தமிழ்நாடு பிழைப்பூதியம் வழங்கல் சட்டம், தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டு ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் இருக்கும் காலத்தில் தொழிலாளர்களுக்கு சமூக பாதுகாப்பு அளிக்கும் நோக்கில் அவர்தம் வாழ்வாதாரத்திற்கான பிழைப்பூதியம் வழங்க வகைசெய்கிறது.

இவ்வாண்டில், **1981**–ம் வருட தமிழ்நாடு பிழைப்பூதியம் வழங்கல் சட்டம் பிரிவு 2(a)(ii)–ல் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன்படி மேற்பார்வையாளர் தரத்தில் மாதம் ஒன்றுக்கு ரூபாய் பதினைந்தாயிரத்திற்கு

மிகாமல் ஊதியம் பெறுபவர்கள் பிழைப்பூதியம் பெற தகுதியானவர் ஆவர்.

**2016–17–ல்,** இச்சட்டத்தின் கீழ் அறிவிக்கை செய்யப்பட்ட அதிகாரிகளால் **180** மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டு, மனுதாரர்களுக்கு ரூ.**1.18** கோடி பிழைப்பூதியமாக வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும், மேல்முறையீட்டு அலுவலர்களால் **16** மனுக்கள் முடிக்கப்பட்டுள்ளன.

## 1.13. குழந்தை தொழிலாளர் முறை அகற்றுதல்

குழந்தைகளின் உரிமைகள் மற்றும் நலனை உறுதி செய்வதில் முன்னிலை வகிக்கும் தமிழக அரசு, வளரும் பருவத்தில் குழந்தைகளுக்கு கல்வி மறுக்கப்பட்டால் அது குழந்தையின் வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்தை மட்டுமல்லாமல் ஒட்டுமொத்த சமூகத்தையும் பாதிக்கும் என்பதை உணர்ந்தே உள்ளது. அரசின் பல்வேறு கூட்டு முயற்சிகளால் குழந்தை தொழிலாளர்களின் எண்ணிக்கை தமிழ்நாட்டில் வெகுவாக குறைந்துள்ளது. தமிழக அரசு குழந்தை தொழிலாளர் முறையை முற்றிலும் அகற்றிட பல்வேறு துறைகளின் முயற்சிகள், சமூக பங்களிப்பு, அரசு சாரா அமைப்புகளின் ஒத்துழைப்பு ஆகியவற்றை

ஒருங்கிணைக்கும் வகையிலானதொரு பன்முக செயலாக்க அணுகுமுறையினைப் பின்பற்றி வருகிறது.

### 1.13.1. குழந்தை மற்றும் வளரிளம் பருவ தொழிலாளர் (தடுத்தல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 1986

குழந்தைகள் பணியமர்த்தப்படுவதை தடுத்திட, குழந்தை மற்றும் வளரிளம் பருவ தொழிலாளர் (தடுத்தல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 1986 மற்றும் அதன் தொடர்புடைய சட்டங்கள் இம்மாநிலத்தில் தொழிலாளர் ஆணையரக மற்றும் தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்கக அலுவலர்களால் அமல்படுத்தப்படுகின்றன.

### 1.13.2. 1.9.2016 முதல் நடைமுறைக்கு வந்த புதிய சட்ட திருத்தங்கள்

- குழந்தை தொழிலாளர் (தடுத்தல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 1986 என்பது குழந்தை மற்றும் வளரிளம் பருவ தொழிலாளர் (தடுத்தல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 1986 என மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

- ‘வளரிளம் பருவத்தினர்’ என்பவர் 14 வயது நிரம்பி, ஆனால் 18 வயது பூர்த்தியடையாதவர் ஆவார்.

- 14 வயதிற்குட்பட்ட குழந்தைகளை எந்த ஒரு தொழிலிலும் அல்லது தொழில் தொடர்புடைய

செயலிலும் பணியமர்த்தவோ அல்லது பணிபுரிய அனுமதிக்கவோ கூடாது.

- வளரிளம் பருவத்தினரை அட்டவணையில் வரையறுக்கப்பட்ட எந்த ஒரு அபாயகரமான தொழிலிலும் பணியமர்த்தவோ அல்லது பணிபுரிய அனுமதிக்கவோ கூடாது.

- குடும்பத்தால் செய்யப்படும் தொழில்களில் பள்ளி நேரம் முடிந்த பின் குடும்ப உறுப்பினர்களுக்கு உதவி செய்யும் குழந்தைக்கு விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

- குழந்தை கலைஞர்கள், பாடகர்கள், விளையாட்டு வீரர்களுக்கு அவர்களுடைய திறமைகளை வெளிப்படுத்தும் வகையில் சிறப்பு விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

- இச்சட்ட விதிகளை மீறுவோருக்கு 6 மாதங்களுக்கு குறையாமல் இரண்டு ஆண்டு வரை சிறை தண்டனை அல்லது ரூ.20,000/–க்கு குறையாமல் ரூ.50,000/– வரை அபராதம் அல்லது இவை இரண்டும் சேர்ந்து விதிக்கப்படும்.

- குழந்தைகளை பணியில் ஈடுபடுத்திய குற்றத்திற்கு தண்டனை பெற்ற பெற்றோர் அல்லது பாதுகாவலர் மீண்டும் அதே போன்ற குற்றமிழைத்தால் அவருக்கு தண்டனையாக ரூ.10,000/– வரை அபராதம் விதிக்கப்படும்.

### 1.13.3. சட்ட அமலாக்கம்

சட்ட அமலாக்க நடவடிக்கைகளை வலுப்படுத்தும் பொருட்டு, மாவட்ட ஆட்சியர் தலைமையில் பல்வேறு துறை சார்ந்த மாவட்ட அளவிலான தடுப்புப் படை இயங்கி வருகிறது. குழந்தை தொழிலாளர் முறையினை அகற்றுவதில் கடுமையான சட்ட அமலாக்கம் ஒரு முக்கிய பங்கு வகிக்கிறது. மாநிலத்தில் தொழிலாளர் ஆய்வர்கள் மற்றும் தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்கக அலுவலர்கள் குழந்தைகள் பணியில் அமர்த்தப்படுவதை தடை செய்யும் சட்டங்களை அமலாக்கம் செய்து வருகின்றனர். அவையாவன:–

1. குழந்தை மற்றும் வளரிளம் பருவ தொழிலாளர் (தடுத்தல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 1986
2. தொழிற்சாலைகள் சட்டம், 1948
3. மோட்டார் போக்குவரத்து தொழிலாளர்கள் சட்டம், 1961
4. பீடி மற்றும் சுருட்டு தொழிலாளர்கள் (வேலை நிலைமைகள்) சட்டம், 1966
5. தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டம், 1947
6. தமிழ்நாடு உணவு நிறுவனங்கள் சட்டம், 1958
7. தோட்ட தொழிலாளர்கள் சட்டம், 1951

**2016–17**–ல், மாவட்ட தடுப்பு படை மற்றும் தொழிலாளர் துறை அமலாக்க அலுவலர்களால் மாநில அளவில் **1,77,715** நிறுவனங்களில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இக்குழுக்களால் **39** முரண்பாடுகள் கண்டறியப்பட்டு, எட்டு வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. அபராதமாக ரூ.**1,30,025/–** விதிக்கப்பட்டுள்ளது. ஆய்வின் போது **42** குழந்தை தொழிலாளர்கள் மீட்கப்பட்டு, ஏழு குழந்தைகள் தேசிய குழந்தை தொழிலாளர் திட்ட சிறப்பு பயிற்சி மையங்களில் அனுமதிக்கப்பட்டு மீதமுள்ள **35** குழந்தைகள் குழந்தை நலக் குழு / உறைவிட இல்லங்கள் அல்லது அவர்களது பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

### 1.13.4. குழந்தை தொழிலாளர் நிலை

அரசு மேற்கொண்ட சீரிய அமலாக்கம், மீட்பு மற்றும் மறுவாழ்வு நடவடிக்கைகளின் காரணமாக, **2001**–ம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பில் **4.19** இலட்சமாக இருந்த குழந்தை தொழிலாளர்களின் எண்ணிக்கை **1.51** இலட்சமாக குறைந்துள்ளது என **2011**–ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பில் கண்டறியப்பட்டுள்ளது. அனைவருக்கும் கல்வி இயக்கமானது ஆண்டுதோறும் மே–ஜூன் மாதங்களில்

பள்ளி செல்லும் வயதுடைய குழந்தைகளின் விவரங்களை சேகரிக்கிறது. பொருளாதார அழுத்தத்தினால் பள்ளி செல்லாதிருக்கும் குழந்தைகளின் எண்ணிக்கை குறைந்து வருவது அண்மைக்கால ஆய்வின் மூலம் தெரிய வருகிறது.

### 1.13.5. விழிப்புணர்வு ஏற்படுத்துதல்

குழந்தை தொழிலாளர் முறையினை முற்றிலும் அகற்றுவதில் தொடர்புடைய அனைவரும் பங்குகொள்வதை ஊக்குவிக்கவும், விழிப்புணர்வு ஏற்படுத்தவும் அனைத்து மாவட்ட மற்றும் மாநில அளவிலான பொருட்காட்சிகள், அரசு விழாக்கள் மற்றும் மன்றங்கள் தளமாக பயன்படுத்தப்படுகின்றன. ஒவ்வொரு வருடமும் ஜுன் 12–ம் தேதி உலக குழந்தை தொழிலாளர் முறை எதிர்ப்பு தினமாக மாநில மற்றும் மாவட்ட அளவில் கடைபிடிக்கப்பட்டு, குழந்தை தொழிலாளர் முறைக்கு எதிராக பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது. சென்னை தீவுத்திடலில் ஒவ்வொரு வருடமும் நடைபெறும் அகில இந்திய சுற்றுலா மற்றும் தொழிற் பொருட்காட்சியில் இத்துறைக்காக ஒதுக்கப்படும் காட்சியரங்கில் கையெழுத்து இயக்கம், துண்டு பிரசுர விநியோகம், குழந்தை தொழிலாளர் முறை எதிர்ப்பு

குறித்த உறுதி மொழி எடுத்தல் போன்ற பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### 1.13.6. தேசிய குழந்தை தொழிலாளர் திட்டம்

தமிழ்நாட்டில் மத்திய அரசின் நிதி உதவியுடன் தேசிய குழந்தை தொழிலாளர் திட்டம் சென்னை, கோவை, திண்டுக்கல், தர்மபுரி, ஈரோடு, கிருஷ்ணகிரி, காஞ்சிபுரம், நாமக்கல், தூத்துக்குடி, திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, திருவண்ணாமலை, சேலம், வேலூர், விருதுநகர் ஆகிய 15 மாவட்டங்களில் செயல்படுகிறது. மாவட்ட குழந்தை தொழிலாளர் கண்காணிப்பு குழு தலைவராக உள்ள மாவட்ட ஆட்சியரே தேசிய குழந்தை தொழிலாளர் திட்ட சங்கத்திற்கும் தலைமை வகிக்கிறார். தேசிய குழந்தை தொழிலாளர் திட்டத்தால் பயன்பெறும் குழந்தைகளுக்கு மாதந்தோறும் ரூ.150/– உதவித்தொகை, கல்வி உபகரணங்கள், இலவச சீருடை, இலவச மருத்துவ பரிசோதனை முதலானவை வழங்கப்படுகின்றன.

### 1.13.7. மாநில அரசால் வழங்கப்படும் பயன்களும் நலத்திட்டங்களும்

தேசிய குழந்தை தொழிலாளர் திட்ட சிறப்பு பயிற்சி மையங்களில் பயிலும் குழந்தைகளுக்கு இலவச சீருடைகள், பாடபுத்தகங்கள், புத்தகப்பை, விளக்கப்படங்கள், பூகோள வரைபடம், கணித உபகரணபெட்டி, வண்ண தீட்டிகள், காலணி, கட்டணமில்லா பேருந்துபயண அட்டை, வாரம் ஐந்து முட்டைகளுடன் கூடிய மதிய உணவு ஆகிய பலன்களை மாநில அரசு வழங்குகிறது. தேசிய குழந்தை தொழிலாளர் திட்ட பள்ளிகளில் பயின்று உயர்கல்வி தொடரும் முன்னாள் குழந்தை தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் மாத உதவித்தொகையை ரூ.250/–ல் இருந்து ரூ.500/– ஆக மாநில அரசு உயர்த்தியுள்ளது. இத்திட்டத்தின் கீழ் நடப்பு கல்வியாண்டில் ரூ.54.00 இலட்சம் வழங்கப்பட்டு 900 மாணவ / மாணவியர் பயனடைந்துள்ளனர்.

தற்போது, தேசிய குழந்தை தொழிலாளர் திட்டம் செயல்படும் 15 மாவட்டங்களில் இயங்கி வரும் 324 சிறப்பு பயிற்சி மையங்களில், 8,156 மீட்கப்பட்ட குழந்தை தொழிலாளர்கள் பயின்று வருகின்றனர். 2016–17–ல், முறையான பள்ளிகளில் சேர்க்கப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை 3,207 ஆகும். இத்திட்டம் துவக்கப்பட்டது

முதல், சிறப்பு பயிற்சி மையங்களில் இருந்து **1,04,962** குழந்தைகள் முறையான பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

### 1.13.8. கொத்தடிமை தொழிலாளர் முறை ஒழித்தல்

**1976–**ஆம் வருட கொத்தடிமை தொழிலாளர் முறை (ஒழித்தல்) சட்டம், கொத்தடிமை தொழிலாளர் முறையை ஒழிப்பதற்காக இயற்றப்பட்டது. கொத்தடிமை தொழிலாளர் முறை ஒழிப்பு சட்டப் பிரிவுகளை வருவாய்த்துறை அலுவலர்கள் மூலம் அமல்படுத்துவதற்கும், கொத்தடிமை தொழிலாளர்களை விடுவித்து மறுவாழ்வு அளிக்க போதிய நிதி உதவி வழங்குவதற்கும் மாநில ஒருங்கிணைப்பு துறையாக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை செயல்பட்டு வந்தது.

இந்திய அரசின் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகத்தால் கொத்தடிமை தொழிலாளர்களை மீட்டு மறுவாழ்வு அளிக்கும் மத்திய அரசு திட்டமான “திருத்தியமைக்கப்பட்ட கொத்தடிமை தொழிலாளர் மறுவாழ்வு திட்டம்” மே **2016–**ல் உருவாக்கப்பட்டது. பல்வேறு தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களிடம் காணப்படும் புதிய வடிவங்களிலான கொத்தடிமை கடன்முறைகளும்

இந்திய அரசு உருவாக்கியுள்ள புதிய திட்டமும் டிசம்பர் 2016–ல் மாநில ஒருங்கிணைப்பு துறையாக தொழிலாளர் துறை நியமிக்கப்படும் நிலையை ஏற்படுத்தியுள்ளது. மாநிலத்தில் கொத்தடிமை தொழிலாளர்களை விடுவித்தல் மற்றும் அவர்களுக்கு மறுவாழ்வு அளித்தல் ஆகியவற்றை ஒருங்கிணைக்கவும் கண்காணிக்கவும் மாநில அளவில் ஓர் அதிகாரி நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

### 1.14. நல வாரியங்கள் மற்றும் சமூக பாதுகாப்பு திட்டங்கள்

#### 1.14.1. தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம்

அமைப்பு சார்ந்த பிரிவுகளிலுள்ள தொழிலாளர்கள் மற்றும் அவர்களை சார்ந்தோரின் சமூக பாதுகாப்பினை உறுதிசெய்திட நிதி ஒன்றினை உருவாக்கிடும் பொருட்டு, தமிழக அரசால் தமிழ்நாடு தொழிலாளர் நலநிதி சட்டம், 1972 இயற்றப்பட்டு, தமிழ்நாடு தொழிலாளர் நலவாரியம் 1975–ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. தொழிற்சாலைகள், தோட்ட நிறுவனங்கள், மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள், கடைகள், உணவு நிறுவனங்கள் போன்றவற்றில் வேலையளிப்பவர்கள் ஆண்டொன்றிற்கு தொழிலாளர் ஒருவருக்கு ரூ.20/– வீதமும், தொழிலாளர்கள் ரூ.10/–வீதமும் இந்நிதிக்கு பங்களிப்பாக அளிக்கின்றனர். அரசும் தனது

பங்களிப்பாக தொழிலாளர் ஒருவருக்கு ஆண்டிற்கு ரூ.10/– வீதம் வழங்குகிறது. மேலும், நீதிமன்றங்களால் விதிக்கப்படும் அபராதத் தொகை மற்றும் பல்வேறு தொழிலாளர் நலச்சட்டங்களின் விதி மீறல்களுக்காக அமலாக்க அதிகாரிகளால் வசூலிக்கப்படும் இணக்க கட்டணத் தொகை தொழிலாளர் நல நிதியாக பெறப்படுகிறது.

தமிழ்நாடு தொழிலாளர் நலவாரிய உறுப்பினர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோருக்கு கல்வி உதவித் தொகை, அதிக மதிப்பெண் பெறுவோருக்கு கல்வி ஊக்கத் தொகை, பாடநூல் உதவித் தொகை, அடிப்படை கணினி பயிற்சி, திருமண உதவித் தொகை, மூக்குகண்ணாடி, தட்டச்சு / சுருக்கெழுத்து பயிற்சி, காதுகேட்கும் கருவி, செயற்கை உடல் உறுப்புகள், மூன்று சக்கர மிதிவண்டி, இயற்கை மரண உதவித்தொகை, விபத்து மரண உதவித்தொகை, ஈமச்சடங்கு செலவுத்தொகை ஆகியவை தமிழ்நாடு தொழிலாளர் நலவாரியத்தால் வழங்கப்படுகின்றன. மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் உள்ள 42 நல மையங்களில் பாலர் பள்ளி, தையற்பயிற்சி பள்ளி மற்றும் படிப்பகங்கள் வாரிய உறுப்பினர்களுக்காக நடத்தப்படுகின்றன. விபத்து மரண உதவித் தொகையாக ரூபாய் ஒரு இலட்சம், இயற்கை மரண

உதவித் தொகையாக ரூ.25,000/– அமைப்புசார்ந்த தொழிலாளர்களைச் சார்ந்தோருக்கு வழங்கப்படுகிறது.

பல்வேறு சுகாதார மையங்களில் காசநோயாளிகளுக்கு சிறப்பு சிகிச்சை, தொழிலாளர்களுக்கு விடுமுறை இல்லங்கள், தொழிற்சங்கத்தினருக்கு ஓய்வு இல்லங்கள் போன்றவை இவ்வாரியத்தின் தனித்தன்மை வாய்ந்த திட்டங்களாகும். தொழிலாளர்கள் மற்றும் வேலையளிப்பவர்கள் பயன்பெறும் வகையில் நீதிமன்ற தீர்ப்புகள் மற்றும் தொழிலாளர் சட்டங்கள் தொடர்பான முக்கிய தகவல்களை தெரிந்துகொள்வதற்காக இவ்வாரியத்தால் "உழைப்பவர் உலகம்" எனும் மாத இதழ் வெளியிடப்படுகிறது. 2016–17–ல், ரூ.91.55 இலட்சம் மதிப்பிலான நிதி உதவிகள் 16,043 தொழிலாளர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

### 1.14.2. அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியங்கள்

1982–ஆம் ஆண்டு தமிழ்நாடு உடலுழைப்பு தொழிலாளர் (வேலை மற்றும் பணி நிலைமைகள் முறைப்படுத்துதல்) சட்டத்தினை இயற்றி, அச்சட்டத்தில் இணைக்கப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள 69 வகையான தொழில் இனங்களில் ஈடுபட்டுள்ள

அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு சமூக பாதுகாப்பு வழங்கியுள்ள முதன்மையான மாநிலங்களுள் ஒன்றாக தமிழ்நாடு திகழ்கிறது. பதினேழு அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியங்களில் பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கு நலத் திட்டங்களை உருவாக்கியதில் தமிழ்நாடு அரசு முன்னோடியாக விளங்குகிறது.

**அரசால் அமைக்கப்பட்டுள்ள 17 அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியங்களாவன:**

| வ. எண் | வாரியத்தின் பெயர் |
|---|---|
| 1. | தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் நல வாரியம் |
| 2. | தமிழ்நாடு உடலுழைப்பு தொழிலாளர் சமூக பாதுகாப்பு மற்றும் நல வாரியம் |
| 3. | தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் நல வாரியம் |
| 4. | தமிழ்நாடு தையல் தொழிலாளர் நல வாரியம் |
| 5. | தமிழ்நாடு முடிதிருத்துவோர் நல வாரியம் |
| 6. | தமிழ்நாடு சலவை தொழிலாளர் நல வாரியம் |
| 7. | தமிழ்நாடு பனைமர தொழிலாளர் நல வாரியம் |
| 8. | தமிழ்நாடு கைவினை தொழிலாளர் நல வாரியம் |
| 9. | தமிழ்நாடு கைத்தறி மற்றும் கைத்தறி பட்டு நெய்யும் தொழிலாளர் நல வாரியம் |

| | |
|---|---|
| 10. | தமிழ்நாடு காலணி மற்றும் தோல் பொருட்கள் உற்பத்தி மற்றும் தோல் பதனிடும் தொழிலாளர் நல வாரியம் |
| 11. | தமிழ்நாடு ஓவியர் நல வாரியம் |
| 12. | தமிழ்நாடு பொற்கொல்லர்கள் நல வாரியம் |
| 13. | தமிழ்நாடு மண்பாண்ட தொழிலாளர் நல வாரியம் |
| 14. | தமிழ்நாடு வீட்டுப் பணியாளர்கள் நல வாரியம் |
| 15. | தமிழ்நாடு விசைத்தறி நெசவாளர்கள் நல வாரியம். |
| 16. | தமிழ்நாடு பாதையோர வணிகர்கள் மற்றும் கடைகள் மற்றும் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர் நல வாரியம். |
| 17. | தமிழ்நாடு சமையல் தொழிலாளர் நல வாரியம் |

## (i) அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியங்களின் செயல்பாடுகள்

அனைத்து **32** மாவட்டங்களிலும் மாவட்ட தொழிலாளர் அலுவலர்கள் (சமூக பாதுகாப்பு திட்டம்) அமைப்புசாரா நல வாரியங்களின் கள அலகு அலுவலர்களாக உள்ளனர். பதிவு, புதுப்பித்தல், கேட்பு மனு ஒப்பளிப்பு பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குதல் ஆகிய பணி பொறுப்புகள் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. மாவட்ட ஆட்சியரை தலைவராகவும், மாவட்ட அளவில் தொடர்புடைய துறை

அலுவலர்கள், தொழிலாளர், வேலையளிப்போர் தரப்பு பிரதிநிதிகள் ஆகியோரைக் கொண்டு மாவட்ட அலுவலர்களின் செயல்பாடுகளை கண்காணிக்கவும் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் உரிய நேரத்தில் வழங்கப்படுவதை உறுதிசெய்யவும் 'மாவட்ட கண்காணிப்பு குழு' உருவாக்கப்பட்டுள்ளது.

மாவட்டங்களில் உள்ள தொழிலாளர் அலுவலர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) அலுவலகங்கள் மற்றும் சென்னையில் உள்ள அமைப்புசாரா தொழிலாளர் நல வாரிய தலைமை அலுவலகங்கள் கணினி மயமாக்கப்பட்டுள்ளன. பதிவு, புதுப்பித்தல் மற்றும் கேட்பு மனுக்கள் தொடர்பான விவரங்கள் பதிவேற்றலும் விவர மேலாண்மையும் இணையதள மென்பொருள் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன. மாவட்ட அலுவலகங்களில் நிறுவப்பட்டுள்ள கணினி புகைப்படக் கருவி மூலம் எடுக்கப்பட்ட தொழிலாளர்களது புகைப்படம் மற்றும் தனி நபரின் ஏனைய விவரங்கள் அடங்கிய புத்தக வடிவிலான அடையாள அட்டைகள் வழங்கப்படுகின்றன. பதிவுபெற்ற உடலுழைப்பு தொழிலாளர் / பயனாளிகளுக்கான அனைத்து நலத்திட்ட உதவித் தொகைகளும் உரிய நேரத்தில் வெளிப்படையாக வழங்கப்படுவதை உறுதி செய்யும் வகையில்

அவர்களது வங்கிக் கணக்கிற்கு இந்திய ரிசர்வ் வங்கியின் மின்னணு பரிமாற்றம் (RECS) மூலம் நேரடியாக செலுத்தப்படுகிறது.

**(ii) நிதி ஆதாரங்கள்**

கட்டடம் அல்லது உத்தேசிக்கப்பட்டுள்ள கட்டுமான பணியின் மொத்த மதிப்பீட்டுத் தொகையில் ஒரு சதவிகித தீர்வைத் தொகையை தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் நல வாரியம் பங்களிப்பாகப் பெறுகிறது. **2016–17–**ஆம் ஆண்டில் ரூ.**459.11** கோடி தீர்வைத் தொகையாக பெறப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மோட்டார் வாகன வரி விதிப்பு சட்டம், **1974–**ன்படி, சாலைகளில் பயணிகள் அல்லது பொருட்களை ஏற்றிச் செல்லும் ஒவ்வொரு வர்த்தக வாகனத்திற்கும் கூடுதல் வரியாக விதிக்கப்படும் ஒரு சதவிகித தொகையை தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் நலவாரியம் பெறுகிறது. **2016–17–**ஆம் ஆண்டில் ரூ.**10.52** கோடி கூடுதல் வரியாக பெறப்பட்டுள்ளது.

தமிழ்நாடு உடலுழைப்பு தொழிலாளர் சமூக பாதுகாப்பு நல வாரியம் மற்றும் இதர **14** நல வாரியங்கள், நலத்திட்டங்களை செயல்படுத்துவதற்காக அரசிடமிருந்து

மானியம் பெறுகின்றன. 2016–17–ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு ரூ.70.00 கோடி ஆகும்.

### (iii) நலத்திட்ட உதவிகளின் வகைகள்

பதிவு பெற்ற அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் நலத்திட்ட உதவிகள் பின்வருமாறு:-

| வ. எண் | உதவித்தொகை வகைகள் | | தொகை (ரூபாயில்) |
|---|---|---|---|
| 1. | தனி நபர் விபத்து நிவாரணம் | | |
| | அ) விபத்து மரணம் | | 1,00,000/– |
| | ஆ) விபத்து ஊனம் (ஊனத்தின் தன்மைக்கேற்ப) | | 1,00,000/– வரை |
| | இ) செயற்கை உறுப்புகள் மற்றும் சக்கர நாற்காலி | | தமிழ்நாடு மாற்றுத் திறனாளிகள் நல வாரியத்தால் நிர்ணயிக்கப்படும் தொகை |
| | ஈ) பணியிடத்தில் விபத்து மரணம் (பதிவு பெற்ற மற்றும் பதிவு பெறாத கட்டுமான தொழிலாளர்களுக்கு மட்டும்) | | 5,00,000/– |
| 2. | இயற்கை மரண உதவித் தொகை | | 15,000/– |
| 3. | ஈமச்சடங்கு உதவித்தொகை | | 2,000/– |
| 4. | கல்வி உதவித் தொகை | | |
| | அ) | 10ம் வகுப்பு படிப்பதற்கு (பெண் குழந்தைகளுக்கு மட்டும்) | 1,000/– |
| | ஆ) | 10ம் வகுப்பு தேர்ச்சி | 1,000/– |
| | இ) | 11ம் வகுப்பு படிப்பதற்கு (பெண் குழந்தைகளுக்கு மட்டும்) | 1,000/– |

| | | | |
|---|---|---|---|
| | ஈ) | 12ம் வகுப்பு படிப்பதற்கு<br>(பெண் குழந்தைகளுக்கு மட்டும்) | 1,500/– |
| | உ) | 12ம் வகுப்பு தேர்ச்சி | 1,500/– |
| | ஊ) | முறையான பட்டப்படிப்பு படிப்பதற்கு<br>வீட்டிலிருந்து கல்லூரிக்கு<br>செல்பவர்<br>விடுதியில் தங்கி படிப்பவர் | <br><br>1,500/–<br>1,750/– |
| | எ) | முறையான பட்டமேற்படிப்பு<br>படிப்பதற்கு<br>வீட்டிலிருந்து கல்லூரிக்கு<br>செல்பவர்<br>விடுதியில் தங்கி படிப்பவர் | <br><br><br>4,000/–<br>5,000/– |
| | ஏ) | முறையான தொழில்முறை<br>பட்டப்படிப்பு படிப்பதற்கு<br>வீட்டிலிருந்து கல்லூரிக்கு<br>செல்பவர்<br>விடுதியில் தங்கி படிப்பவர் | <br><br><br>4,000/–<br>6,000/– |
| | ஐ) | முறையான தொழில்முறை<br>பட்டமேற்படிப்பு படிப்பதற்கு<br>வீட்டிலிருந்து கல்லூரிக்கு<br>செல்பவர்<br>விடுதியில் தங்கி படிப்பவர் | <br><br><br>6,000/–<br>8,000/– |
| | ஒ) | ஐ.டி.ஐ. அல்லது பாலிடெக்னிக்<br>படிப்பு படிப்பதற்கு<br>வீட்டிலிருந்து கல்லூரிக்கு<br>செல்பவர்<br>விடுதியில் தங்கி படிப்பவர் | <br><br><br>1,000/–<br>1,200/– |
| 5. | திருமண உதவித்தொகை<br><br>அ) ஆண்<br>ஆ) பெண் | | <br><br>3,000/–<br>5,000/– |

| | | |
|---|---|---|
| 6. | மகப்பேறு உதவித்தொகை<br>பிரசவம்<br>கருச்சிதைவு / மருத்துவரீதியிலான கருக்கலைப்பு | <br>6,000/–<br><br>3,000/– |
| 7. | கண் கண்ணாடிக்கான தொகை ஈடுசெய்தல் | 500/– வரை |
| 8. | ஓய்வூதியம் | 1000/–<br>பிரதி மாதம் |
| 9. | குடும்ப ஓய்வூதியம்<br>(கட்டுமான தொழிலாளர்களுக்கு மட்டும்) | 400/–<br>பிரதி மாதம் |

## (iv) 17 அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியங்களின் செயல்பாடுகள்: –

### (அ) வாரியம் துவக்கப்பட்ட நாள் முதல் 31.03.2017 வரை நல வாரியங்களின் ஒட்டுமொத்த சாதனை விவரங்கள்:

| வ. எண். | வாரியத்தின் பெயர் | பதிவு (இலட்சத்தில்) | பயனாளிகள் (இலட்சத்தில்) | தொகை (ரூபாய் கோடியில்) |
|---|---|---|---|---|
| 1. | தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் நல வாரியம் | 27.00 | 12.69 | 413.61 |
| 2. | தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் நல வாரியம். | 2.02 | 0.92 | 24.24 |
| 3. | தமிழ்நாடு உடலுழைப்பு தொழிலாளர் சமூக பாதுகாப்பு மற்றும் நல வாரியம் மற்றும் இதர 14 நல வாரியங்கள் | 39.72 | 25.23 | 622.63 |
| **மொத்தம்** | | **68.74** | **38.84** | **1060.48** |

## (ஆ) 2016–17–ஆம் ஆண்டின் அமைப்பு சாரா நல வாரியங்களின் சாதனைகள்

| வ. எண். | வாரியத்தின் பெயர் | பதிவு (இலட்சத்தில்) | பயனாளிகள் (இலட்சத்தில்) | தொகை (ரூபாய் கோடியில்) |
|---|---|---|---|---|
| 1. | தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் நல வாரியம் | 1.11 | 1.66 | 71.41 |
| 2. | தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் நல வாரியம். | 0.07 | 0.14 | 4.49 |
| 3. | தமிழ்நாடு உடலுழைப்பு தொழிலாளர் சமூக பாதுகாப்பு மற்றும் நல வாரியம் மற்றும் இதர 14 நல வாரியங்கள் | 1.06 | 1.58 | 58.69 |
| **மொத்தம்** | | **2.24** | **3.38** | **134.59** |

## (v) கட்டுமான தொழிலாளர்களுக்கான சிறப்பு திட்டங்கள்

- ❖ வெளி மாநிலங்களிலிருந்து இடம்பெயர்ந்து தமிழ்நாட்டில் கட்டுமான தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களை தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் நல வாரியத்தில் பதிவு செய்வதில் தமிழ்நாடு முன்னோடியாக திகழ்கிறது.

- ❖ பணியிடத்தில் விபத்து ஏற்பட்டு இறக்கும் பதிவு பெற்ற / பதிவு பெறாத கட்டுமான தொழிலாளர்களுக்கான விபத்து மரண உதவித்தொகை ரூ.1,00,000/–லிருந்து ரூ.5,00,000/–ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

- ❖ கட்டுமான தொழிலாளர்களின் நலனுக்காக நகரும் மருத்துவமனைகள் மூலம் அவர்கள் பணிபுரியும் இடத்திலேயே சுகாதார வசதிகள் வழங்கப்படுகின்றன.

- ❖ கட்டுமான தொழிலாளர்களின் குழந்தைகள் முறையான பள்ளிகள் / அனைவருக்கும் கல்வி திட்ட பள்ளிகளுக்கு அவர்கள் தங்கியிருக்கும் இடம் / பணியிடத்திலிருந்து சென்று வர போக்குவரத்து வசதிகள் செய்யப்படுகின்றன.

- ❖ கட்டுமான தொழிலாளர்கள் தற்காலிகமாக தங்குவதற்கு அனைத்து வசதிகளுடன் கூடிய துயில் கூடங்கள் (Dormitories) கட்டுதல்; முதல் துயில் கூடம் காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள எழிச்சூரில் கட்டப்பட்டுள்ளது.

- ❖ கட்டுமான தொழிலாளர்களது குழந்தைகளின் வளர்ச்சி, ஊட்டச்சத்து தேவைகளை நிறைவு செய்யும் வகையில் அங்கன்வாடி வசதி, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட துறையுடன் இணைந்து வழங்கப்படுகிறது.

## 1.15. நுகர்வோர் பாதுகாப்பு

### 1.15.1. சட்டமுறை எடையளவு சட்டம், 2009

வணிகம் மற்றும் வியாபாரத்தின் மூலம் நடைபெறும் பரிவர்த்தனைகளை முறைப்படுத்திடவும் எடையளவுகள் மூலம் விற்பனை அல்லது விநியோகிக்கப்படும் பொருட்கள் மற்றும் சேவைகளை எடை, அளவு மற்றும் எண்ணிக்கையாக வழங்கப்படுவதை முறைப்படுத்தவும் 2009–ஆம் வருடத்திய சட்டமுறை எடையளவு சட்டம் இந்திய அரசால் இயற்றப்பட்டது. தொழிலாளர் துறையால் அறிவிக்கை செய்யப்பட்ட அலுவலர்களால் இம்முறைப்படுத்தும் சட்டம்

அமல்படுத்தப்படுகிறது. தொழிலாளர் ஆணையரகத்தின் கீழ் சட்டமுறை எடையளவு பிரிவு செயல்பட்டு வருகிறது. தவறான வர்த்தக நடைமுறைகளிலிருந்து நுகர்வோர் மற்றும் பொதுமக்களின் நலனைப் பாதுகாப்பதற்காக சட்டமுறை எடையளவு சட்டத்தினை அமல்படுத்திட கடைகள் மற்றும் நிறுவனங்களில் சட்டமுறை எடையளவு அலுவலர்கள் காலமுறை ஆய்வுகள் மேற்கொண்டு வருகின்றனர். தமிழ்நாட்டின் சட்டமுறை எடையளவு கட்டுப்பாட்டு அதிகாரியாக சென்னை தொழிலாளர் துணை ஆணையர் (ஆய்வுகள்) அறிவிக்கை செய்யப்பட்டுள்ளார். மாநிலத்திலுள்ள **315** சட்டமுறை எடையளவு அலுவலர்கள் எடைகள் மற்றும் அளவைகளை ஆய்வு மேற்கொண்டு, பரிசீலனை செய்து, முத்திரையிட்டு பரிசீலனை சான்று வழங்கி வருகின்றனர்.

இந்த ஆண்டில், சட்டமுறை எடையளவு சட்டத்தின் கீழ் **3,12,282** நிறுவனங்கள் ஆய்வு செய்யப்பட்டு, முத்திரைக் கட்டணமாக ரூ.**30.01** கோடியும் மற்றும் இணக்கக் கட்டணமாக ரூ.**1.03** கோடியும் வசூலிக்கப்பட்டுள்ளன.

## 1.15.2. சட்டமுறை எடையளவு (பொட்டலப் பொருட்கள்) விதிகள், 2011

பொருட்கள் தயாரிப்போர், பொட்டலமிடுவோர், இறக்குமதி செய்வோர் அனைவரும் பொட்டலமிடும் பொருட்களின் நிகர எடை, அதிகபட்ச சில்லறை விற்பனை விலை, தயாரிக்கும் இடத்தின் முகவரி உள்ளிட்ட விவரங்களை பொட்டலத்தின் மீது அல்லது பொட்டலமிடப்பட்ட பொருட்களின் முகப்புச் சீட்டுக்களின் மீது அறிவிக்க வேண்டும். இதன் பொருட்டு, அவர்கள் இவ்விதிகளின் கீழ் பதிவுச் சான்று பெற வேண்டும். அதிகபட்ச சில்லரை விற்பனை விலைக்கு அதிகமாக விற்கப்படுவதிலிருந்து நுகர்வோரைப் பாதுகாப்பதும் நுகர்வோர் நலன்கள் குறித்த இதர தகவல்களைத் தருவதும் இதன் நோக்கமாகும்.

இவ்வாண்டில், 1,20,451 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, இணக்கக் கட்டணமாக ரூ.75.71 இலட்சம் வசூலிக்கப்பட்டுள்ளது. பொருட்களை பொட்டலமிட பதிவு சான்று வழங்குவதற்கு ரூ.1.73 இலட்சம் பதிவுக் கட்டணமாக வசூலிக்கப்பட்டுள்ளது.

### 1.15.3. சட்டமுறை எடையளவு புகார் கண்காணிப்பு முறை (LMCTS) கைப்பேசி செயலி (Mobile Application)

சட்டமுறை எடையளவு சட்டத்தின் தலையாய நோக்கங்களான அறிவிக்கப்பட்ட அதிகபட்ச சில்லரை விற்பனை விலையின்படியே பொருட்கள் விற்கப்படுவதையும் வணிகம் மற்றும் வியாபாரத்தில் பயன்படுத்தப்படும் அனைத்து எடைகள் மற்றும் அளவைகள் துல்லியமாக இருப்பதையும் உறுதிசெய்வதன் மூலம் நுகர்வோர் நலனைப் பாதுகாப்பதை செயல்படுத்திட, இந்தியாவிலேயே முதல் முறையாக ரூ.**26.30** இலட்சம் செலவில் எளிதாக பயன்படுத்தும் வகையிலான சட்டமுறை எடையளவு புகார் கண்காணிப்பு முறை கைப்பேசி செயலி உருவாக்கப்பட்டுள்ளது. இந்த கைப்பேசி செயலி சட்ட விதிமுறைகளில் நுகர்வோருக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தவும் எடைகள், அளவைகள் மற்றும் பொட்டலப் பொருட்கள் மீதான புகார்களுக்கு உடனடியாக தீர்வு காணும் பொருட்டும் உருவாக்கப்பட்டுள்ளது. நுகர்வோர்கள் கைப்பேசி செயலியை (LMCTS) **Google Play Store**-ல் இருந்து பதிவிறக்கம் செய்து கொண்டு, தங்களது புகார்களை பதிவேற்றம் செய்து, அதன் மீதான நடவடிக்கை மற்றும் இறுதி முடிவுகளை சுலபமாக அறிந்து கொள்ளலாம்.

சட்டமுறை எடையளவு புகார் கண்காணிப்பு முறை கைப்பேசி செயலி மற்றும் சட்டமுறை எடையளவு சட்டம் மற்றும் விதிகள் குறித்து நுகர்வோர் மற்றும் பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் தயாரிக்கப்பட்டுவரும் குறும்படம் விரைவில் வெளியிடப்பட உள்ளது. இந்த விழிப்புணர்வு படம் தமிழ்நாடு அரசு கம்பி வட (cable) தொலைக்காட்சி, உள்ளூர் கம்பி வட இணைப்புகள், செய்தி மற்றும் மக்கள் தொடர்பு துறையின் விளம்பர ஊர்திகளில் ஒளிப்பரப்பப்படுவதோடு, நுகர்வோர் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், அரசு கண்காட்சிகள், பொருட்காட்சிகள் போன்ற இடங்களில் மக்களின் பார்வைக்கு திரையிடப்படும்.

## 1.16. தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம்

தொழிலாளர் பாடத் திட்டங்கள் அடங்கிய கல்வியை வழங்கவும் தொழிலாளர் துறையின் அலுவலர்கள், தொழிற்சங்கங்கள் மற்றும் வேலையளிப்போரின் பிரதிநிதிகளுக்கு பயிற்சி வழங்கவும், தொழிலாளர் பிரச்சனைகள் மற்றும் தொழிலாளர் சீர்திருத்தங்கள் தொடர்பாக முத்தரப்பினர் கலந்து கொள்ளும் கருத்தரங்குகளுக்கு ஏற்பாடு செய்யவும், தொழிலாளர்

துறையின் ஓர் அங்கமாக 1973–ஆம் ஆண்டில் தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம் அமைக்கப்பட்டது. 1987–ஆம் ஆண்டில் சங்கமாக பதிவு செய்யப்பட்டு தற்போது ஒரு தன்னாட்சி நிறுவனமாக 1988 முதல் இயங்கி வருகிறது. இக்கல்வி நிலையத்தை நிர்வகிக்க அரசால் வருடாந்திர மானியம் வழங்கப்பட்டு வருகிறது. 2016–17–ஆம் ஆண்டில் மானியமாக ரூ.2.17 கோடி அரசால் விடுவிக்கப்பட்டது.

தமிழ்நாட்டின் துரித தொழில் மயமாக்கத்தினை கருத்தில் கொண்டு, தொழிலாளர் மேலாண்மை மற்றும் மனிதவள மேலாண்மைத் துறைகளில் அதிகரித்துவரும் வல்லுநர்களுக்கான தேவையினைப் பூர்த்தி செய்யும் வகையில், சென்னை பல்கலைக்கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட இளங்கலை பட்டப்படிப்பு (தொழிலாளர் மேலாண்மை), முதுகலை பட்டப்படிப்பு (தொழிலாளர் மேலாண்மை) மற்றும் ஆராய்ச்சி படிப்புகளையும் இக்கல்வி நிலையம் நடத்தி வருகிறது. பணிபுரிவோருக்காக பகுதி நேர முதுகலை தொழிலாளர் நிர்வாகவியல் பட்டயப்படிப்பும், வார இறுதி நாட்களில் நிர்வாகவியல் சட்டத்துடன் கூடிய தொழிலாளர் சட்ட பட்டயப்படிப்பும் சீர்மிகு வகுப்பறைகளில் (Smart Class Rooms) வழங்கப்படுகின்றன. இக்கல்வி

நிலையத்தில் பயின்ற மாணவர்கள் மத்திய, மாநில அரசுகளின் தொழிலாளர் துறை மற்றும் பொதுத்துறை / தனியார் நிறுவனங்களில் மனிதவள மேம்பாட்டு உயர் அலுவலர்களாக சிறந்த வகையில் பணியமர்த்தப்பட்டு வருகின்றனர். இக்கல்வியாண்டில், **229** மாணவர்கள் பல்வேறு பாடப்பிரிவுகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். மேலும், **2,668** நபர்கள் இக்கல்வி நிலையத்தால் நடத்தப்பட்ட **24** கருத்தரங்குகள் மற்றும் பயிற்சி வகுப்புகளில் பங்கு பெற்றுள்ளனர்.

## 1.17. தமிழ்நாடு கட்டுமான கழகம்

கட்டுமான தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்கு கட்டுமானம் மற்றும் இதர தொடர்புடைய பிரிவுகளில் பல்வேறு திறன்மிகு பயிற்சிகள் வழங்குவதற்காக தமிழ்நாடு கட்டுமான கழகம் நிறுவப்பட்டது. இக்கழகம் புதிய திறன் பயிற்சி, மறு திறன் பயிற்சி மற்றும் திறன் மேம்படுத்துதல் ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது. பல்வேறு கட்டுமான தொழில் பிரிவுகளான, கட்டுமானம், கம்பி வளைத்தல், குழாய் பொருத்துதல், மின் பணிகள், வண்ணம் பூசுதல், மரவேலை, நில அளவை உள்ளிட்டவைகளில் அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி

இயக்ககத்தால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் தொழிற்பயிற்சி நிறுவனங்கள் மூலம் குறுகிய கால திறன் எய்தும் பயிற்சி திட்டத்தின் கீழ் இத்திறன்மிகு பயிற்சி வழங்கப்படுகிறது. கட்டுமான தொழிலாளர்கள் ஏற்கனவே பெற்றுள்ள திறனை அங்கீகரித்து (Recognition of Prior Learning) அவர்களுக்கு சான்று வழங்கும் திட்டத்தினை, தமிழ்நாடு கட்டுமான கழகம் தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகத்துடன் இணைந்து செயல்படுத்த நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

### 1.18. 2016–17– ஆம் ஆண்டின் சாதனைகள்

- ❖ நல வாரியங்களால் செயல்படுத்தப்படும் நலத் திட்டங்களின் பயன்கள் குறித்து அமைப்புசாரா தொழிலாளர்களுக்கிடையே விழிப்புணர்வை ஏற்படுத்திட குறும்படம் ஒன்று தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.

- ❖ எடையளவு சட்டம் மற்றும் பொட்டலப் பொருட்கள் தொடர்பான விதிகள் குறித்து நுகர்வோருக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தவும், அவர்களது புகார்களுக்கு தீர்வு காணும் வகையிலும் வலைதள அடிப்படையிலான சட்டமுறை எடையளவு புகார் கண்காணிப்பு முறை (LMCTS) கைப்பேசி செயலியை தமிழ்நாடு அறிமுகப்படுத்தியுள்ளது.

- ❖ சட்டமுறை எடையளவு ஆய்வகங்களுடன் கூடிய ஒருங்கிணைந்த தொழிலாளர் அலுவலர் அலுவலக வளாகங்கள் கடலூர், சேலம், நாமக்கல், தருமபுரி, கரூர்,

நாகப்பட்டினம் மற்றும் ஈரோடு ஆகிய மாவட்டங்களில் கட்டப்பட்டுள்ளன.

- ❖ அமைப்புசாரா தொழிலாளர்கள் மற்றும் வெளி மாநில தொழிலாளர்கள் பயன்பெறும் வகையில் ரூ.9.95 இலட்சம் செலவில் கட்டணமில்லா தொலைபேசி எண்ணுடன் கூடிய பன்மொழி உதவி மையம் துவக்கப்பட தயாராக உள்ளது.

- ❖ அமைப்புசாரா தொழிலாளர்கள் பதிவு செய்தல் மற்றும் நலத் திட்ட உதவிகள் பெறுதல் ஆகியவற்றை எளிமையாக்குவதற்கும் கட்டுமான நிறுவனத்தினர் மற்றும் ஒப்பந்ததாரர்களிடமிருந்து தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் நல வாரியத்திற்கு பெறப்படும் பங்களிப்புத் தொகையினை இணையதள மூலமாக செலுத்துவதற்கும் ரூ.1.05 கோடி செலவில் தமிழ்நாடு மின்ஆளுமை முகமை உதவியுடன் இணையதள வசதி (Online facility) உருவாக்கப்பட்டு வருகிறது.

## 2. தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம்

தமிழ்நாட்டில் அமைந்துள்ள ஏராளமான இயற்கை வளங்கள், உட்கட்டமைப்பு வசதிகள், திறன் மிகுந்த தொழிலாளர்கள், சுமுகமான தொழில் சூழல் ஆகியவற்றோடு சுலபமாக தொழில் துவங்க அரசால் எடுக்கப்பட்டுள்ள முயற்சிகள் தங்களது உற்பத்தி அலகுகளை தமிழ்நாட்டில் நிறுவ முன்வரும் வகையில் பன்னாட்டு நிறுவனங்களைக் கவர்ந்துள்ளன. வாகனம் மற்றும் வாகன உதிரி பாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகள், நூற்பாலைகள், ஆயத்த ஆடைகள், இரசாயனம், தோல், மின்னணு, பட்டாசு மற்றும் தீப்பெட்டி, சிமெண்ட், பொறியியல் முதலான தொழிற்சாலைகள் அதிகளவில் அமைந்துள்ளதன் காரணமாக தமிழ்நாடு, தனக்கென ஒரு தனியிடத்தை ஏற்படுத்திக் கொண்டு தொழில் மையமாக திகழ்கிறது. நிலையான தொழில் வளர்ச்சி மற்றும் மேம்பாட்டை அடையும் வகையில் தொழிலாளர் நல சட்டங்களை அமலாக்கம் செய்வதில் இணக்கமான அணுகுமுறையைக் கடைபிடிப்பதிலும் தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களது பாதுகாப்பு மற்றும் நலன்களைக் காப்பதில் பரிவுடன் கூடிய செயல்பாடுகளிலும் அரசு உறுதி பூண்டுள்ளது. தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார

இயக்ககமானது, மத்திய மற்றும் மாநில அரசுகளால் இயற்றப்பட்ட தொழிலாளர் நல சட்டங்களை தொழிற்சாலைகள் மற்றும் கட்டுமான பணியிடங்களில் அமலாக்கம் செய்து வருவதோடு, தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு பயிற்சி அளித்து, பணிபுரியும் இடங்களில் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தை கண்காணித்து வருகிறது. இவ்வியக்ககத்தின் பலதரப்பட்ட செயல்பாடுகள் தொழிலாளர்களின் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் நலனை உறுதி செய்வதை உள்ளடக்கியதாக உள்ளது.

தமிழகத்தில், 31.03.2017 அன்றுள்ளவாறு தொழிற்சாலைகள் சட்டத்தின் கீழ் 42,082 தொழிற்சாலைகள் பதிவு செய்யப்பட்டு 21,20,462 தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். மேலும், கட்டடம் மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் (பணி முறைப்படுத்துதல் மற்றும் பணி நிலைமைகள்) சட்டம், **1996–**ன் கீழ் 7,648 கட்டுமான நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டு 1,63,391 தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர்.

தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம் கீழ்கண்ட பணிகளை மேற்கொண்டு வருகிறது.

I. தொழிற்சாலைகள் சட்டம், 1948 & தமிழ்நாடு தொழிற்சாலைகள் விதிகள், 1950 மற்றும் இதர தொழிலாளர் சட்டங்களை தொழிற்சாலைகளில் அமலாக்கம் செய்தல்

II. தொழிற்சாலைகளில் உடல்நலம் மற்றும் பாதுகாப்பு மேம்பாடு குறித்த செயல்பாடுகள்

III. கட்டடம் மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் (பணி முறைப்படுத்துதல் மற்றும் பணி நிலைமைகள்) சட்டம், 1996, தமிழ்நாடு கட்டடம் மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் (பணி முறைப்படுத்துதல் மற்றும் பணி நிலைமைகள்) விதிகள், 2006 மற்றும் இதர தொழிலாளர் சட்டங்களை கட்டுமான நிறுவனங்களில் அமலாக்கம் செய்தல்

## 2.1. நிர்வாக அமைப்பு

தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககத்தில், தொழிற்சாலைகள் சட்ட அமலாக்க பிரிவு, கட்டடம் மற்றும் இதர கட்டுமான தொழிலாளர் சட்ட அமலாக்க பிரிவு என இரண்டு பிரிவுகள் இயக்குநர் தலைமையில் செயல்பட்டு வருகின்றன.

- **தொழிற்சாலைகள் சட்ட அமலாக்க பிரிவு –** இப்பிரிவு ஒரு முதுநிலை கூடுதல் இயக்குநர், ஆறு கூடுதல் இயக்குநர்கள், 31 இணை இயக்குநர்கள், 55 துணை இயக்குநர்கள், 46 உதவி இயக்குநர்கள், ஒரு தலைமை மருத்துவ அலுவலர் மற்றும் எட்டு உதவி மருத்துவ அலுவலர்கள் ஆகியோரைக் கொண்டதாகும்.
- **கட்டடம் மற்றும் இதர கட்டுமான சட்ட அமலாக்க பிரிவு –** இப்பிரிவு ஒரு முதுநிலை கூடுதல் இயக்குநர், இரண்டு இணை இயக்குநர்கள், எட்டு துணை இயக்குநர்கள் மற்றும் 16 உதவி இயக்குநர்கள் ஆகியோரைக் கொண்டதாகும்.

## 2.2. தொழிற்சாலைகள் சட்டம் மற்றும் இதர தொழிலாளர் நல சட்டங்களின் அமலாக்கம்

தொழிற்சாலைகள் சட்டம் மற்றும் அதனைச் சார்ந்த தொழிலாளர் சட்டங்களில் வரையறுக்கப்பட்டுள்ள பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் நல வசதிகள் தொழிலாளர்களுக்கு வழங்கப்படுவதை காலமுறைப்படியான ஆய்வுகள் மூலம் உறுதி செய்வது இயக்ககத்தின் முதன்மையான பணியாகும். தொழிற்சாலைகளில் மேற்கொள்ளப்படும் ஆய்வுகளைக் குறைக்கவும், தொழில் முனைவோர் உற்பத்தியில் முழுகவனம்

செலுத்த ஏதுவாகவும் இவ்வியக்கக அலுவலர்களால் மேற்கொள்ளப்படும் ஆய்வுகளின் கால அளவு கீழ்க்கண்டவாறு முறைப்படுத்தப்பட்டுள்ளது.

**(அ)** சிறு தொழில் நிறுவன சான்று பெற்ற, அபாயகரமான பணிகள் மற்றும் இடர்தரும் செயல்முறைகள் இல்லாத தொழிற்சாலைகளில், விபத்துக்கள் ஏதும் ஏற்படாத நிலையிலும், தொழிலாளர்கள் மற்றும் தொழிற்சங்கங்களிடமிருந்து புகார்கள் ஏதும் பெறப்படாத நிலையிலும், ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது.

**(ஆ)** சிறு தொழில் சான்று பெற்ற ஆனால் அபாயகரமான பணிகள் மற்றும் இடர்தரும் செயல்முறைகள் உள்ள தொழிற்சாலைகள் மற்றும் சிறு தொழில் சான்று பெறாத தொழிற்சாலைகளில் பாதுகாப்பு மற்றும் உடல் நலம் சார்ந்த அம்சங்கள் தொடர் கண்காணிப்பின் மூலம் உறுதி செய்யப்பட வேண்டும் என்பதால் இத்தொழிற்சாலைகளில் ஆறு மாதங்களுக்கு ஒரு முறை ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது.

**(இ)** தீப்பெட்டி மற்றும் பட்டாசு தொழிற்சாலைகளில் நிகழக்கூடிய தீ மற்றும் வெடி விபத்துகளை குறைக்கவும் குழந்தை தொழிலாளர்கள் பணியமர்த்தப்படாமல் இருப்பதை உறுதி செய்யவும் இத்தொழிற்சாலைகளில் நான்கு மாதங்களுக்கு ஒரு முறை ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது.

(ஈ) வழக்கமான ஆய்வுகளுடன் கூடுதலாக பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் நல வசதிகள் குறித்த கண்காணிப்பை மேலும் மேம்படுத்திட, சிறப்பு ஆய்வுகள், விடுமுறை ஆய்வுகள் மற்றும் சோதனை ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

தொழிலாளர்களின் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் நல வசதிகளை உறுதி செய்ய 2016-17-ஆம் ஆண்டில் தொழிற்சாலைகளில் 38,140 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## 2.3. பட்டாசு தொழிற்சாலை ஆய்வுகள்

பட்டாசு உற்பத்தியில் கையாளப்படும் அனைத்து இரசாயனங்கள், இடைப்பட்ட உற்பத்தி பொருட்கள், முழுமையாக தயாரிக்கப்பட்ட பட்டாசுகள் ஆகியவை மிகவும் அபாயகரமான தன்மையுடையவை என்பதால் உரிய பாதுகாப்பு வழிமுறைகள் கடை பிடிக்கப்படாவிடில், அவை தொழிலாளர்களின் உயிருக்கும் பாதுகாப்பிற்கும் ஊறு விளைவிப்பதாக அமைந்து விடும். எனவே பட்டாசு தொழிற்சாலைகளில் தொழிலாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் பொருட்டு நான்கு மாதங்களுக்கு ஒரு முறை ஆய்வு செய்யப்பட்டு பட்டாசு தொழிற்சாலை நிர்வாகத்தினருக்கும் தொழிலாளர்களுக்கும் பாதுகாப்பான செயல்முறைகள் மற்றும்

கையாளும் வழிமுறைகள் குறித்து கற்றுத் தரப்படுகிறது. இந்த ஆண்டில், விதிமீறல்களில் ஈடுபட்ட பட்டாசு தொழிற்சாலை நிர்வாகத்தினருக்கு எதிராக 588 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு, நீதிமன்றங்களால் ரூ.21,22,500/- அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது.

விருதுநகர் மாவட்டத்தில், பண்டிகை காலங்களில் வருவாய், காவல், தீயணைப்பு மற்றும் மீட்புத்துறை அலுவலர்களுடன் கூடிய சிறப்பு குழுக்கள் அமைக்கப்பட்டு அம்மாவட்டத்திலுள்ள பட்டாசு தொழிற்சாலைகள் தீவிரமாக கண்காணிக்கப்பட்டு வருகின்றன. இக்குழு ஆய்வுகளின் போது பட்டாசு தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்படும் அபாயகரமான பொருட்களை பாதுகாப்பாக சேமிப்பது மற்றும் கையாளுவது குறித்து கண்காணிக்கப்படுகிறது. விதிமீறல்கள் காணப்படும் தொழிற்சாலைகளின் நிர்வாகத்தினர் மீது சட்ட ரீதியான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, அத்தொழிற்சாலைகளில் கண்டறியப்பட்ட கடும் விதிமீறல்களுக்கு உற்பத்தி தடையாணைகள் வழங்கப்பட்டன.

இந்த ஆண்டில், 598 குழு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## 2.4. பட்டாசு தொழிற்சாலைகளுக்கான சிறப்பு நடமாடும் கண்காணிப்பு குழு

பட்டாசு தொழிற்சாலைகள் அபாயகரமானவை மட்டுமின்றி அதிகப்படியான தொழிலாளர்களை கொண்டவையாகும். விருதுநகர் மாவட்டத்தில் அதிக எண்ணிக்கையில் பட்டாசு தொழிற்சாலைகள் இயங்கி வருவதால், பாதுகாப்பு வழிமுறைகளை கூடுதல் முனைப்புடன் நடைமுறைப்படுத்தி, பாதுகாப்பான பணி நிலைமைகளை உறுதி செய்யும் வகையில் அத்தொழிற்சாலைகளை ஆய்வு செய்ய தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார கூடுதல் இயக்குநர் தலைமையில், பிரத்தியேகமாக ஒரு நடமாடும் கண்காணிப்பு குழு உருவாக்கப்பட்டுள்ளது. இக்குழு தொழிலாளர்களது பணி பாதுகாப்பை உறுதி செய்ய தொழிற்சாலைகளில் திடீர் ஆய்வுகளை மேற்கொள்வதோடு அங்குள்ள தொழிலாளர்கள் மற்றும் நிர்வாகத்தினருக்கு பாதுகாப்புடன் பணிபுரியும் வழிமுறைகள் குறித்து எடுத்துரைக்கிறது.

நடமாடும் கண்காணிப்பு குழு உருவாக்கப்பட்ட பின்னர், பட்டாசு தொழிற்சாலை நிர்வாகத்தினர் மற்றும் தொழிலாளர்கள், பாதுகாப்பு விதிமுறைகளை நன்கு

அறிந்துள்ளனர். 2013-ஆம் ஆண்டு முதல் இக்குழு 1,773 ஆய்வுகள் மேற்கொண்டு, விதிமீறல்கள் காணப்பட்ட தொழிற்சாலை நிர்வாகத்தினர் மீது சட்ட ரீதியான நடவடிக்கைகளை தொடர்ந்துள்ளது.

2016-17 ஆம் ஆண்டில், நிர்வாகத்தினர் மீது 50 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு, நீதிமன்றங்களால் ரூ.10,31,000/- அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது.

### 2.5. பட்டாசு தொழிலாளர்களுக்கான பயிற்சி மையம்

பட்டாசு தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்கள் பெரும்பாலும் படிப்பறிவு இல்லாதவர்களாகவும், இரசாயனங்களை பாதுகாப்பாக கையாளும் முறை மற்றும் இரசாயனங்களின் கூறுகள் குறித்து அறியாதவர்களாகவும் உள்ளதால் கடும் விபத்துகள் மற்றும் மரண விபத்துகள் அதிக எண்ணிக்கையில் நிகழ்கின்றன. பட்டாசு தொழிற்சாலைகளில் பணிபுரியும் ஃபோர்மேன்கள் / மேற்பார்வையாளர்களுக்கு பட்டாசு தயாரிப்பின்போது கடைபிடிக்க வேண்டிய பாதுகாப்பு செயல்முறைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் சிவகாசியில் ஒரு பாதுகாப்பு பயிற்சி மையம் உருவாக்கப்பட்டுள்ளது.

இம்மையத்தில் கீழ்கண்ட பாதுகாப்பு அம்சங்கள் குறித்த சிறப்பு பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

- இரசாயனங்களின் தன்மைகள்
- இரசாயனங்களை கையாளுதல்
- இரசாயனங்களின் கலவை
- இரசாயனங்களின் வேதி வினை
- பாதுகாப்பான செயல்முறைகள்

இப்பயிற்சி மையத்தில் 27 குழுக்களுக்கு வகுப்புகள் நடத்தப்பட்டு இதன் மூலம் 801 ஃபோர்மேன்கள் பயனடைந்துள்ளனர். 2016-17 ஆம் ஆண்டில், 40 ஒரு நாள் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு, 1,395 தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர்.

## 2.6. தொழிற்சாலைகளில் குழந்தை தொழிலாளர் முறை அகற்றுதல்

தொழிற்சாலைகள் சட்டம், 1948-ன் பிரிவு 67-ல் வரையறுக்கப்பட்டவாறு தொழிற்சாலைகளில் குழந்தை தொழிலாளர் பணியமர்த்தப்படுவதை தடுக்கும் வகையில், இவ்வியக்கக அலுவலர்களால் காலமுறைப்படி ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், ஒவ்வொரு

மாதமும் வருவாய் துறை, காவல் துறை மற்றும் தேசிய குழந்தை தொழிலாளர் திட்ட அலுவலர்களுடன் இணைந்து குழு ஆய்வுகளும் நடத்தப்படுகின்றன. 2016-17-ஆம் ஆண்டில் 1,272 குழு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, சட்ட விதிகளை மீறி செயல்பட்ட தொழிற்சாலை நிர்வாகத்தினர் மீது நீதிமன்றங்களில் 22 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. விதிகளை மீறி செயல்பட்ட தொழிற்சாலை நிர்வாகத்தினர் மீது ரூ.5,13,000/- அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது.

**2.7. புகார்களின் மீதான விசாரணை**

தொழிலாளர்கள், தொழிற்சங்கங்கள் மற்றும் பொது மக்களிடமிருந்து இவ்வியக்ககத்தில் பெறப்படும் புகார்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு, உடனுக்குடன் விசாரிக்கப்பட்டு குறைகளுக்கு தீர்வு காண உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 2016-17-ஆம் ஆண்டில் 560 புகார்கள் விசாரிக்கப்பட்டு தீர்வு காணப்பட்டுள்ளது.

**2.8. அபாயகரமான செயல்முறைகள் உள்ள தொழிற்சாலைகள்**

அபாயகரமான மூலப்பொருட்கள் மற்றும் / அல்லது இரசாயனங்களை சேமித்து வைக்கும் / கையாளும் பணிகளில்

ஈடுபடும் தொழிலாளர்களின் பாதுகாப்பிற்கும் உடல்நலத்திற்கும் ஊறு விளைவிக்கக் கூடிய தொழிற்சாலைகளும் சுற்றுச்சூழலுக்கு மாசு விளைவிக்கக் கூடிய தொழிற்சாலைகளும் பெரும் விபத்து மற்றும் பேரபாய தொழிற்சாலைகள் (major accident hazard units) என வகை படுத்தப்பட்டுள்ளன.

தொழிற்சாலைகள் சட்டத்தின் கீழ் 29 செயல்முறைகள், இடர்தரும் தொழில் செயல்முறைகளாக அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன. 31.03.2017 அன்றைய நிலையில் இம்மாநிலத்தில் 144 தொழிற்சாலைகள் பெரும் விபத்து மற்றும் பேரபாய தொழிற்சாலைகள் என கண்டறியப்பட்டுள்ளன.

இந்த ஆண்டில், பெரும் விபத்து மற்றும் பேரபாய தொழிற்சாலைகளிடமிருந்து 62 உள்வளாக அவசரகால ஆயத்த நிலை திட்டங்கள் இவ்வியக்ககத்தில் பெறப்பட்டு அவற்றில் 47 திட்டங்கள் சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளன. அவசர காலகட்டத்தில் ஏற்படக் கூடிய நடைமுறை பிரச்சினைகளை சரியாக அளவீடு செய்யும் பொருட்டு, தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்கக

அலுவலர்களின் மேற்பார்வையில் இத்தொழிற்சாலைகளில் மாதிரி ஒத்திகைகள் காலமுறைப்படி நடத்தப்படுகின்றன.

இந்த ஆண்டில், 131 மாதிரி ஒத்திகைகள் நடத்தப்பட்டுள்ளன.

**2.9. மனை மதிப்பீட்டுக்குழு**

இடர்தரும் செயல்முறைகளைக் கொண்ட தொழிற்சாலைகள் துவக்குவதற்கு அல்லது விரிவாக்கம் செய்வதற்கு அனுமதி கோரி தொழிற்சாலை நிர்வாகத்தினரால் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் மீது அரசுக்கு ஆலோசனை வழங்க, தொழிற்சாலைகள் சட்டம், 1948–ன் கீழ் வரையறுக்கப்பட்டவாறு 'மனை மதிப்பீட்டுக்குழு' ஒன்று மாநில அரசால் அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவானது விண்ணப்பங்களை கூர்ந்தாய்வு செய்வதோடு, பாதுகாப்பான சூழ்நிலை மற்றும் பாதுகாப்பான பணி செயல்முறைகளுடன் துவக்க நிலையிலிருந்தே இயங்குவதற்கு உரிய வழிமுறைகள் குறித்து இடர்தரும் செயல்முறைகளைக் கொண்ட தொழிற்சாலைகளுக்கு அறிவுரை வழங்குகிறது. 2016-17-ஆம் ஆண்டில் 26 விண்ணப்பங்கள் மனை மதிப்பீட்டுக்குழுவால் பரிசீலனை செய்யப்பட்டுள்ளன.

**2.10. கட்டடம் மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் (பணி முறைப்படுத்துதல் மற்றும் பணி நிலைமைகள்) சட்டம், 1996 மற்றும் தமிழ்நாடு கட்டடம் மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் (பணி முறைப்படுத்துதல் மற்றும் பணி நிலைமைகள்) விதிகள், 2006 மற்றும் அதனைச் சார்ந்த தொழிலாளர் சட்டங்களின் அமலாக்கம்**

2013–ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட கட்டடம் மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் சட்ட அமலாக்க பிரிவின் பிரதான பொறுப்பானது, கட்டடம் மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் (பணி முறைப்படுத்துதல் மற்றும் பணி நிலைமைகள்) சட்டம், 1996 மற்றும் தமிழ்நாடு கட்டடம் மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் (பணி முறைப்படுத்துதல் மற்றும் பணி நிலைமைகள்) விதிகள், 2006-ல் வரையறுக்கப்பட்டுள்ளவாறு கட்டுமான பணிகளில் ஈடுபட்டுள்ள கட்டுமான தொழிலாளர்களுக்கு அடிப்படை வசதிகள், பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் நல வசதிகள் வழங்கப்படுவதை உறுதி செய்வதாகும். அமலாக்க பணிகள் மட்டுமின்றி, கட்டுமான பணியிடங்களில் பாதுகாப்பை மேம்படுத்தி விபத்துகளை குறைப்பதற்காக, இப்பிரிவு அலுவலர்கள் கட்டுமான பணிகளில் ஈடுபட்டுள்ள நிறுவனத்தினர், ஒப்பந்ததாரர்கள் மற்றும் தொழிலாளர்களுக்கு

பாதுகாப்பு விழிப்புணர்வு பயிற்சிகளையும் வழங்கி வருகின்றனர்.

இதுநாள் வரை, 7,648 கட்டுமான நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டு, கட்டுமான தொழிலாளர்களின் பாதுகாப்பு மற்றும் நலவசதிகள் பணியிடங்களில் உறுதி செய்யப்பட்டுள்ளன. கட்டடம் மற்றும் இதர கட்டுமான பணியிடங்களில் ஒப்பந்த தொழிலாளர் சட்டம் மற்றும் மாநிலம் விட்டு மாநிலம் இடம்பெயரும் தொழிலாளர் சட்டம் ஆகிய சட்டங்களை அமலாக்கம் செய்ய தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்கக அலுவலர்களை பதிவு அலுவலர்களாகவும், உரிமம் வழங்கும் அலுவலர்களாகவும் நியமித்து, அரசாணை (நிலை) எண்.256, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை நாள்: 23.12.2016 மற்றும் அரசாணை (நிலை) எண்.1, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை நாள்: 03.01.2017 மூலம் ஆணையிடப்பட்டுள்ளது.

2016-17-ஆம் ஆண்டில், 1,161 கட்டுமான நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டு, 1,387 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. சட்டவிதிகளை மீறி செயல்பட்ட நிறுவனங்கள் மீது 178 வழக்குகள் தொடரப்பட்டு

நீதிமன்றங்களால் ரூ.1,73,000/- அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது.

கட்டட மற்றும் இதர கட்டுமான பணியிடங்களில் தொழிலாளர்களுக்கு நலவசதிகள் வழங்கப்படுவதை கண்காணிக்க இணை இயக்குநர் தலைமையில் சிறப்பு குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இக்குழுக்கள் முறை ஆய்வுகளோடு சிறப்பு ஆய்வுகளும் மேற்கொண்டு வருகின்றன. 2016-17-ஆம் ஆண்டில், 315 கட்டுமான பணியிடங்களில் இக்குழுக்களால் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, கட்டுமான பணியிடங்களில் நல வசதிகள் வழங்காத நிறுவனத்தினர் மீது 40 வழக்குகள் தொடரப்பட்டுள்ளன.

### 2.10.1. கட்டடம் மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு விழிப்புணர்வு மேம்பாடு

கட்டுமான இடங்கள், அதிகப்படியான தொழிலாளர்கள் செறிந்துள்ளதாகவும், கல்வியறிவு இல்லாத மற்றும் வெளி மாநிலங்களைச் சேர்ந்த தொழிலாளர்களை அதிகளவில் பணியமர்த்தும் இடங்களாக இருப்பதாலும், கட்டட நிறுவனத்தினரால் போதுமான பாதுகாப்பு விதிமுறைகள்

பின்பற்றப்படாததனாலும் அதிக விபத்துக்கள் நிகழ வாய்ப்புள்ள இடங்களாக உள்ளன. கட்டுமான பணிகளில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கும், நிர்வாகத்தினருக்கும் பாதுகாப்பு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் இவ்வியக்கக கட்டடம் மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் சட்ட அமலாக்கப் பிரிவு துணை இயக்குநர்களால் ஒவ்வொரு மாதமும் தலா இரண்டு பாதுகாப்பு விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்படுகின்றன. பிற மாநில தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு பயிற்சி அவர்களது தாய்மொழியிலேயே அளிக்கப்படுகிறது.

## 2.11. கட்டுமான தொழிலாளர்கள் பாதுகாப்பிற்கு 2016–17–ல் எடுக்கப்பட்ட சிறப்பு முயற்சிகள்

❖ கட்டுமான பணிகளில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கும் நிறுவனத்தினருக்கும் பாதுகாப்பு விழிப்புணர்வு ஏற்படுத்த தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் நல வாரிய நிதி பயன்படுத்தப்பட்டது.

❖ பணியிட பாதுகாப்பு குறித்து கட்டுமான தொழிலாளர்கள் மற்றும் நிர்வாகத்தினரிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த, கட்டுமான பணி பாதுகாப்பு குறித்த குறும்படம், புகைப்படங்களுடன் கூடிய மாதிரி பாதுகாப்பு காட்சி பலகைகள் மற்றும் '*கட்டுமான பணியிடங்களில் பாதுகாப்பு செயல்முறைகள் குறித்த நிலையான நெறிமுறைகள்*' ஆகியவை தயார் செய்யப்பட்டு வருகின்றன.

2016-17–ஆம் ஆண்டில், தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் நல வாரிய நிதியினைப் பயன்படுத்தி 7,563 தொழிலாளர்கள் பயன்பெறும் வகையில் 94 பாதுகாப்பு பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டுள்ளன.

## 2.12. தொழிற்சாலைகளில் உடல்நலம் மற்றும் பாதுகாப்பு மேம்பாடு குறித்த செயல்பாடுகள்

### 2.12.1. உடல்நல மேம்பாட்டு செயல்பாடுகள்

இவ்வியக்ககத்தில் ஒரு தலைமை மருத்துவ அலுவலர் மற்றும் எட்டு உதவி மருத்துவ அலுவலர்களுடன் இயங்கி வரும் மருத்துவ பிரிவானது, அபாயகரமான மற்றும் இடர்தரும் செயல்முறைகளில் ஈடுபடும் தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்கள் மற்றும் உணவகங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு காலமுறைப்படி மருத்துவ பரிசோதனை செய்து, மருத்துவ அறிவுரைகள் மற்றும் இதர தடுப்பு நடவடிக்கைகள் குறித்து நிர்வாகத்தினருக்கு ஆலோசனைகள் வழங்கும் பணியை மேற்கொண்டு வருகிறது. குறிப்பிட்ட சில தொழிற்சாலைகளில் பணிபுரியும் வளரிளம் பருவ தொழிலாளர்களுக்கு மருத்துவ அலுவலர்களால் மருத்துவ தகுதிச்சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. குழந்தை

தொழிலாளர்களின் வயதினை உறுதி செய்திடும் பொருட்டு குழந்தை தொழிலாளர் ஆய்வுக் குழுவுடன் மருத்துவ அலுவலர்கள் செல்கின்றனர்.

2016-17-ஆம் ஆண்டில் மருத்துவ அலுவலர்கள் அபாயகரமான மற்றும் இடர்தரும் செயல்முறைகள் கொண்ட தொழிற்சாலைகளில் பணிபுரியும் 44,670 தொழிலாளர்களுக்கும் உணவகங்களில் பணிபுரியும் 11,824 தொழிலாளர்களுக்கும் மருத்துவ சான்றிதழ்களை வழங்கி உள்ளனர். மேலும், 31,489 வளரிளம் பருவத்தினருக்கு உடல் தகுதி சான்றிதழ்களையும் வழங்கியுள்ளனர்.

### 2.12.2. இரைச்சலின் அளவினை கண்காணித்தல்

சில தொழிற்சாலைகளில் நிலவும் அதிகப்படியான இரைச்சலால் தொழிலாளர்களுக்கு உடல்நல கேடு உருவாகும். ஒலி அளப்பான் மூலம் இரைச்சலை அளவிட்டு, தொழிலாளர்களை அதிகப்படியான இரைச்சலின் பாதிப்பிலிருந்து பாதுகாத்திட இவ்வியக்ககம் நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறது. ஆய்வுகளின் போது இது சம்பந்தமாக தொழிற்சாலை நிர்வாகத்தினருக்கு தக்க

அறிவுரைகள் வழங்கப்படுவதுடன், தேவைப்படும் நிகழ்வுகளில் சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

### 2.12.3. பாதுகாப்பு விழிப்புணர்வு மேம்பாடு மற்றும் பாதுகாப்பு பயிற்சி

பாதுகாப்பு பயிற்சி வகுப்புகள், பாதுகாப்பு விழிப்புணர்வு முகாம்கள், பாதுகாப்பு ஒத்திகைகள் போன்ற பாதுகாப்பு மேம்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் இவ்வியக்கக அலுவலர்கள் விபத்துக்களைக் குறைக்கும் தீவிர முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர். சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மண்டலங்களில் மூன்று பாதுகாப்பு பிரச்சாரக்குழுக்கள் இவ்வியக்ககத்தால் உருவாக்கப்பட்டு, இக்குழுக்கள் இரசாயனம், பட்டாசு, தோல் பதனிடும் தொழிற்சாலைகள், வெளுத்தல் மற்றும் சாயப்பட்டறை தொழிற்சாலைகளுக்கு காலமுறையடிப்படையில் சென்று அத்தொழிற்சாலைகளின் பாதுகாப்பு வழிமுறைகளை ஆய்வு செய்து, அத்தொழிற்சாலைகள் போதுமான பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை கடைபிடிக்காவிடில் நிர்வாகத்தினர் மற்றும் தொழிலாளர்கள் எதிர்நோக்கக்கூடிய திடீர் அபாயங்கள் குறித்து எடுத்துரைக்கின்றன.

2016-17-ஆம் ஆண்டில் இக்குழுக்களால் 92 பாதுகாப்பு பிரச்சாரங்கள் நடத்தப்பட்டு, 4,019 நபர்கள் பயனடைந்துள்ளனர்.

பாதுகாப்பு விழிப்புணர்வை ஏற்படுத்தும் செயல்பாடுகளில் ஈடுபட்டு பாதுகாப்பு கருத்தரங்குகளை நடத்தி வரும் தேசிய பாதுகாப்பு குழுமம் மற்றும் அரசு சாரா தன்னார்வ தொண்டு நிறுவனங்களை தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம் ஒருங்கிணைத்து தொழிற்சாலை நிர்வாகத்தினர் மற்றும் அனைத்து தரப்பு தொழிலாளர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறது. 2016-17-ஆம் ஆண்டில் எட்டு கருத்தரங்குகள் நடத்தப்பட்டு 1,625 தொழிலாளர்கள் பயனடைந்தனர்.

இவ்வியக்கக அலுவலர்களால் தொழிற்சாலை வளாகங்களிலேயே, பாதுகாப்பு பயிற்சி வகுப்புகள் காலமுறைப்படி நடத்தப்படுகின்றன. இந்த ஆண்டில், 516 பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு 24,375 தொழிலாளர்கள் பயனடைந்தனர்.

## 2.13. அழுத்தக்கலன் பாதுகாப்பினை உறுதி செய்தல்

பல்வேறு தொழிலாளர் நல சட்டங்களை அமல்படுத்துவதோடு மட்டுமல்லாமல் தொழிற்சாலைகளில் நிறுவப்பட்டுள்ள அழுத்தக்கலன்கள் பாதுகாப்பாக செயல்படுவதை உறுதி செய்யும் பொறுப்பும் இவ்வியக்கக அலுவலர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது. இந்திய கொதிகலன்கள் சட்டத்தின் கீழ்வரும் நீராவி கொதிகலன்களைத் தவிர்த்து, வாயு மண்டல காற்று அழுத்தத்திற்கு மேல் (above atmospheric pressure) செயல்படும் அனைத்து அழுத்தக்கலன்களிலும் ஆறு மாதங்களுக்கு ஒரு முறை வெளிப்புற சோதனையும், ஆண்டுக்கு ஒரு முறை உட்புற சோதனையும் அல்லது இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை நீரழுத்த சோதனையும் அல்லது நான்காண்டுகளுக்கு ஒருமுறை நுண்ணொலி சோதனையும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 2016-17-ஆம் ஆண்டில் மொத்தம் 1,19,275 வெளிப்புற, 1,480 உட்புற, 17,612 நீர் அழுத்த மற்றும் 6,989 நுண்ணொலி சோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## 2.14. தொகுப்பு தனிநபர் விபத்து காப்பீட்டுத் திட்டம்

மாண்பமை உச்சநீதிமன்ற ஆணையின்படி, தீப்பெட்டி மற்றும் பட்டாசு தொழிற்சாலைகளில் ஏற்படும் விபத்தில் மரணமடையும் தொழிலாளர்களின் வாரிசுதாரர்களுக்கு நிவாரணமாக ரூ.50,000/- வழங்க வகை செய்யும் புதிய தொகுப்பு தனிநபர் விபத்து காப்பீட்டுத் திட்டமானது தமிழக அரசால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. பல்வேறு காப்பீட்டு நிறுவனங்கள், பட்டாசு மற்றும் தீப்பெட்டி உற்பத்தியாளர் சங்க நிர்வாகிகள் ஆகியோருடன் கலந்தாலோசிக்கப்பட்டு இத்திட்டத்திற்கான தவணைத்தொகை (Premium) ஒவ்வொரு வருடமும் நிர்ணயம் செய்யப்படுகிறது. ஒவ்வொரு தொழிலாளிக்கும் தவணைத்தொகை செலுத்த வேண்டியது நிர்வாகத்தின் பொறுப்பு என்பது சட்டமாக்கப்பட்டுள்ளது. இந்த நிவாரணமானது தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்டம் (E.S.I Scheme) மற்றும் பணியாளர் இழப்பீட்டு சட்டத்தின் கீழ் வழங்கப்படும் நிவாரணங்கள் அல்லாது கூடுதலாக வழங்கப்படுவதாகும்.

நடப்பு ஆண்டில் யாதொரு நாளில் பணிபுரிந்துள்ள தொழிலாளர்களின் அதிகபட்ச எண்ணிக்கையோடு

கூடுதலாக 10% எண்ணிக்கையிலான தொழிலாளர்கள் இக்காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் சேர்க்கப்பட வேண்டும். தற்போது, இக்காப்பீட்டுத் திட்டம் புதுப்பிக்கப்பட்டு, பட்டாசு தொழிற்சாலைகளுக்கான காப்பீட்டுத் திட்டம் தி ஓரியண்டல் இன்ஷூரன்ஸ் கம்பெனி, சிவகாசி என்ற காப்பீட்டு நிறுவனத்தின் மூலமாகவும், தீப்பெட்டி தொழிற்சாலைகளுக்கான காப்பீட்டுத் திட்டம் தி நியூ இந்தியா அஷூரன்ஸ் கம்பெனி, திருத்தங்கல் என்ற காப்பீட்டு நிறுவனத்தின் மூலமாகவும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

## 2.15. பாதுகாப்பு விருதுகள் வழங்கும் திட்டம்

### 2.15.1. மாநில பாதுகாப்பு விருதுகள்

விபத்து தடுப்பில் சிறப்பு முயற்சிகளை மேற்கொண்டு தொழிலாளர்களிடையே பாதுகாப்பு உணர்வை வளர்த்து வரும் தொழிற்சாலை நிர்வாகத்தினரை அங்கீகரித்து, சிறந்த பாதுகாப்பு நெறிமுறைகளைப் பின்பற்றி விபத்தில்லா நிலையை எட்டும் நோக்குடன் அவர்களை ஊக்குவிக்கும் விதமாக ஒவ்வொரு வருடமும், மாநில பாதுகாப்பு விருதுகள் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ் விபத்து நிகழ்வுகளைக் குறைக்கும் விதமாக செயல்படும் பல்வேறு

வகை தொழிற்சாலைகளுக்கு ஆண்டுதோறும் முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் பரிசுகளாக ஒவ்வொரு பிரிவிலும் முறையே 90 விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தின் கீழ் தொழிற்சாலை நிர்வாகத்தினருக்கு வழங்கப்படும் முதல் பரிசுக்கான வெள்ளி கேடயத்தின் மதிப்பு ரூ.2500/- லிருந்து ரூ.5000/-ஆகவும், இரண்டாம் பரிசுக்கான வெள்ளி கேடயத்தின் மதிப்பு ரூ.1500/-லிருந்து ரூ.4000/-ஆகவும் 2011–ஆம் ஆண்டு முதல் உயர்த்தப்பட்டுள்ளது.

06.05.2017 அன்று நடைபெற்ற விழாவில், மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களால் 77 தொழிற்சாலை நிர்வாகத்தினருக்கு 126 மாநில பாதுகாப்பு விருதுகள் வழங்கப்பட்டன.

**2.15.2. உயர்ந்த உழைப்பாளர் விருதுகள்**

தொழிற்சாலைகளில் உற்பத்தி திறனை உயர்த்துதல், பணி சூழலை மேம்படுத்துதல் மற்றும் பாதுகாப்பு தரத்தை உயர்த்துதல் ஆகியவற்றில் சிறந்த ஆலோசனைகளை வழங்கும் தொழிலாளர்களை அங்கீகரித்து ஊக்குவிக்கும்

வண்ணம், ஆண்டுதோறும் “தமிழக அரசின் உயர்ந்த உழைப்பாளர் விருதுகள்” வழங்கப்பட்டு வருகின்றன. பாதுகாப்பு மற்றும் உற்பத்தி திறனில் தொழிலாளர்களின் பங்களிப்பை அதிகரிக்கும் விதமாக, 2012–ஆம் ஆண்டு முதல் இவ்விருது பெறும் தொழிலாளர்களின் எண்ணிக்கை 24-லிருந்து 43-ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

06.05.2017 அன்று நடைபெற்ற விழாவில், மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களால் 94 தொழிலாளர்களுக்கு உயர்ந்த உழைப்பாளர் விருதுகள் வழங்கப்பட்டன.

## 2.16. சிறப்பு முயற்சிகள் – 2016–17

### 2.16.1. நச்சு மற்றும் தீங்கு விளைவிக்கும் வாயுக்களுக்கான இணைய கண்காணிப்பு மையம் (Online Monitoring Centre)

தொழிற்சாலைகளில் வெளியாகும் நச்சு மற்றும் தீங்கு விளைவிக்கும் வாயுக்களை கண்காணிக்க தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநர் அலுவலகத்தில் ஒரு இணைய கண்காணிப்பு மையம் உருவாக்கப்பட்டு வருகிறது. தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் நச்சு மற்றும் தீங்கு

விளைவிக்கும் வாயுக்களின் அடர்த்தி, நிகழ்நேர மதிப்பீட்டின்படி இணையதளம் மூலம் இக்கண்காணிப்பு மையத்தில் கண்காணிக்கப்பட உள்ளது. இது போன்ற தொடர் கண்காணிப்பின் மூலம், பணி இடங்களில் நச்சு மற்றும் தீங்கு விளைவிக்கும் வாயுக்கள் அதிக அளவில் வெளியேறும் நேர்வுகளில் அவற்றைக் கண்டறிந்து, தொழிலாளர்கள் மற்றும் பொதுமக்களின் உடல்நலத்தை பாதுகாக்கும் வகையில் தொழிற்சாலை நிர்வாகத்தினரால் உடனடி தடுப்பு நடவடிக்கைகள் எடுக்க இயலும். இடர்தரும் தொழிற்சாலைகள் (Hazardous Industries) சிலவற்றில் இத்திட்டத்தின் சோதனை முன்னோட்டம் தற்போது நடைபெற்று வருகிறது.

### 2.16.2. தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககத்திற்கான வலைதளம்

தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககத்திற்கென வலைதளம் ஏற்படுத்தப்பட்டு, 04.03.2017 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. இவ்வலைதளமானது இயக்ககத்தின் செயல்பாடுகளை முறைப்படுத்துவதோடு

தொழில் முனைவோருக்கு சுலபமாக தொழில் நடத்தும் வசதிகளை (Ease of Doing Business) வழங்குவதாகவும் இருக்கும். வலைதளத்தின் நிலையான பதிவுகளில் பலதரப்பட்ட உற்பத்தி பணிகள் குறித்த பாதுகாப்பு நெறிமுறைகள் மற்றும் தரக்கட்டுப்பாடுகள், தேசிய மற்றும் சர்வதேச பாதுகாப்பு தரக்கட்டுப்பாடுகள், இயக்ககத்தின் கட்டமைப்பு மற்றும் பல்வேறு தொழிலாளர் நல சட்டங்களின் முக்கிய கூறுகள் காணப்படுகின்றன. தொழிலாளர்கள், நிர்வாகத்தினர் மற்றும் பொதுமக்களுக்கு இந்த வலைதள தகவல் பக்கங்கள் மிகவும் பயனுள்ளவையாக இருக்கும். தொழிலாளர்கள் தங்கள் குறைகளை வலைதளம் மூலமாக பதிவு செய்து கொள்ளவும் உடனடி தீர்வு காணவும் இந்த வலைதளத்தில் வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

இந்த வலைதளத்தின் மூலம் இயக்ககத்தின் கீழ்கண்ட சேவைகளை இணையதளம் வழியாகவே அந்தந்த நேர்விற்கேற்ப கட்டணம் செலுத்தி பெற இயலும்.

- ❖ தொழிற்சாலைகள் சட்டம், 1948-ன் கீழ் உரிமம் வழங்குதல்
- ❖ தொழிற்சாலைகள் சட்டம், 1948-ன் கீழ் வரைபடங்கள் ஒப்புதல் அளித்தல்

❖ கட்டடம் மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் (பணி முறைப்படுத்துதல் மற்றும் பணி நிலைமைகள்) சட்டம், 1996–ன் கீழ் கட்டுமான நிறுவனங்களைப் பதிவு செய்தல்

❖ ஒப்பந்த தொழிலாளர் (முறைப்படுத்துதல் மற்றும் நீக்குதல்) சட்டம், 1970–ன் கீழ் பதிவு செய்தல் மற்றும் உரிமம் வழங்குதல்

❖ மாநிலம் விட்டு மாநிலம் இடம் பெயரும் தொழிலாளர்கள் (பணி முறைப்படுத்துதல் மற்றும் பணி நிலைமைகள்) சட்டம், 1979–ன் கீழ் பதிவு செய்தல் மற்றும் உரிமம் வழங்குதல்

❖ பல்வேறு தொழிலாளர் நல சட்டங்களின் கீழான விவர அறிக்கைகள் தாக்கல் செய்தல்

❖ அழுத்தக் கலன்களுக்கான சோதனைச் சான்றிதழ் வழங்குதல்

அனைத்து ஒப்புதல்களும் விண்ணப்பம் பெறப்பட்ட நாளிலிருந்து 30 தினங்களுக்குள் இவ்வியக்கக அலுவலர்களின் மின்கையொப்பத்துடன் (Digital Signature) வலைதளம் மூலமாகவே வழங்கப்படும்.

# 3. வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

## வேலைவாய்ப்பு பிரிவு

மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மாணவர்கள் மற்றும் வேலைநாடுநர்களுக்கு உதவும் வகையில் தொழில்நெறி வழிகாட்டுதல், தொழில்நெறி ஆலோசனை வழங்குதல் மற்றும் தொழில் திறன் மதிப்பீடு செய்தல் ஆகியவற்றில் முக்கிய கவனம் செலுத்துகின்றன. இளைஞர்களின் வேலை பெறும் திறனை அதிகரிப்பதில் சிறப்பையும் சீர்மையையும் கொண்டுவரும் பொருட்டு அனைத்து மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களாக மாற்றப்பட்டுள்ளன. அனைத்து வேலைவாய்ப்பு அலுவலகங்களும் வேலைநாடுநர்களைப் பதிவு செய்தல், புதுப்பித்தல், கூடுதல் பதிவு விவரங்களை முழுமைப்படுத்துதல் மற்றும் வேலையளிப்பவர்களுக்கு வேலைநாடுநர்களை பரிந்துரைத்தல் போன்ற பணிகளையும் செய்கின்றன. இப்பணிகள் இணையதளம் வாயிலாக வழங்கப்படுவதால், வெளிப்படைத் தன்மை மற்றும் சிறப்பான செயல்பாடுகளுடன் எளிதாகவும் உள்ளது. தேசிய தொழில்நெறி சேவையின் முக்கிய அங்கமாக விளங்கும் தேசிய தொழில்நெறி வழிகாட்டும்

இணையதளமானது காலி பணியிடங்கள் மற்றும் வேலையளிப்பவர்கள் குறித்த விவரங்களை வேலைநாடுநர்கள் பெற உதவுகிறது. வேலைவாய்ப்பு சந்தை நிலவரம் குறித்த தகவல்களை சேகரித்தல் மற்றும் தொகுத்தலானது தொழில் நெறி வழிகாட்டி மையங்களுக்கு வருகை தரும் வேலைநாடுநர்கள் மற்றும் மாணவர்களுக்கு தொழில் நெறி குறித்த தகவல்களை வழங்கிட உதவுகிறது.

### 3.1. நிர்வாக அமைப்பு

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்ககம், இயக்குநர் அவர்களின் தலைமையில் இயங்குகிறது. அவருக்கு உதவியாக இரண்டு இணை இயக்குநர்கள், நான்கு துணை இயக்குநர்கள் மற்றும் இதர அலுவலர்கள் உள்ளனர். சென்னை, கோயம்புத்தூர், மதுரை மற்றும் திருச்சிராப்பள்ளியில் உள்ள நான்கு மண்டல இணை இயக்குநர்களால் வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மற்றும் சிறப்பு அலுவலகங்களின் செயல்பாடுகள் கண்காணிக்கப்பட்டு வருகின்றன.

ஒவ்வொரு மாவட்டத்திலும் இயங்கும் ஒவ்வொரு வேலைவாய்ப்பு அலுவலகத்திலும் எழுதப்படிக்கத்

தெரியாதவர்கள் முதல் பட்டப்படிப்பு தகுதியுள்ளவர்கள் வரை பதிவு செய்து கொள்கின்றனர். சென்னை மாவட்டத்தில், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் தவிர கூடுதலாக தொழில்நுட்ப கல்வி தகுதியுடையவர்களுக்கென ஒரு மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் மற்றும் தொழில் திறனற்றோருக்கான ஒரு மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் என இரண்டு வேலைவாய்ப்பு அலுவலகங்கள் கூடுதலாக செயல்படுகின்றன. சென்னையில் மாற்றுத் திறனாளிகளுக்கென ஒரு சிறப்பு வேலைவாய்ப்பு அலுவலகம் இயங்கி வருகிறது. இது தவிர இரண்டு தொழில் மற்றும் செயல் வேலைவாய்ப்பு அலுவலகங்கள் சென்னையிலும் மதுரையிலும் இயங்கி வருகின்றன.

ஐந்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான பயிற்றுவிப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்கள் கோயம்புத்தூர், கடலூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி மற்றும் வேலூர் மாவட்டங்களில் உள்ள மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலக வளாகங்களில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின வேலைநாடுநர்களுக்கு வழிகாட்டி உதவும் வகையில் செயல்பட்டு வருகின்றன. பழங்குடியின மக்களின் நலனுக்காக, பழங்குடியினருக்கான சிறப்பு தொழில்நெறி

வழிகாட்டும் மையம் ஒன்றும் உதகமண்டலத்தில் இயங்கிவருகிறது. இவ்வாறாக மொத்தம் **37** மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்கள், ஐந்து ஆதிதிராவிடர், பழங்குடியினருக்கான பயிற்றுவிப்பு மற்றும் வழிகாட்டும் மையங்கள், பழங்குடி இனத்தவருக்கான ஒரு சிறப்பு தொழில்நெறி வழிகாட்டும் மையம் ஆகியவை கீழ்வருமாறு செயல்பட்டு வருகின்றன.

| வ.எண். | வேலைவாய்ப்பு அலுவலகங்கள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்கள் | 32 |
| 2 | தொழில் மற்றும் செயல் வேலைவாய்ப்பு அலுவலங்கள் | 2 |
| 3 | மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு வேலைவாய்ப்பு அலுவலகம் | 1 |
| 4 | மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் (தொழில் நுட்பம்) | 1 |
| 5 | மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் (தொழில் திறனற்றோர்) | 1 |
| | மொத்தம் | 37 |
| **வ.எண்.** | **பயிற்றுவிப்பு மற்றும் வழிகாட்டும் மையங்கள்** | **எண்ணிக்கை** |
| 6 | ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான பயிற்றுவிப்பு மற்றும் வழிகாட்டும் மையங்கள் | 5 |
| 7 | பழங்குடியினருக்கான சிறப்பு தொழில் நெறி வழிகாட்டும் மையம், உதகமண்டலம் | 1 |

## 3.2. மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களின் பணிகள்

- வேலைநாடுநர்களை பதிவு செய்தல்
- பதிவினை புதுப்பித்தல்
- மனுதாரர்களின் பதிவு விவரங்களை முழுமைப்படுத்துதல்
- பதிவு செய்த மனுதாரர்களை அரசு மற்றும் தனியார் துறை காலி பணியிடங்களுக்கு பரிந்துரைத்தல்
- போட்டித் தேர்வுகளில் கலந்து கொள்ள இலவச பயிற்சி வகுப்புகள் நடத்துதல்
- வேலைநாடுநர் மற்றும் வேலையளிப்போர் சந்திப்புக்கு ஏற்பாடு செய்தல்
- வேலைநாடுநர்கள் மற்றும் மாணவர்களது திறனை மதிப்பீடு செய்தல்
- திறன் பயிற்சிக்கு வேலைநாடுநர்களை பதிவு செய்தல்
- அயல்நாட்டு வேலைவாய்ப்பிற்கு பதிவு செய்தல் மற்றும் வழிகாட்டுதல்
- தனியார் துறைகளில் பணியமர்த்தம் செய்வதற்காக வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்துதல்
- தகுதியுள்ள வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு உதவித்தொகை வழங்குதல்
- தனியார் துறையில் மாற்றுத்திறனாளிகளுக்கான வேலைவாய்ப்புகளைக் கண்டறிந்து பணியமர்த்தல்

- தொழில்நெறி வழிகாட்டும் மையங்கள் வாயிலாக தொழில்திறன் பயிற்சி அளித்தல்
- வேலை நிலவர தகவல்களை சேகரித்தல் மற்றும் தொகுத்தல்

**3.3. பதிவு மற்றும் பணியமர்த்தல்**

**10**–ஆம் வகுப்பு மற்றும் **12**–ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணவர்கள் அவர்கள் பயிலும் பள்ளி வளாகத்திலேயே www.tnvelaivaaippu.gov.in என்ற அரசு இணைய தளத்தின் மூலம் பதிவு செய்து கொள்வதற்காக அரசால் அறிமுகப்படுத்தப்பட்ட திட்டமானது கால விரயத்தைத் தவிர்த்து பதிவு செய்யும் முறையை எளிதாக்கியுள்ளது. இதற்கு முன்னர் **10** மற்றும் **12**–ஆம் வகுப்பு தேர்வு முடிவுகள் அறிவிக்கப்பட்டவுடன் மாணவர்கள் அவர்களின் கல்வித்தகுதிகளை வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்வதற்காக பல மணி நேரம் நீண்ட வரிசைகளில் காத்திருக்க வேண்டியிருந்தது.

**31.03.2017** அன்றைய நிலவரப்படி வேலைவாய்ப்பு அலுவலகங்களின் நடப்பு பதிவேட்டில் உள்ள மொத்தம் **81,30,025** பதிவு செய்திருப்போரில் பணிபுரியும் வயதிற்குள், அதாவது **18** முதல் **57** வயதிற்குள் **61,02,702** நபர்களும்,

**18** வயதிற்கு குறைவாக **20,22,579** நபர்களும், **57** வயதிற்கு மேல் **4,744** நபர்களும் உள்ளனர். **2016–17–**ஆம் ஆண்டில் வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவுசெய்து கொண்டுள்ள **13,62,982** வேலைநாடுநர்களில் **12,19,570** நபர்கள் பத்தாம் வகுப்பு மற்றும் **12–**ஆம் வகுப்பு கல்வித்தகுதியினை பள்ளிகளிலேயே ஆன்லைன் மூலம் பதிவு செய்து கொண்ட மாணவ / மாணவியராவர்.

**2016–17–**ஆம் ஆண்டில் வேலைவாய்ப்பு அலுவலகங்களின் வாயிலாக அரசுத்துறையில் **5,802** நபர்களும், வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மூலம் நடத்தப்பெற்ற வேலைவாய்ப்பு முகாம்கள் மூலமாக பல்வேறு தனியார் நிறுவனங்களில் 20,778 நபர்களும் பணியமர்த்தம் செய்யப்பட்டுள்ளனர்.

### 3.4. தொழில்நெறி வழிகாட்டுதல்

தொழில்நெறி வழிகாட்டுதல் என்பது வேலைவாய்ப்புத் துறையின் முக்கிய பணிகளில் ஒன்றாக ஏற்கனவே இருந்துவந்த நிலையில் தற்போது அனைத்து வேலைவாய்ப்பு அலுவலகங்களும் தொழில்நெறி வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனை மையங்களாக மாற்றப்பட்டுள்ளன. தொழில்நெறி

வழிகாட்டும் பிரிவுகள் சென்னை, காஞ்சிபுரம், கோயம்புத்தூர், திண்டுக்கல், ஈரோடு, மதுரை, புதுக்கோட்டை, நாகர்கோவில், இராமநாதபுரம், சேலம், சிவகங்கை, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, தூத்துக்குடி, வேலூர், விருதுநகர் ஆகிய மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பிரத்தியேகமாக செயல்பட்டு வருகின்றன.

தொழில்நெறி வழிகாட்டும் பிரிவுகள் பின்வரும் முக்கிய பணிகளை ஆற்றுகின்றன : -

- பதிவாளர்களுக்கு வழிகாட்டுதல்
- தனிநபர் மற்றும் குழுவிற்கு தொழில் நெறி வழிகாட்டுதல்
- தனிநபர் ஆலோசனை
- தொழில்நெறி வழிகாட்டும் உரைகள், தொழில்நெறி வழிகாட்டி கண்காட்சிகள் மற்றும் கருத்தரங்குகள் ஏற்பாடு செய்தல்
- கல்வி நிறுவனங்களிலும் வெளியிடங்களிலும் தொழில்நெறி வழிகாட்டும் நிகழ்ச்சிகள் நடத்துதல்
- ஆசிரியர்களுக்கு தொழில்நெறி வழிகாட்டுநருக்கான பயிற்சி வழங்குதல்
- பள்ளிகளில் தொழில்நெறி முனைகள் (Career corners) அமைத்தல்

- போட்டித் தேர்வுகளுக்கான இலவச பயிற்சி வகுப்புகள் நடத்துதல்

- தொழில்நெறி வழிகாட்டும் கையேடுகள் வெளியிடுதல்.

### 3.4.1. தொழில்நெறி கண்காட்சிகள்

மாணவர்கள் தங்களுக்கு உகந்த வேலை மற்றும் கல்வியை தேர்ந்தெடுக்க வசதியாக ஒவ்வொரு வருடமும் கல்லூரிகளில் தொழில்நெறி கண்காட்சி நடத்துவதற்காகவும், தொழில் நெறி வழிகாட்டல் பணிக்காகவும், பல்வேறு வேலைவாய்ப்புகள் மற்றும் வாழ்க்கைத் தொழில் பற்றி ஆலோசனைகள் வழங்கவும் ஒவ்வொரு மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கும் ரூ.10,000/– அரசால் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. **2016–17**–ஆம் ஆண்டில் கல்வி நிறுவனங்களில் **680** தொழில்நெறி வழிகாட்டும் உரைகள், கல்லூரிகளில் **32** தொழில் நெறி வழிகாட்டும் கண்காட்சிகள் நடத்தப்பட்டதுடன், **586** வேலைநாடுநர்கள் சுய தொழில் தொடங்குவதற்கு வழிகாட்டப்பட்டனர்.

### 3.5. பயிற்சி வகுப்புகள் (தன்னார்வ பயிலும் வட்டம்)

வேலைநாடுநர்கள் அரசு பணிகளுக்காக நடைபெறும் போட்டித் தேர்வுகளில் கலந்து கொண்டு பயன்பெறவும் பணி

நியமனம் பெறவும், **32** மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில் தன்னார்வ பயிலும் வட்டங்கள் அரசால் அமைக்கப்பட்டுள்ளன. தன்னார்வ பயிலும் வட்ட நூலகத்தில் வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கு வருகைபுரியும் இளைஞர்கள் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் இதழ்கள், செய்திதாள்கள், தற்போதைய புத்தக வெளியீடுகள், படிப்பு குறிப்புகள் மற்றும் முந்தைய தேர்வு வினாத்தாள்கள் போன்றவை வைக்கப்பட்டு உள்ளன. வேலைநாடுநர்களுக்கு அனைத்து அரசு பணிக்கான போட்டித் தேர்வுகள் குறித்த விவரங்கள் அளிக்கப்பட்டு, அத்தேர்வுகளுக்கு விண்ணப்பிக்க ஊக்குவிக்கப்படுகின்றனர். அரசுப் பணியாளர் தேர்வாணையம் மற்றும் பிற தேர்வு நிறுவனங்கள் நடத்தும் தேர்வுகளுக்கு பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுவதுடன் மாதிரி தேர்வுகளும் நடத்தப்படுகின்றன. இப்பயிற்சி வகுப்புகள் நடத்துவதற்கு அரசால் ஆண்டுதோறும் ரூ.**1.00** கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

**2016–17**–ஆம் ஆண்டில் போட்டித் தேர்வுக்காக நடத்தப்பட்ட **120** இலவச பயிற்சி வகுப்புகளில் கலந்து கொண்ட **7,987** நபர்களில் **195** வேலைநாடுநர்கள் வெற்றி பெற்றுள்ளனர்.

### 3.6. தேசிய தொழில்நெறி சேவை

தேசிய வேலைவாய்ப்பு சேவை, தேசிய தொழில்நெறி சேவையாக மாற்றப்பட்டதினால் அனைத்து வேலைவாய்ப்பு அலுவலகங்களும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களாக மாற்றப்பட்டுள்ளன. தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி உள்ளூர் இளைஞர்களையும் வேலைநாடுநர்களையும் பரந்துபட்ட வேலைவாய்ப்புகளுடன் வெளிப்படையாக மற்றும் சீரிய முறையில் இணைக்கும் நோக்கத்துடன் தொழில்நெறி வழிகாட்டி மையம் செயல்படுகிறது. தமிழ் நாட்டில் மத்திய அரசின் நிதி உதவியுடன் முதல் மாதிரி தொழில் நெறி வழிகாட்டி மையம் வேலூர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திலும், அடுத்த மையம் கோயம்பத்தூர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திலும் அமைக்கப்பட்டுள்ளன. இதனைத் தொடர்ந்து அனைத்து வேலைவாய்ப்பு அலுவலகங்களும் தற்போது தொழில்நெறி வழிகாட்டுதல் மையங்களாக செயல்படுகின்றன. இம்மையங்கள் வேலைவாய்ப்பு தொடர்பிலான தகவல்கள் அளிப்பதோடு தொழில்நெறி வழிகாட்டுதலுக்கான அறிவுரைகள் மற்றும் ஆலோசனைகளையும் வழங்குகின்றன.

### 3.6.1. தேசிய தொழில்நெறி இணையதளம்

தேசிய தொழில்நெறி சேவை இணையதளத்தின் மூலம் அனைத்து வேலைவாய்ப்பு அலுவலகங்களும் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. இந்த இணையதளமானது வேலைநாடுநர்கள், அரசு மற்றும் தனியார் துறை வேலையளிப்போர் மற்றும் திறன் பயிற்சி வழங்குவோருக்கிடையே உள்ள இடைவெளியைக் குறைக்கும் ஒரு தகவல் இணைப்பு பாலமாக செயல்படும். தேசிய தொழில்நெறி இணையதளம் பின்வரும் சேவைகளை வழங்குகிறது:-

- தற்போதைய காலத்திற்கும் நடைமுறைக்கும் ஏற்ற தொழில் நெறிகள் குறித்து சிறந்த அறிவுரைகள் வழங்கவும் திறன் தேவைப்படும் நேர்வுகளைக் கண்டறிந்து இணைக்கவும் நாளதுவரை முழுமைப்படுத்தப்பட்ட தொழில்நெறி தகவல்கள் அடங்கிய தொகுப்பை பராமரித்தல்.

- அரசு மற்றும் தனியார் துறை காலி பணியிட அறிவிப்புகள்

- பயிற்சிகள் தொடர்பான கால அட்டவணை

- வேலைநாடுநர்கள் பதிவு மற்றும் அவர்களுக்கு உதவிட தொடர் நடவடிக்கை எடுத்தல்

- திறன் மதிப்பீடு மற்றும் திறன் அறிதலுக்கான களம் அமைத்தல்

தேசிய தொழில்நெறி சேவை இணையதளமானது மாநில வேலைவாய்ப்பு இணையதளமான www.tnvelaivaaippu.gov.in உடன் இணைந்து செயல்படுகிறது. தேசிய தொழில்நெறி சேவையின் இணையதளத்தில், மாநில வேலைவாய்ப்பு இணையத்தில் உள்ள தரவுகள் மாற்றம் செய்யப்பட்டுள்ளன. தேசிய தொழில்நெறி சேவை இணையதளத்துடனான இணைப்பானது இம்மாநிலத்தின் வேலைநாடுநர்கள், தேசிய அளவிலான வேலைவாய்ப்புகள் குறித்த விவரங்களை அறிந்து தகுந்த வேலைவாய்ப்பினை பெற உதவுகிறது.

**3.7. தனியார் துறை பணியமர்த்தும் உதவி பிரிவு மற்றும் வேலைவாய்ப்பு முகாம்கள்**

வளர்ந்து வரும் தனியார் துறையில் வேலைவாய்ப்புகள் பெறுவதற்கு உதவ **2012–**ஆம் ஆண்டில் **37** மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களிலும் மாவட்ட அளவிலான தனியார்துறை பணியமர்த்தும் உதவி பிரிவு தொடங்கப்பட்டது. இப்பிரிவுகள் வேலைநாடுநர் மற்றும் வேலையளிப்போர் நேருக்கு நேர் சந்தித்துக் கொள்ள வழிவகை செய்யும் அமைப்புகளாக செயல்படுவதோடு தொழில் மற்றும் சேவை நிறுவனங்கள் தமக்கு தேவைப்படும் தகுதி வாய்ந்த திறன் பெற்ற மனித வளத்தைப் பெறவும் உதவுகின்றன. இப்பிரிவுகள்

முறையான கால இடைவெளியில் சிறிய அளவிலான வேலைவாய்ப்பு முகாம்களை வளாகத்திலேயே நடத்துவதன் மூலம் தகுதிவாய்ந்த வேலைநாடுநர்களை தேர்ந்தெடுத்துக் கொள்ள உதவும் வகையில் வேலையளிப்போர் மற்றும் வேலைநாடுநர்கள் கலந்துரையாட ஒரு களத்தை அமைத்து தருகின்றன.

மேலும், வேலைவாய்ப்பு பெற இயலாதவரின் திறன் தேவையைக் கண்டறிந்து அவருக்கு தேவையான திறன் பயிற்சியை அளிக்க இவ்வேலைவாய்ப்பு முகாம் உதவுகிறது.

2011 முதல் மே–2017 வரை பெரிய அளவிலான வேலைவாய்ப்பு முகாம்கள் 18 மாவட்டங்களில் நடத்தப்பட்டன. இக்காலகட்டத்தில் 1,79,350 வேலைநாடுநர்கள் பல்வேறு தனியார் நிறுவனங்களில் பணியமர்த்தம் செய்யப்பட்டனர்.

### 3.8. வேலைவாய்ப்பற்றோருக்கான உதவித் தொகை

வேலைவாய்ப்பற்றோர் உதவித் தொகையானது, பதிவு செய்து வேலைவாய்ப்பின்றி உள்ள இளைஞர்களுக்கு நிதியுதவியாகவும் போட்டித் தேர்வுகளுக்கு விண்ணப்பிக்கவும் திறன் பயிற்சி மேற்கொள்ளவும் வழங்கப்படுகிறது. இத்தொகையைப் பெற வேலைநாடுநர்கள் பதிவு செய்து ஐந்து ஆண்டுகள் நடப்பு பதிவேட்டில் காத்திருக்க வேண்டும் என்ற

நிபந்தனையோடு வயது மற்றும் ஆண்டு வருமானம் போன்ற விதிமுறைகளும் உள்ளன. இவ்வுதவித் தொகையைப் பெற ஆண்டு வருமானம் ரூ.50,000/–க்கு மிகாமல் இருக்க வேண்டும், பொது பிரிவினருக்கு வயது வரம்பு 40–க்கு மிகாமலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு 45–க்கு மிகாமலும் இருக்க வேண்டும். வேலைவாய்ப்பற்றோருக்கான உதவித்தொகை மூன்றாண்டுகளுக்கு வழங்கப்படுவதுடன், பயனாளிகளின் வங்கி கணக்கில் காலாண்டு வாரியாக செலுத்தப்படுகிறது. பிப்ரவரி–2017 முதல் வேலைவாய்ப்பற்றோருக்கான மாத உதவித் தொகை 100 சதவீதம் அரசால் உயர்த்தப்பட்டுள்ளது.

**பிப்ரவரி, 2017 முதல் உயர்த்தி வழங்கப்படும் வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகை விவரம் பின்வருமாறு:**

| வ. எண் | கல்வித் தகுதி | ஜனவரி 2017 வரை வழங்கப்பட்ட வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகை (ரூ) | பிப்ரவரி 2017 முதல் உயர்த்தப்பட்ட வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகை (ரூ) |
|---|---|---|---|
| 1 | பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெறாதவர்கள் | 100 | 200 |
| 2 | பத்தாம் வகுப்பு தேர்ச்சி | 150 | 300 |
| 3 | பன்னிரெண்டாம் வகுப்பு | 200 | 400 |
| 4 | பட்டதாரிகள் | 300 | 600 |

2016–17–ஆம் ஆண்டில் **54,821** பயனாளிகளுக்கு ரூ.**16.66** கோடி உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.

**3.8.1. மாற்றுத்திறனாளிகளுக்கான வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகை**

ஓராண்டு காலம் நடப்பு பதிவேட்டில் காத்திருக்கும் மாற்றுத்திறனாளி வேலைநாடுநர்களுக்கு வேலைவாய்ப்பற்றோர் உதவித் தொகை 10 ஆண்டுகளுக்கு வழங்கப்படுகிறது. இவர்களுக்கு பெற்றோரின் ஆண்டு வருமானம் மற்றும் வயது தொடர்பான வரம்புகள் இல்லை. எழுதப் படிக்க தெரியாதவர்கள் முதல் 10–ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்கள் வரை மாதம் ஒன்றுக்கு ரூ.600/–ம், 12–ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.750/–ம், பட்டப்படிப்பு முடித்தவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.1,000/–ம் வழங்கப்படுகிறது.

2016–17–ஆம் ஆண்டில் **23,030** பயனாளிகளுக்கு ரூ.**20.39** கோடி வழங்கப்பட்டுள்ளது.

**3.9. மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு பிரிவு**

மாற்றுத் திறனாளிகளுக்கான சிறப்பு வேலைவாய்ப்பு அலுவலகம், கிண்டி, சென்னையில் இயங்கி வருகிறது.

மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு பிரிவுகள் **13** மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில் மாற்றுத்திறனாளி பதிவுதாரர்களின் கல்வி தகுதி மற்றும் உடல் தகுதிக்கு உகந்த பணி நியமன வாய்ப்புகளைக் கண்டறிந்து உதவும் நோக்கில் செயல்படுகின்றன. இந்த சிறப்பு பிரிவுகள், கோயம்புத்தூர், கடலூர், ஈரோடு, காஞ்சிபுரம், மதுரை, நாகர்கோவில், சேலம், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, தூத்துக்குடி, உதகமண்டலம், மற்றும் வேலூர் ஆகிய அலுவலகங்களில் செயல்பட்டு வருகின்றன. வேலைவாய்ப்பு அலுவலக நடப்பு பதிவேட்டில் **1,20,905** மாற்றுத்திறனாளிகள் உள்ளனர். அவர்களில் உறுப்புநலன் குன்றிய மாற்றுத்திறனாளிகள்–**93,719**, விழி புலன் குன்றிய மாற்றுத்திறனாளிகள்–**14,288**, செவித்திறன் குறைந்த மாற்றுத்திறனாளிகள்– **12,898** ஆவர்.

**2016–17**–ஆம் ஆண்டு பணிநியமனம் பெற்ற மாற்றுத்திறனாளிகளில் **301** வேலைநாடுநர்கள் அரசு துறையிலும், **714** வேலைநாடுநர்கள் தனியார் துறையிலும் பணியமர்த்தம் செய்யப்பட்டுள்ளனர்.

## 3.10. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான பயிற்றுவிப்பு மற்றும் வழிகாட்டும் மையங்கள்

ஐந்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான பயிற்றுவிப்பு மற்றும் வழிகாட்டும் மையங்கள் திருச்சிராப்பள்ளி, கடலூர், கோயம்புத்தூர், வேலூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் வேலைவாய்ப்பு அலுவலக வளாகங்களிலேயே ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களின் பயன்பாட்டிற்காக இயங்கி வருகின்றன. ஆதிதிராவிட, பழங்குடியின நலப்பள்ளிகள் மற்றும் விடுதி மாணவர்களுக்கு வழிகாட்டி மையம் செயல்படும் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் மற்றும் அருகில் இருக்கும் மாவட்டத்தில் உள்ள வேலைநாடுநர் விவர தொகுப்பில் பதிவுபெற்றுள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கு தன்னம்பிக்கையூட்டும் நிகழ்ச்சிகள், போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சி வகுப்புகள் மற்றும் தொழில்நெறி வழிகாட்டுதல் கண்காட்சிகளையும் நடத்தி வருகின்றன.

ஈரோடு மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் மூலமாக கடம்பூர் மற்றும் ஹாசனூர் ஆகிய இடங்களில் பழங்குடியினருக்கான தொழில்நெறி வழிகாட்டும் மையம் அமைக்கப்பட்டுள்ளது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான பயிற்றுவிப்பு மற்றும் வழிகாட்டி மையம் வாயிலாக 2016–17–ஆம் ஆண்டில் 120 தன்னம்பிக்கையூட்டும் நிகழ்ச்சிகளும் 240 தொழில்நெறி வழிகாட்டும் உரைகளும் வழங்கப்பட்டன. 5,628 வேலைநாடுநர்கள் சுய தொழில் தொடங்க ஊக்குவிக்கப்பட்டனர். மேலும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான சிறப்பு தொழில்நெறி வழிகாட்டும் நிகழ்ச்சிகள் மற்றும் சிறிய அளவிலான வேலைவாய்ப்பு முகாம்கள் கோயம்புத்தூர் (ஆனைக்கட்டி), தருமபுரி (காளிப்பட்டி), ஈரோடு (தாளவாடி, கடம்பூர், ஹாசனூர்), நாமக்கல் (கொல்லிமலை), சேலம் (கருமந்துறை, ஏற்காடு), திருவண்ணாமலை (ஜமுனாமரத்தூர்) மற்றும் வேலூர் (நெல்லிவாசல், புதூர்நாடு, ஏலகிரி) ஆகிய இடங்களில் நடத்தப்பட்டன.

### 3.11. உதகமண்டலத்திலுள்ள பழங்குடியினருக்கான சிறப்பு தொழில்நெறி வழிகாட்டும் மையம்

பழங்குடியின மக்களுக்கான சிறப்பு தொழில்நெறி வழிகாட்டும் மையமானது, பழங்குடியினர் துணை திட்டத்தின் நிதி உதவியுடன் உதகமண்டலத்தில் செயல்பட்டு வருகிறது. இம்மையம் பழங்குடியின மக்கள் வசிக்கும் தொலைதூர இடங்களில் வேலைவாய்ப்பு பதிவு முகாம்களை நடத்துவதுடன்

தொழில் தகவல்களை சேகரித்து சிற்றேடுகளாக வெளியிடுகிறது. தொழில் நெறி வழிகாட்டும் அலுவலர், கல்வி நிறுவனங்கள் மற்றும் விடுதிகளுக்குச் சென்று தொழில்நெறி வழிகாட்டும் உரைகள் ஆற்றுவதுடன் தன்னம்பிக்கையூட்டும் நிகழ்ச்சிகளையும் நடத்தி வருகிறார்.

2016–17–ஆம் ஆண்டில் 853 பழங்குடி இளைஞர்கள் தொழில்நெறி வழிகாட்டுதலால் பயனடைந்துள்ளனர். தொழில்நெறி வழிகாட்டும் அலுவலரால் கல்வி நிறுவனங்கள் மற்றும் விடுதிகளில் 54 தொழில்நெறி வழிகாட்டுதல் உரைகள் ஆற்றப்பட்டதுடன் 24 தன்னம்பிக்கையூட்டும் நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டுள்ளன.

### 3.12. சாதனைகள் – 2016–17

#### (i) இணைய வழி கற்பித்தல் முறை

மெய் நிகர் கற்றலுக்கான (Virtual Learning) இணையதளத்தினை உருவாக்கிட ரூ.1.00 கோடி அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவ்விணையதளம் பல்வேறு தொழில் வாய்ப்புகள் தொடர்பான இணைய வழி கற்றல் (e-learning), பாடக்குறிப்புகள் (e-content), புத்தகங்களை (e-books) அளிப்பதுடன் கலந்துரையாடலுடன் கூடிய

காணொலி காட்சிகளுடன் மெய் நிகர் கற்றலை வழங்குகிறது. இவ்விணையதளம் வேலைநாடுநர்கள் மற்றும் மாணவர்கள் போட்டித் தேர்வுகளுக்கு தங்களை தயார்படுத்திக் கொள்ளவும், திறனை மேம்படுத்திக் கொள்ளவும் வேலைபெறும் திறனை வளர்த்துக்கொள்ள ஏதுவாக அறிவை பெருக்கிக் கொள்ள உறுதுணையாகவும் உதவிகரமாகவும் உள்ளது. இவ்விணையதளத்தில் தரமான நாளதுவரை மேம்படுத்தப்பட்ட பாடக்குறிப்புகள் (e-content) தரப்படுகின்றன. இப்பாடக்குறிப்புகள் தமிழிலும் தரப்படுவதால் கிராமம் மற்றும் தொலைதூரத்தில் இருந்துவரும் வேலைநாடுநர்களுக்கு மொழியால் ஏற்படும் தடை நீக்கப்படுகிறது.

**(ii) கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் பயிலும் ஏழை மாணவர்களுக்கு போட்டி தேர்வுகளுக்கான கட்டணமில்லா பயிற்சி வகுப்புகள்**

பத்து கலை மற்றும் அறிவியல் பல்கலைக்கழகங்களில் பயிலும் ஏழை மாணவ, மாணவியர் பயன் பெறும் வகையில் கட்டணமில்லா பயிற்சி வகுப்புகள் நடத்துவதற்காக ரூ.50.00 இலட்சம் அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. போட்டி தேர்வுகளுக்கான கட்டணமில்லா பயிற்சி வகுப்புகள் கல்லூரிகளிலேயே தகுதி வாய்ந்த திறமையாளர்களைக் கொண்டு நடத்தப்பட்டு வருகின்றன. தற்போது

உருவாக்கப்பட்டு வரும் மெய்நிகர் கற்றல் முறையானது, கல்லூரிகளில் உள்ள சீர்மிகு வகுப்பறை (Smart class) வசதியினைப் பயன்படுத்தி மாணவர்கள் இணையதள வகுப்புகளில் கலந்துகொள்ளவும் காணொலி உரைகளைப் பார்வையிடவும் தங்களுக்கு வசதியான நேரங்களில் மடி கணினி மூலம் பதிவிறக்கம் செய்து கொள்ளவும் உதவும்.

### (iii) தொழில்நெறி வழிகாட்டுதல் விழிப்புணர்வு வாரம்

ஒவ்வொரு வருடமும் ஜுலை மாதத்தின் முதல் வாரம் தொழில்நெறி வழிகாட்டுதலுக்கான விழிப்புணர்வு வாரமாக அனுசரிக்கப்பட வேண்டுமென இந்த ஆண்டு அரசால் ஆணையிடப்பட்டுள்ளது. ஆண்டுதோறும் இவ்வாரத்தில் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் மாவட்டம் முழுவதும் களப்பணிகள் வாயிலாக தொழில்நெறி ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டும் உரைகள் வழங்கப்படுவதோடு, தொழில்நெறி வழிகாட்டும் கண்காட்சி, கருத்தரங்குகள், தொழில்நெறி வழிகாட்டுவோருக்கான பயிற்சிகள் நடத்தப்பட்டு தொழில்நெறி மற்றும் மேற்படிப்புகள் குறித்த புத்தகங்களும் கைபிரதிகளும் வழங்கப்படுகின்றன.

**(iv) பள்ளி கல்வித்துறை ஆசிரியர்களுக்கான தொழில்நெறி வழிகாட்டுதல் பயிற்சி**

பள்ளி கல்வித்துறையின் ராஷ்டிரிய மத்தியமிக் சிக்ஷா அபியான் (RMSA) திட்டத்துடன் இணைந்து ஆசிரியர்களுக்கான தொழில்நெறி வழிகாட்டுதல் பயிற்சி **2016–17–**ஆம் ஆண்டு **1,794** ஆசிரியர்களுக்கு ஒன்பது மாவட்டங்களில் வழங்கப்பட்டது. ஒவ்வொரு அரசு பள்ளியிலிருந்தும் ஒரு ஆசிரியர் தொழில்நெறி வழிகாட்டும் ஆசிரியராக கண்டறியப்பட்டு பயிற்சி அளிக்கப்பட்டது. இதன் விளைவாக தொழில் தொடர்பான தகவல்களை மாணவர்களுக்கு வழங்குவதற்கு ஏதுவாக பள்ளிகளில் தொழில்நெறி வழிகாட்டுமுனைகள் (Career Corners) அமைக்கப்பட்டுள்ளன.

**(v) பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல விடுதி மாணவர்களுக்கு சிறப்பு தொழில்நெறி வழிகாட்டுதல்**

**2016–17–**ஆம் ஆண்டில் **1,338** பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் விடுதிகளில் தங்கி **10–**ம் வகுப்பு, **12–**ம் வகுப்பு மற்றும் கல்லூரிகளில் பயிலும் **41,987** மாணவர்களுக்கு சிறப்பு தொழில்நெறி வழிகாட்டும் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

**(vi) தொழில்நெறி வழிகாட்டும் கையேடுகள் வெளியிடுதல்**

துறையின் முக்கிய நிகழ்வுகள் மற்றும் பல்வேறு தொழில்நெறி வாய்ப்புகளை வெளிப்படுத்தும் விதமாக “திறன் தமிழகம்” என்ற இதழ் நவம்பர் **2016** முதல் ஒவ்வொரு காலாண்டிலும் வெளியிடப்படுகிறது. ‘‘பத்தாம் வகுப்பிற்குப் பிறகு என்ன **?**’, ‘பன்னிரெண்டாம் வகுப்பிற்குப் பிறகு என்ன **?**’ தொழிற்பயிற்சி கல்விக்குப் பிறகு என்ன?’ தொழில்நுட்ப கல்விக்குப் பிறகு என்ன?’ ஆகிய தொழில்நெறி வழிகாட்டுதல் கையேடுகள் வெளியிடப்பட்டு இவை மின் புத்தகங்களாக மாணவ, மாணவியர் பயன்பெறும் வகையில் துறையின் இணையதளமான www.tnvelaivaaippu.gov.in–ல் வெளியிடப்பட்டுள்ளன.

**(vii) அயல்நாட்டு வேலைவாய்ப்பு வழிகாட்டுதல் மற்றும் திறன்பயிற்சிக்கான பதிவு மையம்**

அயல்நாட்டு வேலைவாய்ப்பு பதிவு, வழிகாட்டுதல் மற்றும் திறன் பயிற்சிக்கான பதிவு மையம் உருவாக்கப்பட்டு வேலைநாடுநர்கள் பயன்பெறும் வகையில் அனைத்து மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களிலும் அக்டோபர் **2016** முதல் செயல்பட்டு வருகிறது. அயல்நாட்டு வேலைவாய்ப்பு அல்லது

பதிவு தொடர்பான வழிகாட்டுதல் தேவைப்படும் மாவட்டத்தில் உள்ள வேலைநாடுநர்கள் உரிய வழிகாட்டுதல் பெற சென்னையில் அமைந்துள்ள அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்திற்கு வருவதற்கு நெடுந்தொலைவு பயணிக்க வேண்டியிருந்தது. அயல்நாட்டு வேலைவாய்ப்பினைப் பெற விழைவோருக்கும் அதற்காக அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவன இணையதளத்தில் பதிவு செய்து கொள்வதற்கு திறன் பதிவு மையங்கள் உதவுகின்றன. இதன் மூலம் அவர்கள் பதிவு பெறாத உள்ளூர் முகவர்களின் பிடியிலிருந்து விடுவிக்கப்படுகின்றனர். மேலும், இப்பதிவு மையங்கள் வேலைநாடுநருக்கு ஏற்ற திறன் பயிற்சியை பெற்றுக் கொள்ள வழிகாட்டுவதோடு எதிர்காலத்தில் தமக்கு ஏற்ற வேலையை வெளிநாட்டில் தேடிக்கொள்ள ஏதுவாக திறன் பயிற்சி இணையதளத்தில் பதிவு செய்து கொள்ளவும் உதவுகின்றன.

(viii) **புதிய கட்டிடங்கள் உருவாக்கம்**

கடந்த ஆறு ஆண்டுகளில் 20 மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்கள், ஒரு மண்டல இணை இயக்குநர் (வேலைவாய்ப்பு) அலுவலகம் ஆகியவை ரூபாய் 30.80 கோடி செலவில் கட்டப்பட்டுள்ளன.

## பயிற்சி பிரிவு

தொழில்மயமாக்கல் மற்றும் சேவைத்துறையில் மாநிலத்தில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி காரணமாக, திறன்பெற்ற மனிதவளத்தின் தேவை கடந்த ஆண்டுகளில் பன்மடங்கு பெருகியுள்ளது. வளர்ந்து வரும் பொருளாதாரத்தினால் உருவாகும் வேலைவாய்ப்புகளை பயன்படுத்திக்கொள்ள திறன் பயிற்சி மிகவும் அவசியமாகிறது. அரசானது திறன் இடைவெளிகளைக் கண்டறிந்து, தொழில் துறையின் தேவைக்கேற்ற வகையிலும் வேலை பெறும் ஆற்றலை அதிகரிக்கும் வகையிலும் திறன் மேம்பாட்டு பயிற்சிகளை உருவாக்கும் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. திறன்மிக்க மனித வளத்தை தொழில் நிறுவனங்களுக்கு தொடர்ந்து கிடைக்கச் செய்திடவும், பயிற்சியாளர்களிடையே புதிய முயற்சிகள் மற்றும் தொழில் முனைவோர் திறன்களை வளர்க்கவும் மாநிலம் முழுவதும் உள்ள 85 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் இத்துறையின் பயிற்சி பிரிவின் வாயிலாக தொழிற்பயிற்சி மற்றும் திறன் பயிற்சி திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

## 3.13. நிர்வாக அமைப்பு

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இயக்குநர் இத்துறையின் பயிற்சி பிரிவின் தலைவராவார். அவருடன் இயக்குநரகத்தில் இரண்டு இணை இயக்குநர்களும், ஐந்து மண்டல இணை இயக்குநர்களும் உள்ளனர். தங்களது அதிகார எல்லைக்குள் உள்ள தொழிற்பயிற்சி நிலையங்களில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்படுவதை கண்காணிக்கும் பொறுப்புகள் மண்டல இணை இயக்குநர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. துணை இயக்குநர்/ உதவி இயக்குநர் நிலையிலான முதல்வர்களிடம் தொழிற்பயிற்சி நிலையங்களை நிர்வகிக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## 3.14. நீண்டகால பயிற்சிகள்

### 3.14.1. தொழிற்பயிற்சி நிலையங்கள்

பல்வேறு தொழிற்பிரிவுகளில் அடிப்படை திறன் பயிற்சிகளை அளிக்கும் நோக்கில் மத்திய அரசால் வடிவமைக்கப்பட்ட கைவினைஞர் பயிற்சித் திட்டமானது, மாநிலத்தில் தொழிற்பயிற்சி நிலையங்களின் வாயிலாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. கைவினைஞர் பயிற்சித் திட்டமானது தொழிற்சாலைகளுக்கு தேவையான திறன்களைப் பெற்ற இளைஞர்களை உருவாக்கும் நோக்கினை

அடையும் வகையில் தொழிற்பயிற்சி நிலைய பயிற்சியாளர்களை உருவாக்குகிறது. தொழிற்பயிற்சியானது 51 பொறியியல் மற்றும் 21 பொறியியல் அல்லாத தொழிற் பிரிவுகளில் அளிக்கப்படுகிறது. பயிற்சி காலம் தொழிற்பிரிவுகளுக்கேற்ப ஒன்று அல்லது இரண்டு ஆண்டுகள் வரை தேசிய தொழிற்பயிற்சிகுழும (NCVT- National Council for Vocational Training) நெறிமுறைகளின்படி நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தொழிற்பயிற்சி நிலையங்களில் சேருவதற்கு குறைந்தபட்சம் 14 வயது நிறைவடைந்திருக்க வேண்டும். அதிகபட்ச வயது ஆண்களுக்கு நாற்பது; பெண்களுக்கு உச்ச வயது வரம்பு ஏதும் இல்லை. கல்வித்தகுதி தேர்ந்தேடுக்கப்படும் தொழிற் பிரிவிற்கேற்ப 8–ம் வகுப்பு அல்லது 10–ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

**(அ) அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள்**

இம்மாநிலத்தில், 85 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் கைவினைஞர் பயிற்சித் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இவற்றில், 10 அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் பிரத்தியேகமாக மகளிருக்கெனவும்,

ஆதிதிராவிடருக்கென இரண்டு, பழங்குடியினருக்கென ஆறு மற்றும் சிறைவாசிகளுக்கென ஒன்று என தொழிற்பயிற்சி நிலையங்கள் செயல்படுகின்றன. இந்த ஆண்டில், **30,837** பயிற்சியாளர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர்.

**(ஆ) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினத்தவருக்கான அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள்**

கடலூர் மாவட்டத்தில் சிதம்பரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டத்தில் வடகரை ஆகிய இடங்களில் ஆதிதிராவிட மாணவ / மாணவியர் பயன்பெறும் வகையில் அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் உருவாக்கப்பட்டு, **467** இருக்கைகளுடன் செயல்பட்டு வருகின்றன. பழங்குடியின மாணவ / மாணவியருக்கென பிரத்தியேகமாக ஆறு அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் விழுப்புரம் மாவட்டத்தில் சங்கராபுரம், கோயம்புத்தூர் மாவட்டத்தில் ஆனைக்கட்டி, சேலம் மாவட்டத்தில் கருமந்துறை, திருவண்ணாமலை மாவட்டத்தில் ஜமுனாமரத்தூர், நாமக்கல் மாவட்டத்தில் கொல்லிமலை மற்றும் நீலகிரி மாவட்டத்தில் கூடலூர் ஆகிய இடங்களில் மொத்தம் **1,311** இருக்கைகளுடன் செயல்பட்டு வருகின்றன.

**(இ) அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் மகளிரும் மகளிர்க்கான அரசு தொழிற்பயிற்சி நிலையங்களும்**

ஒவ்வொரு வருடமும், அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் உள்ள மொத்த இருக்கைகளில் மகளிர்க்கென 30 விழுக்காடு இருக்கைகள் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. இதைத்தவிர, மகளிர்க்கென கிண்டி, அம்பத்தூர், கடலூர், புள்ளம்பாடி, கோயம்புத்தூர், சேலம், ஆண்டிப்பட்டி, திண்டுக்கல், மதுரை, நாகர்கோவில் ஆகிய இடங்களில் 3,015 இருக்கைகளுடன் அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் செயல்படுகின்றன. மேலும் தஞ்சாவூர், இராமநாதபுரம், பரமக்குடி, ஓசூர், கரூர், நாமக்கல் ஆகிய இடங்களில் மகளிர் பிரிவுகள் உருவாக்கப்பட்டு 480 இருக்கைகளுடன் இயங்கி வருகின்றன.

**(ஈ) அரசு உதவி பெறும் தொழிற்பயிற்சி நிலையங்கள்**

வளர்ந்து வரும் தொழிற்சாலைகளின் திறன் பெற்ற மனித வள தேவையினை பூர்த்தி செய்யும் நோக்கில் அரசு உதவி பெறும் தொழிற்பயிற்சி நிலையங்களில் பணியாற்றும் ஆசிரியர்களின் மொத்த சம்பளத்தில் 75% வரை பராமரிப்பு மானியமாக வழங்கப்பட்டு தனியார் பங்களிப்பு

ஊக்கப்படுத்தப்படுகிறது. 22 அரசு உதவி பெறும் தொழிற்பயிற்சி நிலையங்கள் தமிழ்நாடு தேசிய தொழிற்பயிற்சி குழுமத்தால் அங்கீகரிக்கப்பட்டு அரசிடமிருந்து பராமரிப்பு மானியம் பெறுகின்றன.

2016–17–ம் ஆண்டில், இத்தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு ரூ. 3.25 கோடி மானியமாக வழங்கப்பட்டு, 984 பயிற்சியாளர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

### (உ) தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள்

தொழிற்சாலைகளுக்கு தேவையான திறன் பெற்ற மனிதவளத்தினை உருவாக்குவதில் அரசு மேற்கொண்டுள்ள முயற்சிகளுக்கு வலு சேர்க்கும் விதமாக, 483 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் 76,961 இருக்கைகளுடன் தேசிய தொழிற்பயிற்சிக் குழுமத்தால் அங்கீகரிக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. கடந்த 2012–ஆம் ஆண்டு முதல் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களால் அரசுக்கு ஒப்புவிக்கப்படும் 50 சதவீத இருக்கைகள் மாவட்ட கலந்தாய்வு முறையில் நிரப்பப்படுகின்றன. பயிற்சி கட்டணமாக கிராமப்புற பயிற்சி நிலையங்களில் வருடத்திற்கு ரூ.10,000/– எனவும் நகர்ப்புற பயிற்சி நிலையங்களில் ரூ.12,000/– எனவும் பயிற்சியாளர்

ஒவ்வொருவருக்கும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு அரசால் ஈடு செய்யப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ், 2016–17–ஆம் ஆண்டில் 6,477 பயிற்சியாளர்கள் பயனடைந்துள்ளனர்.

## 3.15. இணையதள கலந்தாய்வு மூலம் தொழிற்பயிற்சி நிலையங்களில் சேர்க்கை

தொழிற்பயிற்சி நிலையங்களில் சேர்க்கை எளிமையாகவும் வெளிப்படையாகவும் நடைபெறுவதற்காக 2016 ஆம் ஆண்டு முதல் இணையவழி கலந்தாய்விற்காக www.skilltraining.tn.gov.in இணையதளம் மூலம் மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் பெறப்படுகின்றன. ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள தெரிவு செய்யப்பட்ட அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் மாவட்ட கலந்தாய்வு மூலம் மதிப்பெண் மற்றும் இன சுழற்சி அடிப்படையில் மாணவர்கள் சேர்க்கை நடைபெறுகிறது. கலந்தாய்வின்போது அனைத்து விவரங்களையும் அறிந்துகொள்ளும் மாணவர்கள் தங்கள் விருப்பப்படி தேவையான தொழிற்பிரிவையும் தொழிற்பயிற்சி நிலையத்தையும் தேர்வு செய்வர்.

### 3.16. தொழிற்பள்ளிகள்

உள்ளூர் பகுதிகளில் உள்ள தொழில் நிறுவனங்களின் திறன் பெற்றோர் தேவைகளைப் பூர்த்தி செய்திடவும் மாவட்டத்தில் உள்ள வேலைவாய்ப்புகளுக்கு பொருத்தமான திறன் பயிற்சியை வழங்கவும் 448 தனியார் சுயநிதி தொழிற்பள்ளிகள் மாநிலத்தில் செயல்பட்டு வருகின்றன. இவற்றில், சிறுபான்மையினர் தகுதியுடன் செயல்படும் 22 தனியார் தொழிற்பள்ளிகள் அரசிடமிருந்து பராமரிப்பு மானியம் பெறுகின்றன. மாநில இயக்ககத்தால் நிர்ணயிக்கப்பட்ட பாடத்திட்டம் மற்றும் நெறிமுறைகளின்படி பயிற்சி காலமானது ஒரு மாதம் முதல் மூன்று வருடங்கள் வரை தொழிற்பிரிவிற்கு ஏற்றவாறு வரையறுக்கப்பட்டுள்ளது. எட்டாம் வகுப்பு அல்லது பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்கள் பயிற்சியில் சேர்க்கப்படுகின்றனர். 2016–17–ஆம் ஆண்டில், 90 தொழிற்பிரிவுகளில் 17,885 பயிற்சியாளர்கள் சேர்க்கப்பட்டு, அரசு மானியமாக ரூ.1.12 கோடி செலவிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு வருடமும், பொதுத் தேர்வு ஜூன் மாதத்தில் நடத்தப்பட்டு, தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு தொழிற்பள்ளி சான்றிதழ் அல்லது மாநில தொழிற்பயிற்சி குழும சான்றிதழ் வழங்கப்படுகிறது.

## 3.17. மாநில தொழிற்பயிற்சி குழுமம் (SCVT)

தொழிற்பயிற்சி தொடர்பான அனைத்து செயல்களையும் மாநில அளவில் மேற்கொள்ள தேசிய தொழிற்பயிற்சி குழுமத்தைப் போலவே மாநில தொழிற்பயிற்சி குழுமமானது (SCVT) மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது. புதிதாக தோற்றுவிக்கப்பட்ட 23 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களும் 41 புதிய தொழிற்பிரிவுகளும் மாநில தொழிற்பயிற்சி குழுமத்தின் கீழ் இயங்கி வருகின்றன. 2016–17–ஆம் ஆண்டில் அனைத்து தொழிற்பள்ளிகளும் மாநில தொழிற்பயிற்சி குழுமத்தின் (SCVT) கீழ் கொண்டு வரப்பட்டன.

## 3.18. குறுகியகால திறன் பயிற்சி

### 3.18.1. அரசு தொழிற்பயிற்சி நிலையங்களை பயிற்சி வழங்கும் நிறுவனங்களாக திறன்மேம்பாட்டுக் கழகத்தில் பதிவு செய்தல்

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம், தொழிற்சாலைகளுக்கு ஏற்ற திறன் பெற்றவர்களாக இளைஞர்களை உருவாக்கும் நோக்கில் குறுகிய கால திறன் பயிற்சிகளை அளிப்பதற்காக பயிற்சி நிறுவனங்களை

அங்கீகரித்துள்ளது. இதுவரை, 50 தொழிற்பிரிவுகளில் குறுகிய கால பயிற்சி அளிப்பதற்காக 62 அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் பயிற்சி வழங்கும் நிறுவனங்களாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்கீழ், 2,128 மாணவர்கள் பயிற்சி முடித்துள்ளனர்; 1,209 மாணவர்கள் தற்போது பயிற்சி பெற்று வருகின்றனர். பயிற்சியின் இறுதியில், மாநில தொழிற்பயிற்சி குழுமம் மூலம் திறன் மதிப்பீடு நடத்தப்பட்டு, தேர்ச்சி பெற்ற பயிற்சியாளர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன.

## 3.19. பிற திட்டங்கள்

### 3.19.1. திறன்மிகு பயிற்சி திட்டத்தின் (Centre of Excellence) மூலம் தொழிற்பயிற்சி நிலையங்களை மேம்படுத்துதல்

உலகத்தரம் வாய்ந்த தொழிலாளர்களை தொழிற்பயிற்சி நிலையங்களின் மூலம் உருவாக்கும் வகையில் நாட்டில் உள்ள அரசு தொழிற்பயிற்சி நிலையங்களை மேம்படுத்திட திறன்மிகு பயிற்சி மையம் என்ற திட்டம் இந்திய அரசால் கடந்த 2005–ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்திற்கான செலவினம் 75 : 25 என்ற விகிதத்தில் மத்திய மாநில அரசுகளால் பகிர்ந்து கொள்ளப்படுகிறது.

இது வரை, இத்திட்டத்தின்கீழ் **22** அரசு தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு ரூ.**82.90** கோடி நிதி (மத்திய அரசின் பங்கு ரூ.**62.17** கோடி மற்றும் மாநில அரசின் பங்கு ரூ.**20.73** கோடி) வழங்கப்பட்டுள்ளது. தேசிய தொழிற்பயிற்சிக் குழும நெறிமுறைகளின் அடிப்படையில் புதிய பணிமனைகள் (ஆய்வகம்) உருவாக்கவும் நவீன இயந்திரங்கள் கொள்முதல் செய்வதற்கும் இந்த நிதி முழுமையாக பயன்படுத்தப்பட்டுள்ளது. வருடந்தோறும் **4,750** பயிற்சியாளர்கள் பயன் பெற்று வருகின்றனர்.

திறன்மிகு பயிற்சி திட்டத்தின்கீழ் கீழ்க்கண்ட **22** அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் உள்ளன:

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | அம்பத்தூர் | 9. | திருச்சி | 17. | கோயம்புத்தூர் |
| 2. | ஓசூர் | 10. | சேலம் | 18. | கிண்டி |
| 3. | கிண்டி (மகளிர்) | 11. | வட சென்னை | 19. | செங்கல்பட்டு |
| 4. | வேலூர் | 12. | கடலூர் | 20. | தஞ்சாவூர் |
| 5. | மதுரை | 13. | காரைக்குடி | 21. | தாராபுரம் |
| 6. | தருமபுரி | 14. | கோயம்புத்தூர் (மகளிர்) | 22. | தூத்துக்குடி |
| 7. | திருநெல்வேலி | 15. | திண்டுக்கல் | | |
| 8. | நாகப்பட்டினம் | 16. | அரியலூர் | | |

**3.19.2. அரசு தொழிற்பயிற்சி நிலையங்களை பொது மற்றும் தனியார் கூட்டமைப்புத் திட்டத்தின் கீழ் தரம் உயர்த்துதல்**

தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் தொழிற்சாலைகளுக்கிடையே ஒத்துழைப்பையும் நல்லுறவையும் உருவாக்கி தொழிற்பயிற்சி நிலையங்களில் வசதிகள் மற்றும் பயிற்சித் திட்டத்தின் தரத்தை உயர்த்திட, மத்திய அரசு கடந்த 2007—ஆம் ஆண்டில் மேலும் ஒரு புதிய முயற்சியை துவக்கி உள்ளது. இம்மாநிலத்தில் 32 அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் இத்திட்டத்தின் கீழ் மேம்படுத்திட தேர்வு செய்யப்பட்டன. ஒவ்வொரு தொழிற்பயிற்சி நிலையத்திலும் ஒரு நம்பகமான தொழில் நிறுவன பங்களிப்பாளரின் தலைமையின்கீழ் நிலைய மேலாண்மைக்குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு நிலைய மேலாண்மைக் குழுவிற்கும் முறையே ரூ.2.50 கோடி நிதி வட்டியில்லா கடனாக மத்திய அரசால் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 19 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் உள்ள மேலாண்மைக் குழு 33 புதிய தொழிற்பிரிவுகளைக் கொண்டுள்ளது. வருடந்தோறும் 1,433 பயிற்சியாளர்கள் பயன் பெறுகின்றனர்.

## 3.20. தொழிற்பழகுநர் பயிற்சி

### 3.20.1. தொழிற்பழகுநர் பயிற்சித் திட்டம்

நாட்டில் திறன் பெற்ற மனித வளத்தினை உருவாக்கும் நோக்கில் தொழிற்பழகுநர் சட்டம், **1961–**ன் கீழ் நடைமுறைபடுத்தப்படும் தொழிற்பழகுநர் பயிற்சியானது அரசின் முக்கியமானதொரு திட்டமாகும். இத்திட்டமானது, தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சி முடிக்கும் பயிற்சியாளர்களின் திறன்களை கூர்மையாக்குவதோடு, முறையான வேலைவாய்ப்பை பெறும் பொழுது தொழிற்சாலைகளின் சூழலை எளிதில் எதிர்கொள்ள உதவுகிறது.

ஆண்டுதோறும் தொழிற்சாலைகளின் தேவைக்கேற்ப தொழிற்பழகுநர்கள் சேர்க்கப்படுகின்றனர். வேலையளிப்போரால் தொழிற்பழகுநர்களுக்கு தொழிற்சாலைகளில் பணிமனை பயிற்சி அளிக்கப்படுகிறது. ஒப்பந்த தொழிலாளர்களையும் சேர்த்து **40** தொழிலாளர்களுக்கு மேல் பணிபுரியும் மத்திய அரசு நிறுவனங்கள், மத்திய பொதுத் துறை நிறுவனங்கள், மாநில அரசு நிறுவனங்கள், மாநில பொதுத் துறை நிறுவனங்கள் மற்றும் தனியார் தொழில் நிறுவனங்களில் தொழில் பழகுநர்களாக

தொழிற்பயிற்சி நிலையங்களிலிருந்து தேர்ச்சி பெற்றவர்கள் சேர்க்கப்படுகின்றனர்.

பயிற்சிக் காலத்தின் பொழுது, வேலையளிப்போரால் தொழிற்பயிற்சி நிலைய தொழிற்பழகுநர்களுக்கு உதவித்தொகை தொழிற்பழகுநர் சட்டத்தில் குறிப்பிட்டுள்ளவாறு வழங்கப்படுகிறது. பகுதி திறன் பெற்ற தொழிலாளர்களுக்கான குறைந்தபட்ச ஊதியத்தின் அடிப்படையில் வழங்கப்படும் உதவித் தொகை விவரங்கள் பின்வருமாறு:-

| | | |
|---|---|---|
| அ) | முதல் ஆண்டு பயிற்சி | – குறைந்த பட்ச ஊதியத்தில் 70 சதவீதம் |
| ஆ) | இரண்டாம் ஆண்டு பயிற்சி | – குறைந்த பட்ச ஊதியத்தில் 80 சதவீதம் |
| இ) | மூன்றாம் மற்றும் நான்காம் ஆண்டு பயிற்சி | – குறைந்த பட்ச ஊதியத்தில் 90 சதவீதம் |

இத்திட்டத்தின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட கால அளவிற்கு தொழிற்பழகுநர் பயிற்சி முடிக்கின்ற தொழிற்பழகுநர் ஒவ்வொருவரும் தேசிய தொழிற்பயிற்சிக் குழுமத்தால் நடத்தப்படும் தொழிற்பழகுநர்களுக்கான அகில இந்திய தொழிற் தேர்வில் பங்கேற்பர். இத்தேர்வு வருடத்திற்கு இரண்டு

முறை ஏப்ரல் / மே மற்றும் அக்டோபர் / நவம்பர் ஆகிய மாதங்களில் நடத்தப்படுகிறது. இத்தேர்வில் தேர்ச்சி பெறுவோருக்கு மத்திய அரசின் தேசிய தொழிற்பயிற்சி குழுமத்தால் தேசிய தொழிற் பழகுநர் சான்றிதழ் வழங்கப்படுகிறது.

### 3.20.2. அமலாக்க முகமை

தொழிற்பழகுநர் சட்டம், **1961–**ன்படி, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்குநர் மாநில தொழிற்பழகுநர் ஆலோசகர் ஆவார். மாநில அரசு நிறுவனங்கள், அரசு சார்ந்த நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களில் இச்சட்டம் செயல்படுத்தப்படுவதை கண்காணிக்கும் பொறுப்பு இவரைச் சார்ந்ததாகும்.

மத்திய அரசு நிறுவனங்கள் மற்றும் மத்திய அரசு சார்ந்த நிறுவனங்களில் இத்திட்டத்தின் செயல்பாடு சென்னையில் உள்ள மத்திய அரசின் தொழிற்பழகுநர் பயிற்சி மண்டல இயக்குநரால் கண்காணிக்கப்படுகிறது.

### 3.20.3. தேசிய தொழிற்பழகுநர் ஊக்குவிப்பு திட்டம் (NAPS)

இத்திட்டத்தின் முக்கிய நோக்கமானது தொழிற்சாலைகளில் தொழிற்பழகுநர்களின் சேர்க்கையை அதிகரிப்பதன் மூலம் தொழிற்பழகுநர் பயிற்சியினை ஊக்குவிப்பதாகும். இத்திட்டத்தின் கீழ் தொழிற்பழகுநர்கள் மற்றும் தொழிற்சாலைகள் / நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு பின்வருமாறு நிதி உதவி வழங்கப்படுகிறது:-

(i) அனைத்து தொழிற்பழகுநர்களுக்கும், ஒவ்வொரு மாதமும் தொழிற்பழகுநர் ஒருவருக்கு ரூ.1,500/–க்கு மிகாத வகையில் நிர்ணயிக்கப்பட்ட உதவித் தொகையில் 25 சதவீதம் பங்கீட்டுத் தொகையாக வேலையளிப்போருக்கு வழங்கப்படுகிறது.

அடிப்படைப் பயிற்சிக்கான கட்டணம் அதிகபட்சமாக ரூ.7,500/– என நிர்ணயிக்கப்பட்டு, 500 மணி நேரம் / மூன்று மாத பயிற்சிக்காக பயிற்சி வழங்கும் நிறுவனங்களுக்கு வழங்கப்படுகிறது.

பட்டதாரி, பட்டய தொழிற்பழகுநர்கள் தவிர மற்ற அனைத்து தரப்பு தொழிற்பழகுநர்களுக்கும் இத்திட்டம் பொருந்தும்.

இத்திட்டத்தில் தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சி முடித்தவர்கள், தொழிற்பயிற்சி நிலையங்களில் இரட்டை கற்றல் முறையில் பயின்றவர்கள், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் / தேசிய திறன் மேம்பாட்டுக் கழகம்/ பாரத பிரதமரின் கௌஷல் விகாஸ் யோஜனா/ குறுகிய கால திறன் எய்தும் பயிற்சி திட்டங்களின் கீழ் பயிற்சி பெற்றவர்கள் தொழில் பிரிவிற்கேற்றவாறு குறைந்தபட்ச கல்வித் தகுதி பெற்றவர்கள் மற்றும் முறையான பயிற்சி ஏதும் பெறாதவர்கள் (புதிய தொழிற்பழகுநர்கள்) தொழிற்பழகுநர்களாக சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். தொழிற்பழகுநர்களாக சேருவதற்கு பயிற்சியாளர்கள் குறைந்தபட்சம் 14 வயது மற்றும் அதிகபட்சமாக 21 வயதை அடைந்தவர்களாக இருத்தல் வேண்டும்.

### 3.20.4. அடிப்படை பயிற்சி மையங்கள்

தொழிலாளர்களின் எண்ணிக்கை 500 அல்லது அதற்கு மேல் உள்ள தொழில் நிறுவனங்கள் அடிப்படை பயிற்சி மையம் (Basic Training Centre) துவக்கலாம். பயிற்சி வழங்க தேவையான உட்கட்டமைப்பு வசதிகள், தொழிற்பயிற்சி நிலையங்களில் உள்ள அடிப்படை கட்டமைப்பு வசதிகளைப்

போன்றே வேலையளிப்போரால் உருவாக்கப்பட வேண்டும். 8–ஆம் வகுப்பு அல்லது 10–ஆம் வகுப்பு தேறிய எவரும் குறிப்பிட்ட தொழிற்பிரிவில் ஒரு தொழிற்சாலையில் பயிற்சி பெறுவதற்காக அடிப்படை பயிற்சி மையத்தில் சேரலாம். தற்போது மாநிலத்தில் தனியார் நிறுவனங்களால் 19 அடிப்படை பயிற்சி மையங்கள் நடத்தப்படுகின்றன. இவற்றிற்கான சேர்க்கை இடங்கள் வருடத்திற்கு மொத்தம் 980 ஆகும்.

### 3.21. தொழில் தேர்வுகள், தர மதிப்பீடு மற்றும் சான்றளிப்பு

#### 3.21.1. தொழில் தேர்வுகள்

**(i) முறையான பயிற்சியாளர்கள்**

தேசிய தொழிற்பயிற்சி குழுமத்தால் (NCVT) அங்கீகரிக்கப்பட்ட தொழிற்பயிற்சி நிலைய பயிற்சியாளர்களுக்கு அகில இந்திய தொழில் தேர்வானது தேசிய அளவில் பொது தேர்வாக நடத்தப்படுகிறது. இத்தேர்விற்கான விடைத்தாட்கள் மத்திய அரசு பயிற்சி இயக்குநரக தலைமை இயக்குநரால் மதிப்பீடு செய்யப்பட்டு, தேர்வு முடிவுகள் வெளியிடப்படுகின்றன. தேர்ச்சி பெறும் பயிற்சியாளர்களுக்கு தேசிய தொழிற்பயிற்சி குழுமத்தால் தேசிய தொழிற்சான்றிதழ் (NTC) வழங்கப்படுகிறது.

2016–ஆம் ஆண்டில் 7,294 பயிற்சியாளர்கள் அகில இந்திய தொழில் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

**(ii) தனி தேர்வர்கள்**

தொழிற்சாலைகளில் ஒரு குறிப்பிட்ட தொழிற் பிரிவில் குறைந்தபட்சம் மூன்று வருட அனுபவம் உள்ளவர்கள் தனி தேர்வராக கைவினைஞர் பயிற்சித் திட்டத்தின் கீழ் அகில இந்திய தொழில் தேர்வினை எழுதலாம். இத்துறையால் ஒவ்வொரு வருடமும் டிசம்பர் மாதத்தில் தகுதி தேர்வு நடத்தப்பட்டு தகுதியானவர்கள் தேர்வு செய்யப்பட்டு அகில இந்திய தொழில் தேர்வு எழுத அனுமதிக்கப்படுகின்றனர். இந்த ஆண்டில் தகுதி தேர்வில் ஆறு பயிற்சியாளர்கள் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

**3.21.2. மின்கம்பியாள் உதவியாளர் தகுதி தேர்வு**

வீட்டு மின்கம்பியிடல் (wiring) தொழிலை அனுபவத்தின் மூலமாக தெரிந்துகொண்டு, முறையான பயிற்சி பெறாமலும், சான்றிதழ் ஏதும் இல்லாமலும் குறைந்த பட்சம் ஐந்து வருட அனுபவம் உள்ளவர்கள் மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை இத்துறையால் நடத்தப்படும் மின்கம்பியாள் உதவியாளர் தகுதி தேர்வு எழுத தகுதியுள்ளவர்கள் ஆவர்.

இதற்கான குறைந்தபட்ச வயது வரம்பு 21 ஆகும். தேர்ச்சி பெற்ற நபர்களுக்கு தகுதி சான்றிதழ் இயக்குநரகத்தால் வழங்கப்படுகிறது.

### 3.21.3. திறன் போட்டிகள்

ஒவ்வொரு வருடமும், மாநில திறன் போட்டி, 18 தொழிற்பிரிவுகளில் இத்துறையால் நடத்தப்படுகிறது. இதற்கான விருது ரூ.25,000/– ரொக்க பரிசும் நற்சான்றிதழும் ஆகும். 2011–12–ஆம் ஆண்டு முதல் ரொக்க பரிசு ரூ.5,000/–த்திலிருந்து ரூ.25,000/–ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. கடந்த ஐந்து ஆண்டுகளில், 38 பயிற்சியாளர்களுக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

அகில இந்திய அளவில் திறன் போட்டிகள் புது தில்லியில் உள்ள தலைமை பயிற்சி இயக்ககத்தால் 15 தொழிற்பிரிவுகளில் மாநில அளவிலான திறன் போட்டிகளில் சிறந்து விளங்கும் பயிற்சியாளர்களுக்கிடையே நடத்தப்படுகின்றன. இதற்கான விருது ரூ.50,000/– ரொக்கப் பரிசும் நற்சான்றிதழும் ஆகும். தமிழ்நாடு சிறந்த மாநிலமாக 22 முறை தேர்வு செய்யப்பட்டுள்ளது. இது வரை சிறந்த திறன்

பெற்றமைக்காக தமிழ்நாட்டைச் சார்ந்த 38 பயிற்சியாளர்கள் இவ்விருதினைப் பெற்றுள்ளனர்.

### 3.21.4. மாநில அளவிலான படைப்பாற்றல் போட்டி

மாநில அளவில் அரசு மற்றும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் பொருத்துநர், கடைசலர், இயந்திர வேலையாள், கம்மியர் மோட்டார் வண்டி மற்றும் மின்சார பணியாளர் ஆகிய ஐந்து தொழிற்பிரிவுகளில் பயிலும் பயிற்சியாளர்களுக்கு படைப்பாற்றல் போட்டி ஒவ்வொரு வருடமும் நடத்தப்படுகிறது. கடந்த 2016–ஆம் ஆண்டு முதல் சிறந்த படைப்பாற்றலுக்கு ரூ.50,000/– ரொக்கப் பரிசும், நற்சான்றிதழும் வழங்கிட இந்த அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த வருடம் ஐந்து பயிற்சியாளர்களுக்கு இப்பரிசு வழங்கப்பட்டுள்ளது.

### 3.21.5. சிறந்த பயிற்றுநருக்கான "டாக்டர் இராதாகிருஷ்ணன் விருது"

தொழிற்பயிற்சி நிலைய முதல்வர்கள் மற்றும் பயிற்றுநர்களால் அளிக்கப்படும் பயிற்சியின் தரத்தை உயர்த்திடும் வகையிலும், சிறப்பாக செயல்படுபவர்களை அங்கீகரிக்கும் வகையிலும் ஒவ்வொரு வருடமும் சிறந்த பயிற்றுநருக்கான டாக்டர். இராதாகிருஷ்ணன் விருது

வழங்கப்படுகிறது. இவ்விருது ரூ.10,000/–க்கான தேசிய சேமிப்பு திட்ட பத்திரம் மற்றும் நற்சான்றிதழினை உள்ளடக்கியது. கடந்த ஐந்து வருடங்களில், 36 அலுவலர்கள் சிறந்த செயல் திறனுக்காக கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

### 3.21.6. பயிற்றுநர் பயிற்சி திட்டம்

நவீன இயந்திரங்கள் மற்றும் தளவாடங்கள் குறித்து பயிற்சியாளர்களுக்கு தரமான பயிற்சியை அளிப்பதற்காக தற்போதைய தொழில் நுட்பங்கள் மற்றும் இயந்திரங்கள் குறித்தான அறிவைப் பெருக்கிக்கொள்ளும் வகையில் மத்திய அரசின் கீழ் சென்னையில் செயல்படும் மத்திய பயிற்சி மையம், முன்னோடி பயிற்சி மையம் மற்றும் பெங்களூருவில் உள்ள உயர்தர தொழில் நுட்பப் பயிற்சி நிலையம் ஆகிய நிலையங்களுக்கு அரசு தொழிற்பயிற்சி நிலைய பயிற்றுநர்கள் பயிற்சிக்காக அனுப்பப்படுகின்றனர். இந்த வருடம் 159 பயிற்றுநர்கள் பயிற்சி பெற்றுள்ளனர்.

## 3.22. இணையதளம் மூலம் சான்றிதழ் உண்மைத்தன்மையை சரிபார்த்தல்

பயிற்சியாளர்களுக்கு தொழிற்சாலை, அரசு துறை மற்றும் வெளிநாடுகளில் பணிபுரிய ஏதுவாக தேசிய தொழிற்சான்றிதழ் / தேசிய தொழிற்பழகுநர் சான்றிதழ்கள்

வழங்கப்படுகின்றன. இப்பணியாளர்களின் வேலை உறுதிப்படுத்துதலின் போது, வேலையளிக்கும் நிறுவனங்களால் இந்த சான்றிதழ்களின் உண்மைத் தன்மை இத்துறையிடம் கோரப்படுகிறது. சான்றிதழ்களின் உண்மைத் தன்மையினை சரிபார்க்கும் பணியினை எளிமையாக்கும் பொருட்டு, இந்த அரசு இணையதளம் மூலமாக சான்றிதழ் உண்மைத் தன்மை சரிபார்ப்பு முறையினை ரூ.40.00 இலட்சம் செலவில் அறிமுகப்படுத்தியுள்ளது.

### 3.23. மாநில தேர்வுக்குழுமம்

இத்துறையால் நடத்தப்படும் பல்வேறு தேர்வு பணிகளை நிர்வகிக்க ஏதுவாக மாநில இயக்குநரகத்தில் உள்ள தேர்வுக்குழுமத்தை அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் மேம்படுத்திட ரூ.30.00 இலட்சம் இந்த அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 3.24. தொழிற்பயிற்சி நிலைய பயிற்சியாளர்களுக்கான அரசு நலத்திட்டங்கள்

தொழிற்பயிற்சி நிலையங்களில் சேர்ந்து பயிற்சி பெற்றிடவும் வேலைவாய்ப்பு பெறத்தக்க திறன்களைப் பெற்றிடவும் இளைஞர்களை ஊக்குவிக்கும் வகையில்

இம்மாநிலத்தில் ஒவ்வொரு வருடமும் கீழ்காணும் நலத் திட்டங்கள் அரசால் வழங்கப்பட்டு வருகின்றன.

1. கட்டணமில்லா பயிற்சி
2. பேருந்து பயணச் சலுகை
3. இரண்டு இணை சீருடைகள்
4. இணை காலணி
5. மிதிவண்டி
6. மாதாந்திர உதவித் தொகை ரூ.500/– வீதம்
7. மடி கணினி
8. பாடப்புத்தகங்கள் மற்றும் வரைபடக் கருவிகள்
9. செய்முறை பயிற்சிக்கான நுகர்பொருட்கள்

## 3.25. சிறப்பு திட்டங்கள் – 2016–17

### (i) அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் புதிய தொழிற்பிரிவுகள் / கூடுதல் அலகுகள்

இந்த ஆண்டு, பற்றவைப்பவர், கம்பியாள், கம்மியர் குளிர்பதனம் மற்றும் தட்பவெப்ப நிலை கட்டுப்படுத்துதல், மின்சார பணியாளர், கட்டிட பட வரைவாளர், மெக்கானிக் ஆட்டோ பாடி ரிப்பேர், கம்மியர் மோட்டார் வண்டி போன்ற 12 புதிய தொழிற்பிரிவுகள் எட்டு அரசு தொழிற்பயிற்சி

நிலையங்களில் ரூ.10.67 கோடி செலவில் துவக்கப்பட்டுள்ளன. இதனால் 534 பயிற்சியாளர்கள் பயன் பெறுவர்.

**(ii) அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் மென்திறன் ஆய்வகங்கள்**

அரசு தொழிற்பயிற்சி நிலைய பயிற்சியாளர்கள் மென்திறன், மொழித்திறன் மற்றும் அடிப்படை கணினித் திறன் ஆகியவை குறித்து தெரிந்து கொள்ளும் வகையில் மொழி மற்றும் மென்திறன் ஆய்வகங்களை அமைக்கும் புதிய முயற்சியை அரசு எடுத்துள்ளது. 2015–16–ஆம் ஆண்டில் 60 தொழிற்பயிற்சி நிலையங்களிலும், 2016–17–ஆம் ஆண்டில் 17 தொழிற்பயிற்சி நிலையங்களிலும் இந்த ஆய்வகங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

**(iii) மாவட்ட திறன்பயிற்சி ஒருங்கிணைப்பு அலுவலர்**

மாநில அளவில் பல்வேறு திறன்பயிற்சி திட்டங்களை பிற துறைகளுடன் ஒருங்கிணைந்து செயல்படுத்திடவும் கண்காணித்திடவும் உதவி இயக்குநர் தலைமையிலான மாவட்ட ஒருங்கிணைப்பு அலுவலர் பதவி உருவாக்கப்பட்டுள்ளது.

**(iv) தொழிற்பழகுநர்களுக்கான சந்தை / முகாம்**

அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் தொழிற்பழகுநர்களின் சேர்க்கையினை அதிகரிக்கவும், அதிக எண்ணிக்கையிலான தொழிற்சாலைகளை தொழிற்பழகுநர் சட்டத்தின் கீழ் கொண்டு வருவதற்கும் இந்த அரசு தொழிற்பழகுநர்களுக்கான சந்தை / முகாம்களை மண்டல அளவில் வருடத்திற்கு இருமுறை நடத்திட இந்த ஆண்டு **ரூ.10.00** இலட்சம் ஒப்பளித்துள்ளது.

**(v) பயோமெட்ரிக் வருகை பதிவு முறை**

அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் பணியாற்றும் அனைத்து பணியாளர்கள் மற்றும் பயிற்சியாளர்கள் உரிய நேரத்தில் வருகை புரிவதை உறுதி செய்யும் பொருட்டு பயோமெட்ரிக் வருகை பதிவு முறை **62** அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் **2013**–ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. **2016–17**–ஆம் ஆண்டில் இந்த வருகை பதிவு முறையானது மீதமுள்ள **22** அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் **ரூ.7.70** லட்சம் செலவில் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

## 4. தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம்

இந்தியாவில் பொருளாதார வளர்ச்சியில் இரண்டாவது பெரிய மாநிலமாக உள்ள தமிழ்நாடு, மக்கள் தொகையில் முன்னிலை கொண்ட மாநிலமாகத் திகழ்வதோடு 66% பணிபுரியும் வயதினரைக் கொண்டுள்ளதாகவும் உள்ளது. தொழில் துறையில் பெருகி வரும் திறன் பணியாளர் தேவைக்கும் தொழில் வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்திற்கும் ஈடுகொடுத்து அதிக மக்கள் தொகையின் நல்விளைவை பயன்படுத்திக்கொள்ளவும் திறன் இடைவெளியை நிரவல் செய்யவும் அரசால் தமிழ்நாடு திறன் மேம்பாட்டு இயக்கம் முன்னதாக உருவாக்கப்பட்டது. அதிக செயல் திறனுடன் இயங்கவும் மாநிலத்தில் திறன்பயிற்சிக்கு உத்வேகம் அளிக்கும் நோக்கத்துடனும் 2013–ஆம் ஆண்டில் சிறப்பு நோக்க அலகு (Special Purpose Vehicle) உருவாக்கப்பட்டது.

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகமானது, மாநிலத்தின் திறன் பயிற்சிகளுக்கான ‘ஒருங்கிணைப்பு முகமையாக’ (Nodal Agency) 2013–ஆம் ஆண்டு அரசால் அறிவிக்கப்பட்டது. 2023–ஆம் ஆண்டிற்குள் 200 இலட்சம்

நபர்களுக்கு திறன் பயிற்சி வழங்குவதை தொலைநோக்குப் பார்வை – **2023** ஆவணம் குறிக்கோளாகக் கொண்டுள்ளது. மாநிலத்தில் திறன் பெற்றவர்களின் எண்ணிக்கையையும் தரத்தையும் உயர்த்தி மாநிலத்தை நாட்டின் திறன் மையமாக மாற்றியமைக்க தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் திறன் பயிற்சியளிப்பவர்கள் மற்றும் தொழில் நிறுவன பங்களிப்பாளர்களுடன் இணைந்து முனைப்புடன் செயலாற்றி வருகிறது.

### 4.1. மாநில ஒருங்கிணைப்பு முகமை

திறன் பயிற்சிக்கான மாநில ஒருங்கிணைப்பு முகமை என்ற வகையில், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகமானது ஒருங்கிணைந்த நடவடிக்கையின் மூலம் பயிற்சி நிறுவனங்களைத் தேர்ந்தெடுத்து பல்வேறு துறைகளால் நடத்தப்படும் திறன் பயிற்சிகள் தரத்துடன் பயிற்றுவிக்கப்படுவதை கண்காணித்து, தர நிர்ணயம் செய்யப்பட்ட பயிற்சிகள், அவற்றின் கால அளவு மற்றும் கட்டணம் ஆகியவற்றை உறுதி செய்வதோடு பயிற்சியாளர்களை வேலைவாய்ப்பு பெறும் வரை தொடர்ந்து கண்காணிக்கும் நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது. திறன் பயிற்சி சூழலில் பல்வேறு துறைகளால்

வழங்கப்படும் பயிற்சிகள் ஒன்றின் மேலொன்றாக இணைவதையும் மீண்டும் மீண்டும் வழங்கப்படுவதையும், பயிற்சியாளர்கள் பல்வேறு துறைகளிடம் ஒரே பயிற்சியை மீண்டும் மீண்டும் பெறுவதையும் தவிர்க்க இந்த ஏற்பாடு உதவுகிறது.

### 4.2. தரம் மற்றும் நெறிமுறைப்படுத்துதல்

#### 4.2.1. பயிற்சிக்கான பாட பிரிவுகள்

தேசிய திறன் தகுதி கட்டமைப்பு (National Skill Qualification Framework) நிர்ணயித்துள்ள உள்கட்டமைப்பு, பாடத்திட்டங்கள், பயிற்றுநர் தகுதி ஆகியவற்றிற்கான விதிமுறைகளையே தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் பின்பற்றி வருகிறது. பயிற்சிகளின் தரத்தை உறுதி செய்வதற்காக தேசிய திறன் மேம்பாட்டுக் கழகம் (NSDC) அங்கீகரித்துள்ள தகுதி தொகுப்புகள் (Qualification Packs) 2016–17 முதல் தவறாமல் பின்பற்றப்பட்டு வருகின்றன. தேசிய திறன் தகுதி கட்டமைப்புக்கு இணையாக அனைத்து குறுகிய கால திறன் பயிற்சிகளும் வழங்கப்படும் வகையில் மாநிலம் முழுமையும் உள்ள மத்திய, மாநில அரசின் திறன் பயிற்சி நிலையங்களையும் முன்னணி தொழில் நிறுவனங்கள்

உள்ளிட்ட பயிற்சி நிறுவனங்களையும் தமிழ்நாடு திறன்மேம்பாட்டுக் கழகம் தெரிவு செய்து அதன் மூலம் அனைத்து திறன் பயிற்சிகளும் தேசிய அளவிலான தர மதிப்பீடுகளில் இருப்பதை உறுதி செய்து வருகிறது. மேலும், திறன் பயிற்சி அளிப்பவர்களால் அளிக்கப்படும் பயிற்சியை முடிப்பவர்களில் 70 சதவீதம் பேர் வேலைவாய்ப்பை பெற வேண்டும் என தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் நிர்ணயம் செய்துள்ளது.

### 4.2.2. பயிற்சி கட்டணம்

மத்திய அரசின் திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவோர் அமைச்சகத்தின் பொது விதிமுறை நிர்ணயித்துள்ள கட்டண முறையையே தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகமும் கடைபிடிக்கிறது. இதில் பயிற்சி கட்டணம், மதிப்பீட்டுக் கட்டணம், உணவு / தங்கும் கட்டணம் மற்றும் போக்குவரத்து கட்டணம் ஆகியவையும் அடங்கும்.

### 4.3. திறன் சான்றளித்தல்

அனைத்து திறன் பயிற்சி திட்டங்களிலும் சுதந்திரமான, ஒரு சார்பற்ற திறன் மதிப்பீடு மற்றும் திறன் சான்றிதழ் அளிக்கப்படுவதை உறுதி செய்ய மாநில

தொழிற்பயிற்சி குழுமம் (State Council for Vocational Training) அல்லது உரிய தொழில் துறை குழுமங்களால் (Sector Skill Councils) மதிப்பீடு செய்யப்பட்டு பயிற்சி முடித்தவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படுகிறது.

### 4.4. தேசிய திறன் தகுதி கட்டமைப்பை (NSQF) செயல்படுத்தும் மைய குழு (Core Committee)

நமது மாநிலத்தில் பல்வேறு திறன் பயிற்சிகளுக்கான சான்றிதழ்கள் வழங்கும் பிற துறைகளை ஒருங்கிணைத்து தேசிய திறன் தகுதி கட்டமைப்பின் (NSQF) தர அளவுகோல்களை செயல்படுத்திட ஏதுவாக தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு துறை அரசு செயலாளர் அவர்களின் தலைமையில் மைய குழு ஒன்றினை தமிழ்நாடு அரசு அமைத்துள்ளது. இக்குழுவில் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் உறுப்பினர் செயலராகவும், ஏழு அரசு துறைத் தலைவர்கள் மற்றும் தமிழ்நாடு திறந்தவெளி பல்கலைக்கழகம், பணியாளர் (ம) நிருவாக சீர்திருத்தத் துறை மற்றும் தேசிய திறன் மேம்பாட்டு முகமை (NSDA), புதுடெல்லி ஆகியவற்றின் பிரதிநிதிகள் உறுப்பினர்களாகவும் உள்ளனர்.

## 4.5. திறன் பயிற்சிக்காக கண்டறியப்பட்ட முக்கிய துறைகள்

தேசிய திறன் மேம்பாட்டுக் கழகத்தால் (NSDC) 2012–ல் நடத்தப்பட்ட திறன் இடைவெளி ஆய்வின் அடிப்படையிலும் தொழிற்சாலைகளின் வளர்ந்து வரும் திறன் தேவைகளுக்காகவும் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் திறன் பயிற்சியை வழங்கி வருகிறது. தமிழ்நாட்டில் தற்போதைய நிலையில் தானியங்கி வாகனங்கள் (automobile), பசுமைப் பணிகள், சுகாதாரம், ஜவுளி மற்றும் ஆயத்த ஆடை, தகவல் தொழில் நுட்பம், வேளாண்மை, தோல்பொருட்கள், அழகு மற்றும் நலன், சரக்கு நகர்வு மேலாண்மை (logistics), வங்கி நிதி சேவை (ம) காப்பீடு, ஊடகம் மற்றும் பொழுதுபோக்கு, கட்டுமானம், குழாய் பொருத்துதல் (plumbing), சில்லறை வர்த்தகம், மின்னணுவியல், பாதுகாப்பு சேவைகள், தொலைதொடர்புத் துறை, உணவு பதனிடுதல், இராசாயனம் மற்றும் பிளாஸ்டிக், இலகு பொறியியல், ரத்தினங்கள் மற்றும் ஆபரணங்கள், சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் ஆகியவை முக்கிய மற்றும் கவனம் ஈர்க்கும் துறைகளாக விளங்குகின்றன.

**4.6. திறன் மேம்பாட்டில் பொது மற்றும் தனியார் துறை பங்களிப்பு**

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகமானது, திறன் பயிற்சியளிக்கும் முன்னணி பொது மற்றும் தனியார் பயிற்சி நிறுவனங்களுடன் இணைந்து தரமான, சந்தை சார்ந்த மற்றும் வேலைவாய்ப்புடன் இணைந்த திறன் பயிற்சிகளை அளிக்க உறுதி கொண்டுள்ளது.

தொலைநோக்குப் பார்வை **2023**–ல் குறிப்பிட்டுள்ள இலக்கை அடையும் நோக்கத்தில் திறனின் தரத்தை மேம்படுத்த திறன் பயிற்சி நிறுவனங்களாக பதிவு செய்து கொள்வதற்காக 2015-ஆம் ஆண்டில் விருப்பம் கோரும் விண்ணப்பங்கள் (EoI) பெறப்பட்டன. மாநிலத்தின் அனைத்து பகுதிகளிலிருந்தும் பல்வேறு துறைகளில் பயிற்சி அளிக்கும் **461** அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

**4.7. திறன் முகாம் வாயிலாக திறன் பயிற்சிக்கு ஆள் சேர்த்தல்**

இளைஞர்கள் அவர்தம் கல்வித் தகுதி மற்றும் திறன்களுக்கு ஏற்ப தனியார் துறையில் வேலைவாய்ப்பு பெறுவதற்கும், திறன் பயிற்சி பெற தங்களைப் பதிவு செய்து

கொள்வதற்குமான இரட்டை நோக்குடன் பெரிய அளவிலான வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்படுகின்றன. இம்முகாம்களில் இளைஞர்களுக்கு வழிகாட்டுதல் வழங்கி, அவர்களை ஊக்குவித்து, திறன் பயிற்சி பெற தங்களை பதிவு செய்து கொள்ள ஏதுவாக தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் மற்றும் அதனால் அங்கீகரிக்கப்பட்டுள்ள திறன் பயிற்சி நிறுவனங்களின் அரங்குகளுடன் கூடிய திறன் கூடம் அமைக்கப்படுகிறது.

மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கு வருகை தரும் பதிவுதாரர்களுக்கு திறன் பயிற்சிக்கான பதிவு மேற்கொள்ளப்படுவதுடன் திறன் பயிற்சி குறித்த ஆலோசனையும் வழங்கப்படுகிறது. திறன் பயிற்சியில் சேர விருப்பமுள்ளவர்கள் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் இணையதளத்தில் பதிவு செய்து கொள்ளலாம்.

### 4.8. அனுபவத்தின் மூலம் பெற்ற திறமையை அங்கீகரித்தல் (Recognition of Prior Learning - RPL)

அனுபவத்தினால் திறன்கள் பெற்று, ஆனால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தால் சான்றிதழ் பெறாத கைவினைஞர்கள் மற்றும் தொழிலாளர்களின் திறன்களை

சோதித்து அங்கீகரிப்பதை தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் நோக்கமாகக் கொண்டுள்ளது. இத்திட்டம் தொழிலாளர்கள் தொழில் நிலைகளில் உயர் நிலைக்கு முன்னேறுதல், வருமானத்தைப் பெருக்குதல், புதிய வேலைவாய்ப்புகளுக்கு நகர்தல், மேம்பட்ட சமூக அந்தஸ்து ஆகியவற்றுடன் முறைசாரா துறைகளிலிருந்து முறைசார் தொழில் துறைகளில் பணியாற்றும் வாய்ப்பையும் அளிக்கிறது. இதன் மூலம் முறைசாரா துறைகளில் அதிக எண்ணிக்கையில் உள்ள சான்றிதழ் பெறாத தொழிலாளர்களை மதிப்பீடு செய்து சான்றிதழ் வழங்குவதால் அவர்கள் திறன் பெற்ற தொழிலாளர்களாக நிலையுயர்த்தப்பட்டு அவர்களது வாழ்க்கைத்தரம் மேம்படும் நிலை ஏற்படும். கட்டுமானம், விருந்தோம்பல் மற்றும் தானியங்கி துறைகளில் பணியாற்றும் திறன் பெற்ற பணியாளர்கள் தம் அனுபவத்தின் மூலம் பெற்றுள்ள திறமையை மதிப்பீடு செய்து அங்கீகரிக்கும் இத்திட்டத்திற்காக அரசு **2016-17**–ல் ரூ.**10.00** கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

### 4.9. புதிய முயற்சிகள்

#### 4.9.1. கலந்துரையாடலுக்கான இணையதளமும் திறன் பதிவு தொகுப்பும்

அண்மையில் துவக்கப்பட்டுள்ள திறன் மேம்பாட்டுக் கழக இணையதளமானது, இன்றைய திறன் சூழல் அமைப்பில் திறன் மேம்பாட்டில் தொடர்புடைய அனைவரும் தங்களுக்குள் கலந்துரையாடும் வசதி கொண்ட பிரத்தியேக தளமாக துவக்கப்பட்டுள்ளது. இந்த இணையதளம் வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள், திறன் பயிற்சி அளிப்பவர்கள், வேலையளிப்பவர்கள் ஆகியோருக்கு இணையவழி பதிவு செய்து கொள்ளும் வசதியை அளிக்கிறது. திறன் பயிற்சி பெற விருப்பமுள்ளவர்கள் அனைத்து திறன் பயிற்சி விவரங்கள், பயிற்சியின் கால அளவு மற்றும் பாட விவரம் ஆகியவற்றைப் பார்வையிடுவதோடு இணைய வழியாக தங்களுக்கு விருப்பமான பயிற்சியில் சேர விண்ணப்பிக்கலாம்.

பதிவுதாரர்களால் இணையதளம் மூலமாக சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களின் அடிப்படையில் பயிற்சியளிக்கும் நிறுவனங்கள் பயிற்சியாளர்களை அவர்கள் தேர்ந்தெடுத்துள்ள பயிற்சிகளில் சேர்த்துக் கொள்ளலாம். பயிற்சிக்கான ஓர் அணி தயாரானவுடன் தமிழ்நாடு திறன்

மேம்பாட்டுக் கழகத்திற்கு ஒப்புதலுக்கான விண்ணப்பத்தை அளிக்கலாம். மேலும், பயிற்சி துவக்கப்பட்ட பின் முதல் தவணைத்தொகை அனுமதிக்காகவும் விண்ணப்பிக்கலாம்.

பதிவு செய்துள்ள வேலையளிக்கும் நிறுவனங்கள் காலி பணியிடங்கள் குறித்த தகவல்களை அறிவிப்பதுடன், இணையதளம் மூலமாக பணிக்கு விண்ணப்பித்தவர்களிலிருந்தோ அனைத்து திறன் பயிற்சி பெற்றவர்களின் பதிவுகள் அடங்கிய தொகுப்பிலிருந்தோ பணிக்கு ஆட்களை தேர்வு செய்து கொள்ளலாம். வேலை வாய்ப்பற்ற இளைஞர்கள் மற்றும் பயிற்சி அளிப்போரின் வசதிக்காக திறன் பயிற்சிகள் குறித்த விதிமுறைகளும், தர அளவீடுகளும் இணையதளத்தில் காணக்கிடைக்கின்றன. திறன் பயிற்சி அளிக்கும் பிற அரசு துறைகள், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நிறுவனங்கள் மற்றும் அவர்கள் அளிக்கும் பயிற்சிகள் குறித்த விவரங்களையும் தெரிந்து கொள்வதோடு தங்களிடம் பயிற்சி பெற்றவர்களின் விவரங்களை திறன் தொகுப்பில் பதிவேற்றம் செய்து கொள்ளலாம்.

அனைத்து துறைகளிலும் திறன் பயிற்சியினை வெற்றிகரமாக முடித்த / சான்றளிக்கப்பட்ட பயிற்சியாளர்களின்

சுய விபரங்களை ஒரே இடத்தில் பெறக்கூடிய திறன் களஞ்சியமாக திறன் பதிவு தொகுதி (Skill Registry) விளங்குகிறது. தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழக இணையதளத்தில் பதிவு செய்துள்ள தனியார் தொழில் நிறுவனங்களும் இதனைப் பார்வையிடலாம். தேசிய தொழில் சான்றிதழ் (NTC), தேசிய தொழிற்பழகுநர் சான்றிதழ் (NAC) மற்றும் பட்டயம் பெற்றவர்களுடன் பிற துறைகளின் மூலம் வழங்கப்படும் திறன் பயிற்சி பெற்றோரின் சுய விவர தகவல்களும் அவ்வப்போது இத்திறன் பதிவு தொகுப்பில் ஏற்றப்படும்.

### 4.9.2. உயர் தொழில்நுட்ப திறன் மிகு மையம் மற்றும் தொழில் நுட்ப திறன் மேம்பாட்டு நிலையங்கள்

இந்த அரசு, பொறியியல் கல்லூரி, பாலிடெக்னிக் மற்றும் தொழிற்பயிற்சி நிறுவன ன் பயிற்சி அளிக்கும் நோக்கத்தோடு சீமென்ஸ் (Siemens) மற்றும் டிசைன்டெக் (Designtech) நிறுவனங்களுடன் இணைந்து பொது மற்றும் தனியார் கூட்டமைப்பின்கீழ் திறன்மிகு மையம் (Centre of Excellence) மற்றும் ஐந்து இணைப்பு தொழில்நுட்ப திறன் மேம்பாட்டு மையங்களை (t-SDIs) ரூ.546.84 கோடி திட்ட

மதிப்பில் ரூ.54.68 கோடி அரசின் பங்கீட்டுடன் நிறுவி வருகிறது.

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகமானது, ஆட்டோமெஷன், ரொபொடிக்ஸ் மற்றும் பிற உயர்நிலை திறன்களில் உலக அளவில் சிறந்து விளங்கும் சீமென்ஸ் (Siemens) நிறுவனத்துடன் இரண்டு ஆண்டுகளுக்கு இணைந்து பணியாற்றும். திறன்மிகு பயிற்சிகளின் மையமாக அமையவுள்ள அண்ணா பல்கலைக் கழகம், திறன் பயிற்சிகளை பிரதானமாக வழங்குவதுடன் இப்பயிற்சியின் கிளைகளாக செயல்பட உள்ள தரமணி – மத்திய பாலிடெக்னிக் கல்லூரி, காஞ்சிபுரம் மற்றும் விழுப்புரத்தில் உள்ள அண்ணா பல்கலைக்கழக கல்லூரிகள், ஆவடி – முருகப்பா பாலிடெக்னிக் (அரசு உதவி பெறும்) கல்லூரி மற்றும் வேலூர் – அரசு பொறியியல் கல்லூரி ஆகிய கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கு வழங்கப்படவுள்ள வடிவமைப்பு, மெக்கட்ரானிக்ஸ், ரோபோடிக்ஸ் முதலான திறன் பயிற்சிகளுக்கு உதவி செய்யும். இதற்கான ஆய்வுக் கூடங்கள் அமைக்கும் முதற்கட்ட பணிகள் நடைபெற்று வருகின்றன.

**4.9.3. அம்மா இரு சக்கர வாகன சேவை மற்றும் பழுதுபார்த்தல் மையம்**

“தானியங்கி வாகன பழுதுபார்ப்பவர் (இரு சக்கர வாகனம் + மூன்று சக்கர வாகனம் / இலகு ரக வாகனம் / பவர் டில்லர்ஸ் / விவசாயம் மற்றும் அதைச் சார்ந்த இயந்திரங்கள்)” என்று பெயரிடப்பட்ட திறன் பயிற்சியின்கீழ் இரு சக்கர வாகனங்கள் மற்றும் விவசாய இயந்திரங்களை பழுது பார்த்தல் மற்றும் பராமரித்தல் தொடர்பான திறன்பயிற்சி வழங்கப்பட உள்ளது. **35** ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த கிராமப்புற இளைஞர்களுக்கு மாநிலம் முழுவதும் பரவியுள்ள வாகன விற்பனை மற்றும் பழுது பார்க்கும் நிலையங்களில் வேலை வாய்ப்புகளையும் சுய வேலை வாய்ப்பையும் பெற உதவும் வகையில் **2016–17–ல்** ரூ.**1.40** கோடி செலவில் இப்பயிற்சியானது அளிக்கப்பட உள்ளது. அம்மா இரு சக்கர வாகனம் வழங்கும் திட்டத்தின் மூலம் பணிபுரியும் பெண்களுக்கு **50** சதவீத மானியத்துடன் இரு சக்கர வாகனங்கள் வழங்கப்படும் நிலையில், இத்திட்டத்தின்கீழ் பயிற்சி பெறும் இளைஞர்களுக்கு இரு சக்கர வாகன பழுது பார்த்தல் மற்றும் பராமரிப்பில் கூடுதல் வேலை வாய்ப்புகள் கிடைக்கும்.

### 4.9.4. ஊராட்சி ஒன்றிய அளவில் திறன் பயிற்சி மையங்கள்

அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் மூலம் 60 ஊராட்சி ஒன்றியங்களில் 3,600 நபர்களுக்கு திறன் பயிற்சியளிக்கும் வசதிகளை ரூ.2.94 கோடி செலவில் அரசு உருவாக்கும். மேலும், நகர்புறங்களில் உள்ள 20,000 இளைஞர்களுக்கு சேவைத் துறைகளில் ரூ.18.00 கோடி நிதி ஒதுக்கீட்டில் திறன் பயிற்சிகள் அளிக்கப்படும். ஊராட்சி ஒன்றியங்களில் அமைந்துள்ள அரசு தொழிற்பயிற்சி நிலையங்களின் உட்கட்டமைப்பு மற்றும் இயந்திரங்களைப் பயன்படுத்தியும் திறன் மேம்பாட்டுக் கழக நிதியுதவியுடன் வெளிமுகமையிலிருந்து ஏற்பாடு செய்யப்படும் தகுதி வாய்ந்த பயிற்றுநர்களைக் கொண்டும் பொறியியல் பாடத்திட்டங்களில் திறன்பயிற்சிகள் அளிக்கப்படும். தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ள திறன் பயிற்சி நிறுவனங்களைக் கொண்டு நகர்ப்புறங்களில் சேவைத்துறையில் திறன் பயிற்சிகள் வழங்கப்படும்.

### 4.9.5. மாநில அளவில் திறன் மாநாடு

மாநில அளவிலான திறன் மாநாடு, தொழில் சார்ந்த திறன் உலகில் புதியதான முயற்சிகளில் ஈடுபட இளவயதினரை ஊக்குவிக்கவும் அவர்தம் திறன்களையும், திறமைகளையும்

காட்சிப்படுத்தவும் ஒரு களமாக அமையும். இத்திறன் மாநாடு இரு நிலைகளில் அதாவது, முதலில் மாவட்ட அளவிலும் பின்னர் மாநில அளவிலான போட்டியாகவும் நடத்தப்படும். ஒவ்வொரு வருடமும் நடைபெறும் இந்த திறன் மாநாட்டில் பட்டதாரிகள், தொழிற்பயிற்சி நிலைய பயிற்சியாளர்கள், பாலிடெக்னிக் / கல்லூரிகள் / பல்கலைக்கழகங்களில் பயின்றவர்கள், தொழிற்பழகுநர் சட்டம், **1961–**ன் கீழ் தொழிற்பழகுநர் பயிற்சி பெற்றவர்கள், தொழிற்சாலை பணியாளர்கள் ஆகியோர் கலந்து கொள்வர். இதற்காக அரசு 2016-17-ல் ரூ.**40.00** இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

மாநில திறன் போட்டியில் முதலாவதாக வரும் பயிற்சியாளர்கள் மண்டல, தேசிய, சர்வதேச அளவிலான திறன் போட்டிகளில் கலந்து கொள்ளும் வாய்ப்பினைப் பெறுவர்.

### 4.9.6. மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகங்களில் திறன் மதிப்பீடு மற்றும் பயிற்சி மையங்கள்

வேலை வாய்ப்பு அலுவலகங்களில் உள்ள தனியார் வேலையமர்த்தும் பிரிவின் முக்கிய பணியானது வேலை வாய்ப்பற்ற இளைஞர்களுக்கு தங்களது கல்வித்தகுதி மற்றும் ஆற்றலுக்குத் தகுந்த வேலையினை தனியார் துறையில் பெற

வழிகாட்டி ஆலோசனை வழங்குவதாகும். வேலை வாய்ப்பற்ற இளைஞர்களின் தற்போதைய திறன்கள் மற்றும் திறமைகளை அறிந்து கொள்ள அறிவுத் திறன், கணிதத் திறன், பொது அறிவு, உளவியல் / உடல் திறன் சார்ந்த தேர்வுகள் மூலம் திறன் மதிப்பீடு செய்ய திறன் மதிப்பீடு மற்றும் ஆய்வு மையங்கள் ரூ.87.40 இலட்சம் செலவில் அனைத்து மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களிலும் அமைக்கப்பட்டு வருகின்றன. திறன் மதிப்பீட்டில் ஒருவர் பெறும் மதிப்பெண், அவருக்கு ஏற்ற போட்டித் தேர்வுகள், சீருடைப்பணிகள், சேவை அல்லது திறன் சார்ந்த உற்பத்தி துறைகளில் வேலை வாய்ப்புகளைப் பெறுவதில் வழிகாட்ட உதவும். திறன் சார்ந்த பணிகளுக்கு தகுதியானவர்களாக கண்டறியப்படுபவர்களுக்கு திறன் மேம்பாட்டுக் கழகம் மூலம் உரிய பயிற்சி வழங்கப்படும்.

### 4.10. ராஷ்டிரிய உச்சாதர் சிக்ஷா அபியான் (RUSA) திட்டத்துடன் இணைந்து கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாணவ மாணவியருக்கு திறன் பயிற்சி வழங்குதல்

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகமும், உயர் கல்வித் துறையின் மூலம் மத்திய அரசின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் ராஷ்டிரிய உச்சாதர் சிக்ஷா அபியான்

திட்டமும் இணைந்து ஒரு புதிய திறன் பயிற்சி வழங்கும் முயற்சி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாணவ, மாணவியருக்கு வழங்கப்படும் இப்பயிற்சியானது, அவர்களது பட்டப்படிப்பு பாடப்பிரிவிற்கு பொருத்தமான திறன்பயிற்சி வழங்கும் வகையில் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட திறன் பயிற்சி நிறுவனங்கள் மூலம் சில்லரை வர்த்தகம், தொலைத்தொடர்பு, ஊடகம், விருந்தோம்பல், சுகாதாரம், ஜவுளித்துறை, தானியங்கி, தகவல் தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் பயிற்சியளித்து அவர்களது வேலை வாய்ப்பை அதிகரிக்கச் செய்யும் நோக்கத்தைக் கொண்டதாகும். இம்முயற்சியால் **2016–17**–ஆம் ஆண்டில் **19** அரசு தன்னாட்சி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பயின்ற **13,796** மாணவ, மாணவியர் பயன்பெற்றனர்.

## 5. அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்

அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் (OMCL) 1978–ஆம் ஆண்டு துவக்கப்பட்டு இந்திய கம்பெனிகள் சட்டம், 1956–ன்படி இணைக்கப்பட்டு, இந்திய குடிபெயர்வோர் சட்டம், 1983–ன்படி வேலையளிக்கும் முகவராக பதிவு செய்யப்பட்டது. ஆயிரம் மற்றும் அதற்கு மேற்பட்ட குடிபெயர்வோரை வெளிநாட்டு வேலைக்கு அனுப்பி வைக்க அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்திற்கு இந்திய அரசாங்கம் அனுமதி அளித்துள்ளது. வெளிநாட்டு வேலைதேடும் இளைஞர்களை ஏமாற்றுமுகவர்களின் பிடியிலிருந்து பாதுகாப்பதே இந்நிறுவனத்தின் நோக்கமாகும்.

### 5.1. பங்கு மூலதனம்

இந்நிறுவனத்தின் செலுத்தப்பட்ட மூலதனம் ரூ.15.00 இலட்சம்; அனுமதிக்கப்பட்ட மூலதனம் ரூ.50.00 இலட்சம் ஆகும். இது ரூ.1000 மதிப்புள்ள 5000 சமவீத பங்குகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

### 5.2. பதிவு

31.3.2017 அன்றமைந்தவாறு, 11,024 வேலைநாடுநர்கள் உயிர்பதிவேட்டில் உள்ளனர். கடந்த ஐந்து ஆண்டுகளில்,

10,308 வேலைநாடுநர்களும், 907 வேலைநாடுநர்களும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு வேண்டி அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தில் பதிவு செய்துள்ளனர்.

### 5.3. பணியமர்த்தல்

2011 முதல் 2016 வரையிலான காலத்தில், அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் 1164 பதிவுதாரர்களையும், 2016-17-ஆம் நிதியாண்டில் 521 பதிவுதாரர்களையும் பல்வேறு நாடுகளில் பணியமர்த்தியுள்ளது. இப்பதிவுதாரர்கள் ஆஸ்திரேலியா, குவைத், சவூதி அரேபியா, பக்ரைன் போன்ற நாடுகளில் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

### 5.4. அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தின் நடவடிக்கைகள்

அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் பதிவு செய்தல் மற்றும் வேலைநாடுநர்களை வெளிநாடுகளில் பணியமர்த்தும் பணிகளுடன் பின்வரும் நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது.

1. மாவட்ட தலைமையிடத்தில் விழிப்புணர்வு / பதிவு முகாம்களை நடத்துதல்
2. தேர்ந்தெடுக்கப்படும் பதிவுதாரர்களின் சான்றிதழ்களை மாநில தலைமைச் செயலகம் / பல்கலைக்கழகங்கள் / கல்வி நிறுவனங்கள் மூலம் சான்றொப்பம் பெற உதவுதல்

3. வெளியுறவுத்துறை அமைச்சகத்திடமிருந்து பெறப்படும் சான்றிதழ்களை சான்றொப்பம் செய்வதில் உதவுதல்

4. பதிவுதாரர்கள் மற்றும் வெளிநாடுகளில் பணியமர்த்தப்பட்ட நபர்களுக்கு ஆதரவு கரம் அளித்தல்

## 5.5. நிதி விவரங்கள்

இந்நிறுவனம் 2015-16–ஆம் நிதியாண்டில் பங்கு மூலதனத்தில் 30 சதவீதம் ஈவுத் தொகை என அறிவித்து, ரூ.4.50 இலட்சத்தினை அரசிற்கு அளித்துள்ளது. 2016-17–ஆம் நிதியாண்டில் இந்நிறுவனத்தின் தணிக்கைக்குட்படாத வகையில் மொத்த வருவாய் ரூ.1.17 கோடியாகவும் வரிக்கு முந்தைய நிகர இலாபம் ரூ.37.64 இலட்சமாகவும் உள்ளது.

இந்திய அரசினால் அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட ஈ-மைகிரேட் (e-migrate) முறை காரணமாகவும் செவிலியர்கள் மற்றும் வீட்டு வேலைக்கான பணியாளர்கள் அரசு நிறுவனங்கள் மூலமாக மட்டுமே பணியமர்த்தப்பட வேண்டும் என்ற இந்திய அரசின்

ஆணையின் விளைவாகவும் அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தின் செயல்பாடுகள் அதிகரித்துள்ளன.

## 5.6. சாதனைகள்

அ) இணையதளத்தின் மூலம் பதிவு செய்தல், விசா பரிசீலனை, வெளிநாட்டு வேலையளிப்போருக்கான பதிவு, தேர்ந்தெடுத்தல் மற்றும் பணியமர்த்தல் தொடர்பானவற்றில் உபயோகிப்பாளர் எளிதாக பயன்படுத்தும் வகையில் செயல்படும் இணையதளத்தை அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் உருவாக்கி உள்ளது.

ஆ) வெளிநாட்டு வேலைக்கு செல்ல ஆர்வமுள்ள வேலைநாடுநர்கள் / புலம் பெயர்வோர் ஆகியோருக்கு உதவுவதற்காக **32** மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில் அயல்நாட்டு வேலைவாய்ப்பு வழிகாட்டி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இ) அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தின் அமைப்பு விதிகளுக்கிணங்க, அனைத்து அரசு துறைகள் மற்றும் அரசுசார் நிறுவனங்களில் காலியாகவுள்ள தற்காலிக மற்றும் ஒப்பந்த பணியிடங்களை நிரப்பிக்கொள்வதற்கான தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் **2016-17–**ஆம் ஆண்டில் உள்நாட்டு வேலைவாய்ப்பு சேவைப்பிரிவு கூடுதலாக சேர்க்கப்பட்டுள்ளது.

ஈ) பிற நிறுவனங்களின் மூலமாக அயல்நாடுகளில் வேலைவாய்ப்பு பெறுபவர்கள் சந்தித்து வரும்

இடர்பாடுகளைக் களையும் நோக்கில் அவர்களுடைய சான்றிதழ்களை சரிபார்க்கும் வசதி அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தால் சென்ற ஆண்டிலிருந்து வழங்கப்படுகிறது.

ஊ) இந்நிறுவனத்தின் வருவாயை பெருக்கிடவும் அயல்நாட்டு வேலைக்கு செல்பவர்களுக்கு உதவும் வகையிலும் இந்நிறுவனத்தால் 2016-17–ஆம் ஆண்டில் விமானம் மற்றும் ரயில் பயணச்சீட்டு சேவைகள் துவக்கப்பட்டுள்ளன.

## 6. மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்ககம்

**(**தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்டம்**)**

தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்டமானது, தொழிலாளர் அரசு ஈட்டுறுதி சட்டம், **1948–**ன் படியான அமைப்பு சார்ந்த துறைகளில் உள்ள தொழிலாளர்களின் சமூக காப்பீட்டினை தன்னகத்தே கொண்ட ஓர் ஒருங்கிணைந்த திட்டமாகும். இத்திட்டம் நோய்கள், மகப்பேறு மற்றும் தொழில்முறை நோய்கள் காரணமாக ஏற்படும் இயலாமை மற்றும் மரணம் போன்ற நிகழ்வுகளில் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் விதமாக வடிவமைக்கப்பட்டு காப்பீட்டாளர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினருக்கு மருத்துவ வசதிகளை அளிக்கிறது. பத்து மற்றும் அதற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் பணிபுரியும் தொழிற்சாலைகள் மற்றும் பிற நிறுவனங்களுக்கு தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்டம் பொருந்தும். இத்திட்டம் காப்பீட்டாளர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோருக்கு முழு இலவச மருத்துவ வசதியையும் காப்பீட்டாளருக்கு உழைக்க இயலாதநிலை அல்லது ஊதிய இழப்பு ஏற்படும்போது பண பயன்களையும் அளிக்கிறது.

## 6.1. திட்டத்தின் நிதி ஆதாரம்

தொழிலாளர்களின் பங்களிப்பாக ஒவ்வொரு மாதமும் அவர்களது ஊதியத்தில் நிர்ணயிக்கப்பட்டதாக வசூலிக்கப்படும் 1.75 சதவீதமும் வேலையளிப்போரின் பங்களிப்பான 4.75 சதவீதமும் சேர்ந்து பெறப்படும் பங்கு தொகையே இத்திட்டத்தின் பயன்களுக்கான நிதியாதாரமாகும். 2016–17 வரை, இத்திட்டம் செயல்படுத்த மாநில அரசு செலவழிக்கும் மொத்த செலவினத்தில் 7/8 பங்கினை தொழிலாளர் மாநில காப்புறுதி கழகம் திரும்ப வழங்கி வந்தது. ஆனால் தற்போது தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்டத்தை செயல்படுத்த "தமிழ்நாடு தொழிலாளர் மாநில ஈட்டுறுதி சங்கம்" அமைக்கப்பட்டு 01.04.2017 முதல் இத்திட்டத்திற்கான மொத்த செலவினத்தையும் தொழிலாளர் மாநில காப்புறுதி கழகம் திரும்ப வழங்க உள்ளது.

## 6.2. திட்டத்தில் சேர்வதற்கான தகுதிகள்


மாத ஊதியம் ரூ.21,000/– வரை பெறும் தொழிலாளர்கள் இத்திட்டத்தின் கீழ் இணைக்கப்படுவதற்கு தகுதியுடையவராகிறார்கள். மேலும் ரூ.25,000/– வரை மாத ஊதியம் பெறும் ஆட்டிசம், செரிபரல் பால்சி, மூளை வளர்ச்சி

குறைபாடுகள் மற்றும் பல்வகை குறைபாடுகளுடைய தொழிலாளர்களும் இத்திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள்.

## 6.3. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்ட நிர்வாக அமைப்பு

தமிழ்நாட்டில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்டத்தில் பதிவு செய்துள்ள காப்பீட்டாளர்கள் மற்றும் அவர்தம் குடும்ப உறுப்பினர்களுக்கு இவ்வியக்ககம் மூலம் மருத்துவ வசதிகள் அளிக்கப்படுகின்றன.

தமிழ்நாட்டில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்டத்தின்
திட்டமிடப்பட்ட நிர்வாக கட்டமைப்பு



## 6.4. பரவலாக உள்ள தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள் மற்றும் மருந்தகங்கள்

மாநிலத்தில் **10** தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள் உள்ளன:

- மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகளின் இயக்குநர் (தொ.அ.ஈ.தி) கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் ஏழு தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள்
- மருத்துவ கல்வி இயக்குநர் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படும் கோயம்புத்தூர் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவ கல்லூரி மருத்துவமனை
- தொழிலாளர் மாநில காப்புறுதி கழகத்தின் நேரடி கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் சென்னை (கே.கே.நகர்) மற்றும் திருநெல்வேலி ஆகிய இரண்டு தொழிலாளர் மாநில காப்புறுதி கழக மருத்துவமனைகள்

**216** தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்கள் உள்ளன:

- **209** நிலையான தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்கள்
- ஐந்து நடமாடும் மருந்தகங்கள்
- இரண்டு பயனீட்டாளர்கள் மருந்தகங்கள்

கூடுதலாக, காப்பீட்டு நபர்கள் மற்றும் அவர்தம் குடும்ப உறுப்பினர்களுக்கு தேவைப்படும் நேர்வுகளில் உயர் சிறப்பு சிகிச்சைகளும் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ள மருத்துவமனைகள் மூலமாக வழங்கப்படுகின்றன.

## 6.5. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்டத்தின் கீழ் இயங்கும் ஆயுஷ் (AYUSH) பிரிவுகள்

காப்பீட்டாளர்களுக்கு வழங்கப்படும் ஆங்கில முறை சிகிச்சை வசதிகளுடன் கூடுதலாக ஆயுர்வேதா, யோகா, யுனானி, சித்தா மற்றும் ஹோமியோபதி ஆகிய சிகிச்சை முறைகள் உள்ளடக்கிய ஒருங்கிணைந்த "ஆயுஷ்" (AYUSH) சிகிச்சை வசதியும் வழங்கப்படுகிறது.

- ஆயுர்வேத பிரிவுகள் எட்டு தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளில் இயங்குகின்றன. (அயனாவரம், கோயம்புத்தூர், மதுரை, சேலம், வேலூர், திருச்சி, ஓசூர் மற்றும் சிவகாசி)
- யோகாசன பிரிவுகள் எட்டு தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளில் இயங்குகின்றன. (அயனாவரம், கோயம்புத்தூர், மதுரை, சேலம், வேலூர், திருச்சி, ஓசூர் மற்றும் சிவகாசி)
- யுனானி பிரிவுகள் மூன்று தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளில் இயங்குகின்றன. (அயனாவரம், கோயம்புத்தூர் மற்றும் மதுரை)
- சித்தமருத்துவ பிரிவுகள் எட்டு தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளில் இயங்குகின்றன. (அயனாவரம், கோயம்புத்தூர், மதுரை, சேலம், வேலூர், திருச்சி, ஓசூர் மற்றும் சிவகாசி). கூடுதலாக சித்த மருத்துவப் பிரிவுகள் 20 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்களிலும் இயங்குகின்றன. (தாம்பரம், திருவொற்றியூர், திருபெரும்புதூர், தூத்துக்குடி,

இராஜபாளையம், கோவில்பட்டி, பொள்ளாச்சி, துடியலூர், பள்ளிப்பாளையம், கும்பகோணம், திருவல்லிக்கேணி, ஆவடி, கொரட்டூர், திண்டுக்கல், திருநகர், உடுமலைப்பேட்டை, காட்டூர்–I, திருப்பூர்–I, ஆம்பூர் மற்றும் இராணிப்பேட்டை)

- ஹோமியோபதி பிரிவுகள் மூன்று தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளில் இயங்குகின்றன. (அயனாவரம், கோயம்புத்தூர் மற்றும் மதுரை)

## 6.6. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்டத்தின் பயன்கள்

தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்டத்தின் கீழ் தொழிலாளர் மற்றும் வேலையளிப்பவரால் பங்களிப்பாக செலுத்தப்படும் நிதியானது, அவசர மருத்துவ தேவை மற்றும் பிற இடர்களின்போது காப்பீட்டாளரின் வருவாய் மற்றும் சேமிப்புகளில் கூடுதல் சுமை ஏற்படாவண்ணம் அவர்களுக்கு உதவுகின்றது. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்டம் கீழ்காணும் பல்வேறு சமூக பாதுகாப்பு பயன்களை காப்பீட்டாளர்களுக்கும் அவர்களைச் சார்ந்தோருக்கும் வழங்குகிறது.

### 6.6.1. மருத்துவ உதவி

தொழிலாளர் மாநில காப்புறுதி கழகத்தால் வழங்கப்படும் மிகப்பெரிய பயன்களில் ஒன்று மருத்துவ

நலனாகும். இது காப்பீட்டாளர் காப்புறுதி வசதியுள்ள நிறுவனத்தில் வேலையில் சேர்ந்த நாள் முதல் காப்பீட்டாளர் மற்றும் அவரது குடும்பத்தினருக்கு "நியாயமான மருத்துவ பராமரிப்பு" (ஆரம்ப கால புறநோயாளி சிகிச்சை, இரண்டாம் நிலை உள்நோயாளி சிகிச்சையிலிருந்து உயர் சிறப்பு சிகிச்சை வரை) காப்புறுதி வசதியுள்ள நிறுவனத்தில் வேலையில் இருக்கும்வரை வழங்கப்படுகிறது. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்கள் மூலம் ஆரம்பகால சிகிச்சையும், சிறப்பு சிகிச்சை மற்றும் உயர் சிறப்பு சிகிச்சை ஆகியவை பரவலாக அமைந்துள்ள தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள் மற்றும் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ள தனியார் மருத்துவமனைகள் வாயிலாக அளிக்கப்படுகின்றன.

### 6.6.2. பேறுகால உதவி (பணமாக)

பெண் காப்பீட்டு நபர்களுக்கு பேறுகாலத்தில் 26 வாரங்களுக்கும் கருச்சிதைவு காலத்தில் ஆறு வாரங்களுக்கும் 100 சதவிகித சம்பள விகிதத்தில் பேறுகால உதவி அளிக்கப்படுகிறது. இப்பயன் மகப்பேறு மற்றும் கருச்சிதைவு தொடர்பான நோய்களுக்கு கூடுதலாக 30 நாட்களுக்கான மருத்துவ அறிவுரையின் பேரில் நீட்டிக்கத்தக்கது.

காப்பீட்டு நபர் ஆறு மாத காலத்தில் 78 நாட்களுக்குண்டான சந்தா தொகையினை செலுத்தியிருப்பின் உடல்நலமின்மைக்கான உதவி, உடல் நலமின்மைக்கான நீட்டித்த உதவி மற்றும் உயர்த்தி வழங்கும் உடல் நலமின்மைக்கான உதவி ஆகியவற்றை பணப்பயனாக பெற தகுதியுடையவராகிறார்.

### 6.6.3 உடல் நலமின்மைக்கான உதவி

காப்பீட்டாளர் உடல் நலமின்றி பணிக்கு செல்ல இயலாத நிலை ஏற்படும்போது, அதிகாரமளிக்கப்பட்ட காப்பீட்டு மருத்துவ அலுவலரின் சான்றிதழின் பேரில் உடல் நலமின்மைக்கான உதவி, பணமாக வழங்கப்படுகிறது.

### 6.6.4. நீட்டித்த உடல் நலமின்மைக்கான உதவி

காப்பீட்டாளர்களுக்கு நீண்டகால சிகிச்சை தேவைப்படும் குறிப்பிட்ட 34 வகையான நோய்களுக்கு, மருத்துவரால் சான்றளிக்கப்படும் சிகிச்சை காலம் வரை நீட்டித்த உடல் நலமின்மைக்கான உதவியும் அதிகபட்சமாக இரண்டு வருடங்களுக்கு மருத்துவர் ஆலோசனையின் பேரில் விடுப்பும் வழங்கப்படுகிறது.

### 6.6.5. உயர்த்தி வழங்கப்படும் உடல் நலமின்மைக்கான உதவி

தகுதி வாய்ந்த வயதில் உள்ள காப்பீட்டாளர்களுக்கு வாசக்டமி / ட்யூபக்டமி போன்ற கருத்தடை அறுவை சிகிச்சைகள் செய்து கொள்ளும்போது, உயர்த்தி வழங்கும் உடல் நலமின்மைக்கான உதவி வழங்கப்படுகிறது.

### 6.6.6. இயலாமைக்கான உதவி

காப்பீட்டாளர்கள் பணிபுரியும் போது ஏற்படும் விபத்து மற்றும் தொழில்சார் நோய்களினால் ஏற்படும் உடல் நலக்குறைபாடுகளுக்கும் இயலாமைக்கான உதவி வழங்கப்படுகிறது.

**(i) தற்காலிக இயலாமைக்கான உதவி**

தற்காலிக இயலாமை ஏற்படும்போது காப்பீட்டாளருக்கு முதல் பயன் துய்க்கும் காலம் தொடங்குவதற்கு முன்பே தற்காலிக இயலாமை ஏற்பட்டால் ஊதியத்தில் 90 விழுக்காடும் பங்களிப்பு காலத்திற்குப் பின் வரும் பயன் துய்க்கும் காலத்தில் தற்காலிக இயலாமை ஏற்பட்டால் நிலையான நன்மை விகிதத்தில் 90 விழுக்காடும் அக்காப்பீட்டாளர் ஈட்டுறுதி பெறத்தக்க வேலையில் சேர்ந்த நாள் முதலே அதிகாரமளிக்கப்பட்ட காப்பீட்டு மருத்துவ அலுவலரின்

சான்றிதழின்பேரில் அவருடைய தற்காலிக இயலாமை தொடரும் வரை பணமாக வழங்கப்படுகிறது.

**(ii) நிரந்தர இயலாமைக்கான உதவி**

பணியின்போது நிரந்தர இயலாமை ஏற்படின் காப்பீட்டாளருக்கு நிரந்தர இயலாமைக்கான உதவி அவர்தம் வாழ்நாள் முழுவதும் பணமாக வழங்கப்படுகிறது. தொழிலாளர், ஈட்டுறுதி பெறத்தக்க வேலையில் சேர்ந்த நாள் முதலே இந்த உதவி பெற தகுதியுடையவராகிறார்.

**6.6.7. சார்ந்துள்ளோருக்கான உதவி**

சார்ந்துள்ளோருக்கான உதவி, காப்பீட்டாளர் வேலை செய்யும் போது ஏற்படும் விபத்தினால் அல்லது அவர் செய்யும் தொழிலினால் ஏற்படும் நோயினால் காப்பீட்டாளர் இறந்துவிட்டால், அவரின் சம்பளத்தில் **90** சதவீதம் அவரைச் சார்ந்தவர்களுக்கு நிலையான விகிதத்தில் பகிர்ந்தளிக்கப்படுகிறது.

**6.6.8. இறுதி சடங்கிற்குரிய உதவி**

காப்பீட்டாளர் இறந்துவிட்டால், அவர் ஈட்டுறுதி பெறத்தக்க வேலையில் சேர்ந்த நாள் முதலே அவரின் இறுதி

சடங்கிற்கு ரூ.10,000/– அவரது குடும்பத்தினருக்கு பணமாக வழங்கப்படுகிறது.

### 6.6.9. வேலையின்மைக்கான உதவி

காப்பீட்டாளர், தொழிற்சாலை மூடப்படுவதாலோ, ஆட்குறைப்பு செய்யப்படுவதாலோ, பணியில் இல்லாத நேரத்தில் நிரந்தரமாக இயலாமை ஏற்படுவதாலோ அல்லது இதர எதிர்பாராத காரணங்களால் சுயவிருப்பின்றி வேலை இழக்க நேரிட்டால், குறைந்தபட்சம் மூன்று வருடம் அந்த தொழிற்சாலையில் தொடர்ந்து வேலை பார்த்திருப்பின், அவர் கடைசியாக வாங்கிய சம்பளத்தின் 50 சதவிகிதத்தினை "ராஜீவ் காந்தி சிரமிக் கல்யாண் யோஜனா" திட்டத்தின் கீழ் அதிகபட்சம் பனிரெண்டு மாதங்களுக்கு பெற தகுதியுடைவராகிறார்.

### 6.6.10. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்டத்தின் இதர உதவிகள்

1. வயது மூப்பு காரணமாக பணி ஒய்வு பெற்ற பின்னர் குறைந்த பட்ச தொகையாக வருடத்திற்கு ரூ.120/– பெற்றுக்கொண்டு காப்பீட்டாளருக்கும் அவரது வாழ்க்கைத் துணைக்கும் முதியோர் மருத்துவ வசதி அளிக்கப்படுகிறது.

2. ஊன்றுகோல்கள், சக்கர நாற்காலிகள், பல்செட்கள், மூக்கு கண்ணாடிகள் போன்ற உதவி சாதனங்கள்

இத்திட்டத்தின் கீழ் இலவசமாக வழங்கப்படுகின்றன.

3. நோய் தடுப்பு சேவைகளான தடுப்பூசிகள், எச்ஐவி / எயிட்ஸ் நோய் கண்டுபிடிப்பு மற்றும் சிகிச்சை அளித்தல் போன்ற வசதிகளும் வழங்கப்படுகின்றன.

4. குடும்பநலம் மற்றும் காசநோய் கட்டுப்பாடு ஆகியவற்றுக்கான தேசிய திட்டங்களும் செயல்படுத்தப்படுகின்றன.
5. காப்பீட்டாளரின் மனைவி அல்லது பெண் காப்பீட்டாளரது பிரசவம் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவ வசதிகள் இல்லாத இடத்தில் நடைபெற நேர்ந்தால் மருத்துவ படியாக ரூ.5,000/– அளிக்கப்படுகிறது.

## 6.7. மருத்துவமனை மேம்பாட்டுக் குழு

தொழிலாளர் காப்புறுதி கழகத்திற்கு சொந்தமான கட்டடங்களில் சிறிய மற்றும் பெரிய புனரமைப்பு பணிகளை மேற்கொள்ளவும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள் மற்றும் மருந்தகங்களுக்கு மருத்துவ உபகரணங்கள் கொள்முதல் செய்யவும் பழுது பார்க்கவும் அனைத்து தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளிலும் மருத்துவமனை மேம்பாட்டுக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இம்மருத்துவமனை

மேம்பாட்டுக் குழு இரண்டு மாதத்திற்கு ஒரு முறை கூடுகிறது. மேலும் தொழிலாளர் மாநில காப்புறுதி கழக மருத்துவ ஆணையர் மருத்துவமனை மேம்பாட்டு நிதியை நேரடியாக வழங்குகிறார்.

### 6.8. காப்பீட்டு பயனாளிகள் தனியார் மருத்துவமனைகளில் செய்துகொண்ட மருத்துவ செலவினை திரும்ப வழங்கல்

**(1) செறிவுத்திட்டம் (ஒப்பந்தம் செய்து கொண்ட மருத்துவமனைகள்)**

காப்பீட்டாளர்கள் மற்றும் அவர்தம் குடும்ப உறுப்பினர்களுக்கு சிறப்பு மற்றும் உயர்சிறப்பு சிகிச்சை எடுத்துக்கொள்வதற்கு வசதியாக 148 தனியார் மருத்துவமனைகள் செறிவு திட்டத்தின்கீழ் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளன. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள் மற்றும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்களின் பரிந்துரைகளின் பேரில் காப்பீட்டு நபர்கள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் சிகிச்சைக்காக தனியார் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்படுகிறார்கள். அவர்களுக்கு கட்டணமில்லா சிகிச்சை அளிக்கப்படுவதோடு, செறிவு திட்டத்தின்கீழ் உள்ள ஒப்பந்தப்படி மருத்துவமனை செலவின பட்டியல்கள் நேரிடையாக நேர் செய்யப்படுகின்றன.

2016–17–ஆம் நிதியாண்டில், ரூ.19.26 கோடி மதிப்பிலான பட்டியல்கள் தனியார் மருத்துவமனைகளுக்கு சிறப்பு மற்றும் அதிசிறப்பு சிகிச்சைகளுக்காக 31.03.2017 வரை ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளன.

**(2) சுழற்சி நிதி**

காப்பீட்டாளர்கள் மற்றும் அவர்தம் குடும்ப உறுப்பினர்கள் மருத்துவ பரிந்துரைகளின்றி தனியார் மருத்துவமனைகளில் எடுத்துக்கொள்ளும் சிறப்பு மற்றும் அதிசிறப்பு மருத்துவ சிகிச்சைக்காக செலவிடப்பட்ட தொகையை தாமதமில்லாமல் திரும்ப பெறுவதற்காக 'சுழற்சி நிதி' 2004–ல் உருவாக்கப்பட்டது.

2016–17–ஆம் நிதியாண்டில் 5,885 காப்பீட்டு நபர்களுடைய ரூ.16.99 கோடி மதிப்பிலான பட்டியல்கள் 31.03.2017 வரை ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளன. '

**6.9. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்ட விரிவாக்கம்**

**(i) பல்வேறு பகுதிகளில் புதிய தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்களை துவக்குதல்**

2016–17–ஆம் வருடத்தில் 72,264 தொழிலாளர்கள் பயன் பெறும் வகையில் பதினோரு புதிய தொழிலாளர் அரசு

ஈட்டுறுதி மருந்தகங்கள் (அத்திப்பட்டு, துரைசாமிபுரம், கல்பாக்கம், குலசேகரம், குளத்தூர், மகாபலிபுரம், மணச்சநல்லூர், பண்ருட்டி, திருமுடிவாக்கம், திருப்பூர்–III மற்றும் ஊத்துக்குளி) திறக்க அரசாணைகள் வெளியிடப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

**(ii) ஏற்கனவே இயங்கிக் கொண்டிருக்கும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்களுடன் புதிய பகுதிகளை இணைத்தல்**

2016–17–ஆம் வருடத்தில் 8,862 தொழிலாளர்கள் பயன் பெறும் வகையில் 27 புதிய பகுதிகளை ஏற்கனவே இயங்கிக்கொண்டிருக்கும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்களுடன் இணைக்க அரசாணை வெளியிடப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

**டாக்டர் நிலோபர் கபில்**
**தொழிலாளர் நலத்துறை அமைச்சர்**